விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 ஆனி 01 சனிக்கிழமை (15.06.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 178

Registered as a Newspaper in Sri Lanka

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# பதவியை துறந்தேனும்

# '13' ஐப் பாதுகாப்பேன்!



## அமைச்சர் ராஜித உறுதி

**13ஆவது திருத்தத்தில் கைவைப்பதற்கு நாட்டில் எவருக்கும் நாம் இடமளியோம். அதனைப் பாதுகாப்பதற்காக நான் எனது பதவியையும் இழக்கத் தயார் என மீன்பிடி மற்றும் நீரியல் துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.**

தகவல் திணைக்களத்தில் நேற்று வெள்ளிக கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

13 ஆவது திருத்தம் தொடர்பில் நான் ஆரம்பத்தில் இருந்து எனது கொள்கையில் மாறவில்லை. அதற்கு எதிராக செயற்பட்டுவரும் இனவாதிகளின் செயற்பாட்டுக்கு நான் எதிர்ப்புத் (20ஆம் பக்கம் பார்க்க)

## டுவிட்டரில் பதிலளிக்கிறார் லலித் வீரதுங்க!



(கொழும்பு)

ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவிடம் டுவிட்டர் சமூக வலைத்தளத்தினூடாக கேள்விகள் கேட்டு அதற்கான பதில்களை அவரிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதற்கமைய,எதிர்வரும் 19-ம திகதி புதன்கிழமை பிற்பகல் 2.30 மணி முதல் 4 மணி வரை ஜனாதிபதியின் செயலாளர் டுவிட்டர் சமூக வலையமைப் பினூடாக பொதுமக்களின் கேள்விகளுக்கு பதிலளிப்பார்.

(19ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி இன்று கிளிநொச்சிக்கு

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இன்று கிளிநொச்சிக்கு விஜயம் செய்யவுள்ளார்.இதன்போது இரணைமடுவில் இலங்கை விமானப்படையினரால் புனரமைக்கப்பட்ட விமான ஓடுதளம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் இன்று (20ஆம் பக்கம் பார்க்க)

## ராஜிதவுக்கு இருக்கின்ற முதுகெலும்பு ஏனைய அரசியல்வாதிகளுக்கு இல்லை

### துணிச்சலை பாராட்டுகிறார் மனோ

13ம் திருத்தத்தில் கை வைப்பதற்கு நாட்டில் எவருக்கும் நாம் இடமளியோம். அதனைப் பாதுகாக்க நான் எனது பதவியையும் இழக்க தயார் என மீன்பிடி மற்றும் நீரியல் துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன கூறியுள்ளார்.

எனது மிக நீண்டகால நண்பர் ராஜித சேனாரத்னவுக்கு இருக்கின்ற இந்த முதுகெலும்பு அரசாங்கத்தில் இன்று இருக்கின்ற எந்த ஒரு தமிழ் அரசியல்வாதிக்கும் இல்லை என்பது நிதர்சனமிக்க கவலை தரும் உண்மையாகும் என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

மீன்பிடி மற்றும் நீரியல்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன, 13-ம திருத்தம் தொடர்பில் நேற்று தெரிவித்துள்ள பகிரங்க நிலைப்பாடு தொடர்பாக மனோ கணேசன் மேலும் கூறியதாவது,

13-ம் திருத்தத்தின் மீது கை வைக்க விட மாட்டேன், அதற்காக எனது பதவியையும் இழக்க தயார் என்று ஊடகவியலாளரிடம் ராஜித கருத்து தெரிவித்துள்ளார் என்று தெரிந்துகொண்ட உடனேயே, ராஜிதவை (20ஆம் பக்கம் பார்க்க)

## பிரதி அமைச்சர் நிர்மல் நேற்று யாழ். விஜயம்

(யாழ்ப்பாணம்)

பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் பிரதி அமைச்சர் நிர்மல் கொற்றாவல நேற்று பிற்பகல் 3 மணியளவில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டதோடு யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட வீதி அபிவிருத்திப் பணிகளையும் பார்வையிட்டார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இன்று கிளிநொச்சி விஜயம் மேற்கொண்டு புனரமைக்கப்பட்ட ஏ-9 வீதியினை

(19ஆம் பக்கம் பார்க்க)

## 3 மாகாணங்களுக்கும் ஒரே தினத்தில் தேர்தல்!

மூன்று மாகாண் சபைகளுக்கும் ஒரே தினத்தில் தேர்தல் நடத்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு தீர்மானித்துள்ளதாக தெரியவருகிறது.

வட, வட மத்திய மற்றும் மத்திய மாகாண சபைத் தேர்தல்களை ஒரே தினத்தில் நடத்த வேண்டு மென மத்திய செயற்குழு தீர்மானித் துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ (19ஆம் பக்கம் பார்க்க)

## ஜெயசூரிய ஜெனரலாக பதவியுயர்வு புதிய தளபதியாக தயா ரட்நாயக்க!



இலங்கை இராணுவத்தின் புதிய தளபதியாக மேஜர் ஜெனரல் தயா ரத்நாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

எதிர்வரும் ஓகஸ்ட் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இவரது நியமனம் இடம்பெற்றுள்ளது என பாதுகாப்பு அமைச்சின் தகவல்கள தெரிவிக்கின்றன.

இதேவேளை, மேஜர் ஜெனரல் பதவி நிலை வகிக்கும் தயா ரத்நாயக்க, லெப்டினன்ட் ஜெனரலாக பதவியுயர்த்தப்பட்டுள்ளார்

தற்போதைய இராணுவ தளபதி ஜெனரல் ஜகத் (19ஆம் பக்கம் பார்க்க)

அண்ணா உற்பத்திப் பொருட்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். சகலபொருட்களையும் குறைவான விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்
அண்ணா சுப்பர் இன்
கே.கே.எஸ்.வீதி,
இணுவில்.
தொ.பே: 021 321 8143
(சி-3621)




பொருத்தமான தொழில் தகைமை இல்லாமல் வெளிநாடு சென்று பணம் சம்பாதிக்க முடியாது!

இதோ உங்களுக்காக நாம் தரும்
UK, Australia, Canada, Malaysia, Singapore என விரும்பிய நாட்டுக்குச் சென்று பணம் சம்பாதிப்பதற்கான
வருமானத்துடன் கூடிய தொழிற்பயிற்சி & தொழில்வாய்ப்பு
[உணவு, தங்குமிட வசதி இலவசம்]
25% Discount on SPOT ADMISSION
. பயிற்சிக் காலத்தில் 50,000 ரூபா வருமானம்
. பயிற்சி நிறைவில் UK, Australia, Malaysia சர்வதேச தரச் சான்றிதழ்கள்
. பயிற்சிநெறியைப் பூர்த்திசெய்தபின் Work Permit உடன் வேலைவாய்ப்பு
. UK, Australia, Canada என விரும்பிய நாட்டில் சட்டபூர்வமாக வாழும் வாய்ப்பு



City & Guilds
aets
UEL University of East London
3 in 1

IELTS, வங்கிப்பண வைப்பு
தூதரக நேர்முகத் தேர்வு } அவசியமில்லை
யாழ்ப்பாணத்திலேயே விசாவைப் பெற்று உடனே பயணிக்கலாம்!

வெளிநாட்டுப் பல்கலைக்கழகப் பிரதிநிதியை நேரில் சந்தித்து அனுமதி பெற
ஜூன் 15 சனி ▸▸ யாழ்ப்பாணம் சிகரம் விரிவுரை மண்டபம்
ஜூன் 16 ஞாயிறு ▸▸ வவுனியா நெல்லிஸ்ரார் ஹோட்டல்
ஜூன் 17 திங்கள் ▸▸ கிளிநொச்சி சோலைவனம்
ஜூன் 18 செவ்வாய் ▸▸ மீண்டும் யாழ்ப்பாணம் சிகரம் விரிவுரை மண்டபம்

பிரவேசம் இலவசம் முற்பதிவுகளுக்கு: 077 36 16 798
இதுவரை 3 அணிகளாக 30க்கு மேற்பட்ட மாணவர்கள் பயணமாகியுள்ளனர்

வெளிநாடு செல்லும் வசதியில்லாத மாணவர்களுக்கு உள்நாட்டு தொழில்வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்கான சிகரம் தொழில் வழிகாட்டல் ஆலோசனை முற்றிலும் இலவசம்!
(சி-3639)

MEDIA & EDUCATION சிகரம் கல்வி - தொழில் வழிகாட்டி
153, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(764 பஸ் வழி: DAMRO காட்சியறைக்கு முன்னால்)
தொ.பே.: 021 222 00 11 நேரடி: 0773 616 798
மி.அ.:edusikaram@gmail.com இணையம்:www.sikaram.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலி நிறுவனங்களை அவதானியுங்கள்

## ஜேர்மனியிடம் பீரிஸ் தெரிவிப்பு

ஐரோப்பிய ஒன்றியத்தின் தடையை மீறும் வகையில் செயற்படும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முகப்பு நிறுவனங்களை கூர்ந்து அவதானிக்கும்படி ஜேர்மனியிடம் இலங்கை அரசாங்கம் வலியுறுத்தியுள்ளது.

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ், ஜேர்மனியின் வெளிவிவகார அமைச்சர் கலாநிதி கைடோ வெஸ்ரவெலுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் போது புலிகள் இயக்கத்தின் பல முகப்பு நிறுவனங்கள் சமுதாய நிறுவனங்கள் என்ற போர்வையில் இயங்குவதாக தெரிவித்துள்ளார். இந்தக் குழுக்கள் பிரசாரத்துக்காகவும் நிதி சேகரிப்பதற்காகவும் பல பாடசாலைகளை நடத்துவதாக தமக்கு தகவல் கிடைத்துள்ளதென அமைச்சர் இதன்போது குறிப்பிட்டார்.

சுற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்துவது பற்றி விளக்கிய பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், இலங்கைக்கு தான் விரும்பிய வகையில் தேவையான காலமெடுத்து அதனை செயற்படுத்தும் உரிமை உள்ளதென கூறினார்.

பெருமளவிலானோர் கலந்து கொண்ட வெளிநாட்டு கொள்கைக்கான ஜேர்மன் சங்கத்தின் கூட்டத்தில் பேசிய அமைச்சர் பீரிஸ், இலங்கை தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில் காணப்பட்ட புதிய போக்குகள் பற்றி பல பிரச்சினைகளை பிரஸ்தாபித்தார். (செ-11)

கோண்டாவில் கிழக்கு
ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையமும்
குமரன் விளையாட்டுக் கழகமும் இணைந்து நடாத்தும்

## குட்டிச்சுட்டி முன்பள்ளி விளையாட்டுவிழா-2013

தலைவர் : ம.சதீஸ்குமார்
காலம் : 16.06.2013 ஞாயிற்றுக்கிழமை பி.ப.01.30 மணி
இடம் : நிலைய முன்றல்
(இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

**பிரதம விருந்தினர்**
உயர்திரு.சில்வேஸ்திரி அலன்றின் (S.A. உதயன்)
கௌரவ பாராளுமன்ற உறுப்பினர், யாழ்ப்பாணம்)

**சிறப்பு விருந்தினர்கள்**
திரு.அ.இரவீந்திரதாசன் J.P.
(நல்லூர் பிரதேச ஈ.பி.டி.பி. அமைப்பாளர், நல்லூர் பிரதேசசபை எதிர்க்கட்சி தலைவர்)
திரு.சி.மாணிக்கராஜா (கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்)
திரு.சண்.வாமதேவன்
(அதிபர் யா/கோண்டாவில் இராமகிருஷ்ணா மகா வித்தியாலயம்)

**கௌரவ விருந்தினர்கள்**
திரு.சி.பன்னீர்ச்செல்வம் (கிராமசேவகர் J/120)
திரு.செ.சபாரத்தினம் – லண்டன்
(முன்னாள் தலைவர் ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையமும் குமரன் விளையாட்டுக் கழகமும்)

ஆண்களுக்கான மரதன் ஓட்டம் காலை 6.00 மணிக்கு நிலைய முன்றலில் ஆரம்பமாகும். விரும்பிய யாவரும் பங்குபற்றலாம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். -நிர்வாகத்தினர்

(சி-3638)

அனுசரணை: Shakthy Hotline: 0779120842 microtec Computer wholesaler
Branded கணனிகள், மடிக் கணனிகளை (Labtop) 13000 ரூபா முதல் 35000 வரையில் பெற்றுக்கொள்ளலாம்.
No.170, Palaly Road, Vigneswara Building, Kondavil East, Jaffna.

## சூட்டுக் காயங்களுடன் சிப்பாய் வைத்தியசாலையில்

(யாழ்ப்பாணம்)

சூட்டுக் காயத்துடன் கடற்படைச் சிப்பாய் ஒருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

காங்கேசன்துறை கடற்படை முகாமில் நேற்று முன்தினம் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் குறித்த கடற்படைச் சிப்பாய் காயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் குருநாகலைச் சேர்ந்த ஆர்.பி.ஜயந்த (வயது-26) என்ற கடற்படைச் சிப்பாயே சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (செ-6)

## மாணவனைக் காணவில்லை

(யாழ்ப்பாணம்)

மாணவன் ஒருவரினை காணவில்லையென பொலிஸ் நிலையத்தில் மாணவனது உறவினரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நல்லூர் பண்டாரிக் குளத்தினைச் சேர்ந்த சுரேஸ் பவிதாஸ்(வயது 17) என்ற மாணவனைக் காணவில்லை என கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் காலை முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 13-ம் திகதியன்று வீட்டிலிருந்து சென்றவர் நேற்று முன்தினம் காலை வரை வீட்டிற்கு வரவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

தற்போது மாணவனை தேடி அறியும் முயற்சியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர் என யாழ்.மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.சி.எம்.எம் ஜெப்றி தெரிவித்தார். (செ-4)

## வெளிநாட்டு ஆசை காட்டி வங்கி ஊழியர் பண மோசடி

(யாழ்ப்பாணம்)

கனடா நாட்டிற்கு அனுப்புவதாகக் கூறி 46 இலட்சத்து 85 ஆயிரத்து 500 ரூபாயை வாங்கிய முன்னாள் வங்கி ஊழியர் தலைமறைவாகியுள்ளார்.

உரும்பிராயைச் சேர்ந்த வங்கி ஊழியர் ஒருவர், நபர் ஒருவரை கனடாவுக்கு அனுப்புவதாகக் கூறி மேற்படி தொகைப்பணத்தை வாங்கியுள்ளார்.

பல இலட்சம் ரூபாய் பணத்தினை வாங்கிக்கொண்டு ஊழியர் தலைமறைவாகி உள்ள நிலையில் பணத்தை வழங்கியவர் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

மேலும் யாழ்ப்பாணத்தில் 2 இலட்சம் ரூபாய் பெறுமதியான காசோலை மோசடியொன்றும் கடந்த வாரப்பகுதியில் இடம் பெற்றுள்ளது.

இவ் காசோலைமோசடி தொடர்பாக யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (அ-4)

## ஆனந்தசங்கரிக்கு அகவை எண்பது

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான வி.ஆனந்த சங்கரி அவர்கள் இன்றைய தினம் அகவை எண்பதை எய்துகின்றார்.

இதனை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அமுத விழா நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியில் அமைந்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி தலைமைச் செயலகத்தில் இடம் பெறவுள்ளது. (செ-11)

## 80 ஆவது அகவை காணும் ஆனந்தசங்கரி ஐயாவுக்கு வாழ்த்துக்கள்! - 15.06.2013



அமுத விழா காணும் தமிழ்
தலைவனுக்கு
அவர்தனை வாழ்த்த வேண்டும்
நாம்- ஏன்?
தமிழ் தந்தை செல்வாவின் பாதையில்
நடப்பவர்
தனி மாவட்டம் தந்தவர்
கிளிநொச்சிக்கு.

ஆயிரத்து தொழாயிரத்து அறுபதுகளில் – பூநகரிக்கு
காலடி வைத்த அரசியல் வேட்பாளன்- அடுத்து
பூநகரி மகா வித்தியாலய ஆசானாய்
குடியியல் கற்பித்தலில் கோமகனாய்
மாவட்ட நாடகப்போட்டியில் முதலிடம்- நமக்கு
யூலியஷீஷரால் பூநகரியை அழவைத்த சீமான்.

பாராளுமன்ற தேர்தல் களத்தில் பேச்சுகளில்
உன்னத உச்ச செயற்பாட்டாளர்- நாம்
ஆட்சி செய்யும் அரசர்கள்......எப்படி?
ஆசான் பாசறையில் வளர்ந்தவராதலால்
இந்த நாட்டில் என்ன நடக்கிறது?
அரச யாப்புக்கள் அடிக்கடி மாற்றம்- தமிழர்
வாழ்வில் நிலமற்ற திராணியற்ற உரிமையற்ற
நிர்க்கதியாளர்களாய்
வாழ்கின்ற வாழ்வு ஓர் வாழ்வா?- இல்லை
மூத்த தமிழ் தலைவன்
முன்னணி அரசியல் சாணக்கியன்
தமிழர் பிரச்சினைக்கு உரிய தீர்வு
தமிழர் விடுதலைக் கூட்டணியால் காண்பாய்
கொடுத்திடுவோம் கரம் எங்கள் தலைவனுக்கு
காத்திடுவோம் மறத் தமிழர் உரிமைதனை
உழைத்திடுவீர் உங்கள் மதியால்
விடியல் இங்கே உன் கரத்தில்
வாழ்க தமிழ் பெரும் தலைவா!

வாழ்க தமிழ்! வாழ்க தமிழ்!! வாழ்க தமிழ்!!!
வாழ்க தமிழினம்! வாழ்க தமிழினம்!! வாழ்க வீரத் தமிழினம்!!!
சுபம்.

தவிசாளரும் உறுப்பினர்களும்,
பிரதேச சபை,
பூநகரி.

(சி-3643)

## வைத்திய சேவை

- On Call Doctor சேவை
- வீடுகளுக்கு வந்து நோயாளிகளை பார்வையிடும்சேவை Home Visit
- உடற்பருமன் குறைத்தல் /கூட்டுத்தல் தொடர்பான சிகிச்சைகள்
- முடியுதிர்தலுக்கான சிகிச்சைகள்
- முகப்பருக்களுக்கான சிகிச்சைகள்

} பிரதி சனிக்கிழமைகளில்

மேலதிக விபரங்களுக்கு : குளோபல் கிளினிக்
இல.769, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 0773179062

(3005)







## கண்ணீர் அஞ்சலி



### கந்தன் செல்லத்துரை

பிறப்பு 13.04.1927 இறப்பு 14.06.2013

வலிகாமம் கிழக்கு பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் பணியாற்றும் செ.தவரட்ணம் அவர்களின் அன்புத்தந்தை

**கந்தன் செல்லத்துரை**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல பரம்பொருளை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



ஊழியர் நலன்புரிச்சங்கம்
வலி.கிழக்கு பிரதேச சபை
புத்தூர்.

(3043)

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு
தொ.பே. : 021 321 0815, 021 567 1540
E-mail : valampurii@yahoo.com, valampurijaffna@gmail.com

“துளிர்கள்”

## தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் அறிவித்தல்

**உள ஆற்றுப்படுத்தல் (COUNSELING)**
**சான்றிதழ் கற்கை நெறி**

- பிரிவு : 11
- கற்கைகாலம் : 06 மாதங்கள்
- விரிவுரைக்ள் : சனி, ஞாயிறு, போயாதினம்
- தகைமை : GCE O/L மற்றும் சேவை மனப்பான்மை.
- கட்டணம் : இலவசம்

- ஆர்வமுள்ள இருபாலாரும் 30.06.2013 முன்பாக உங்கள் தொடர்பாடல் இலக்கத்துடன் சுய விபரங்களை அனுப்பி வைக்கலாம்.

தன்னைத்தான் அறிந்து கொண்டு, பிறரைப் புரிந்து கொள்ளவும். ஆளுமை மிக்கவர்களாய் சவால்களைச் சந்திக்கவும் இது நல்லதோர் வாய்ப்பு. வயது உங்களுக்கோர் தடையல்ல.

இல. 30, கம்பஸ் லேன், திருநெல்வேலி. (C-3642) பணிப்பாளர் துளிர்கள் நிறுவனம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## நன்றி

ஒரு ஊரிலே குரு இருந்தார். அவர் ஒருநாள் இரவு ஒரு முக்கியமான புத்தகத்தைக் கையிலே வைத்து படித்துக் கொண்டிருந்தார்.

அவர் படித்துக் கொண்டிருந்தது ஒரு ஞானநூல். அதிலே ஆழ்ந்து போய் இருந்தார் அந்தக் குரு.

அந்த நேரம் ஒரு திருடன் கையிலே கத்தியுடன் மெதுவாக உள்ளே நுழைந்தான். அந்தக் குருவின் அருகில் மெதுவாகப் போய் மிரட்டினான்.

''சத்தம் போடாதே! மரியாதையாக உன்னிடமுள்ள பணத்தைக் கொடு... இல்லையென்றால் கொன்று விடுவேன்... பணத்தைக் கொடுக்கிறாயா... இல்லையேல் ஒரு குத்தாக குத்தட்டுமா...?" என்று மிரட்டினான்.

அந்தப் பெரியவர் நிமிர்ந்து பார்த்தார்.

"இதோ பாரப்பா... என்னைத் தொந்தரவு செய்யாதே! கொலை அச்சுறுத்தல் விடுக்காதே! அதோ பார்... அந்த மேசை மேலேதான் பணம் உள்ளது. எடுத்துக் கொள்" என்று கூறிவிட்டு மறுபடியும் படிக்க ஆரம்பித்தார்.

திருடனும் மேசையை நோக்கி நகர்ந்தான்.

இவ்வேளை பெரியவர் தலை நிமிராமல் புத்தகத்தை பார்த்துக் கொண்டு சொன்னார்; ''எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு போக வேண்டாம். சிறிதளவு மிச்சம் இருக்கட்டும்... நாளைக்கு வரி கட்ட வேண்டியிருக்கிறது'' என்றார்.

இவருடைய நிதானம், பதற்றமின்மை, அமைதி இவற்றையெல்லாம் பார்த்த திருடன் அசந்து போனான்.

இருந்தாலும் அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல் அவர் கூறியவாறே சிறிதளவு பணத்தை வைத்து விட்டு மிகுதியாக இருந்த பணத்தை எடுத்துக் கொண்டு வாசலைத் தாண்டும்போது அந்தப் பெரியவர் சொன்னார்;

"எதை யார் கொடுத்தாலும் நன்றி சொல்ல வேண்டும்... அதுதான் நாகரிகம்?" என்றார்.

திருடன் திகைப்புடன் திரும்பிப் பார்த்தான். ''நன்றி'' என்று சொல்லிவிட்டு அவன் தனது பயணத்தைத் தொடர்ந்தான்.

நாட்கள் சென்றன. அந்தத் திருடன் ஒருநாள் பொலிஸாரிடம் மாட்டிக் கொண்டான். பொலிஸார் அவனை விசாரணைக்குட்படுத்தினர். இதன்போது பெரியவர் ஒருவரின் வீட்டிலே திருடியதை அவன் ஒத்துக் கொண்டான்.

அந்தப் பெரியவரை சாட்சி சொல்ல பொலிஸார் அழைத்தனர். அதற்கு அவர் சொன்னார்; "என்னைப் பொறுத்தவரைக்கும் இவன் திருடன் இல்லை; அவனுக்கு ஏதோ பணக்கஷ்டம் ஏற்பட்டது. அதனாலே அவன் என்னிடம் வந்தான்; நான் கொடுத்தேன்– ''நன்றி'' கூறி விட்டு போனான்... என்னப்பா "நன்றி" கூறினீயா இல்லையா? என்றார்.

''ஆமாம் சுவாமி... சொன்னேன்'' என்றான் திருடன் ஆச்சரியத்துடன்...

வேறு குற்றத்திற்காக அவன் சிறைக்குப் போனான்; சிறிது நாட்கள் சென்றபின் வெளியிலே வந்தான்.

வந்தபின் நேராக அந்தப் பெரியவரிடம் சென்றான்; ''குருவே என்னை சீடனாக ஏற்றுக் கொள்ளுங்கள்'' என்றான்.

அதன்பின்னர் அவன் பெரியவரின் சீடனானான்.

அந்தக் காலத்திலே இப்படி நல்லவர்களுடைய நடவடிக்கைகளே கெட்டவர்களை திருத்தியது. இந்தக் காலத்திலே அப்படியெல்லாம் நடக்குமா?

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# விஸ்வ இந்துபரிஷத் அமைப்பினரால் ஜனாதிபதிக்கு மகஜர் அனுப்பிவைப்பு

(யாழ்ப்பாணம்)

இந்து மதத்தை இல்லாதொழிக்கும் நோக்கில் தொடர்ந்து இடம்பெற்று வரும் இந்து ஆலயங்கள் மீதான தாக்குதல் சம்பவங்களைக் கண்டித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு இலங்கை விஸ்வ இந்து பரிஷத் அமைப்பினால் மகஜர் ஒன்று நேற்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பில் அண்மையில் 4 இந்து ஆலயங்கள் மீது இனந்தெரியாத நபர்களினால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதோடு அங்கிருந்த பெறுமதியான தங்க ஆபரணங்கள் உள்ளிட்ட பொருட்களும் சூறையாடப்பட்டிருந்தன.

இந்தச் சம்பவத்தையடுத்து சர்வதேச இந்து குருமார்கள் ஒன்றியம் உள்ளிட்ட இந்துமதம் சார்ந்த அமைப்புக்கள் கண்டங்களை வெளியிட்டு வருகின்றன.

இதன்தொடர்ச்சியாக இலங்கை விஸ்வ இந்து பரிஷத் என்ற அமைப்பினரால் நேற்று யாழ்.மாவட்ட செயலகம் ஊடாக ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டதோடு இந்து ஆலயங்கள் மீதான தாக்குதலைத் தடுத்து நிறுத்துமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

யாழ்.நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்பாக இருந்து பேரணியாகச் சென்று யாழ். மாவட்ட செயலகத்தில் வைத்து அரச அதிபரிடம் மகஜரைக்கையளிப்பதென அந்த அமைப்பினர் முன்னர் தீர்மானித்திருந்த போதும் பொலிஸாரினால் பேரணிக்கான அனுமதி மறுக்கப்பட்டதனால் பேரணி கைவிடப்பட்டிருந்தது. இருப்பினும் திட்டமிட்டபடி இலங்கை விஸ்வ இந்து பரிஷத் அமைப்பின் யாழ். மாவட்ட அமைப்பின் கந்த சத்தியதாஸன் உள்ளிட்ட அந்த அமைப்பினரால் யாழ்.மாவட்ட நிர்வாக உத்தியோகத்தர் கே.கருணாகரனிடம் மகஜர் கையளிக்கப்பட்டது. (அ-6)

# வீதிகள் மூடப்பட்டிருக்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ். பருத்தித்துறை வீதி அகலிப்பு பணிகளுக்காக யாழ். வீதி அபிவிருத்தி அதிகார சபையினரால் சில வீடுகள் மூடப்படவிருப்பதாக இவ் அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் வி. சுதாகரன் அறிவித்துள்ளார்.

இதற்கமைவாக யாழ். கல்வியங்காடு சந்தைக்கு முன் பகுதி, யாழ். பருத்தித்துறை வீதியின் பகுதி ஆகியவை நாளை ஞாயிற்றுக் கிழமை தொடக்கம் எதிர்வரும் ஜூலை மாதம் 15 ஆம் திகதி வரை மூடப்பட்டிருக்குமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே பார ஊர்திகளும், வாகனங்களும் சந்தை வீதியையும் ஆடிய பாதம் வீதிகளையும் மாற்று வழியாக பயன்படுத்துமாறு அவர் கேட்டுள்ளார். (அ-2)

# யாழில் தயாரான முழுநீள திரைப்படம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மண்ணில் இளம் கலைஞர்களின் முற்றுமுழுதான பங்களிப்புடன் நல்லூரான் பிக்சர்ஸ் வழங்கும் என்னுள் என்ன மாற்றமோ திரைப்படம் இன்று ராஜா திரையரங்கில் திரையிடப்படவுள்ளது.

தென்னிந்திய திரைப்படத்திற்கு நிகராக உருவாக்கப்பட்டுள்ள இத் திரைப்படத்தை எஸ்.கவிமாறன் இயக்க இதற்கான இசையை யாழ்ப்பாண இசைக்கலைஞர் தேவா வழங்கியுள்ளதுடன் இத் திரைப்படத்தின் படப்பிடிப்பு அனைத்தும் யாழ். மண்ணிலே இடம்பெற்றிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

ராஜா திரையரங்கில் இன்று திரையிடப்படவுள்ள இத்திரைப்படம் முற்பகல் 9 மணிக்கும் நண்பகல் 12 மணிக்கும் பிற்பகல் 3 மணி மற்றும் 6 மணிக்கும் திரையிடப்படவுள்ளது. (அ-5)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 40 | 40 |
| உருளைக்கிழங்கு | 80-120 | 80 | 100 |
| பச்சைமிளகாய் | 80 | 120 | 140 |
| தக்காளி | 120 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 60 |
| கோவா | 120 | 120 | 120 |
| கரட் | 140 | 120 | 160 |
| பூசணி | 40 | 40 | 40 |
| புடோல் | 60 | 60 | 60 |
| வாழைக்காய் | 40 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 100-160 | 140-180 | 120-160 |
| பெரிய வெங்காயம் | 70 | 90 | 30 |
| பாகற்காய் | 120 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 80 | 60 | 80 |
| கருணைக் கிழங்கு | 70 | -- | 100 |
| பயற்றங்காய் | 80 | 60 | 60 |
| லீக்ஸ் | 160 | 160 | 160 |
| பீற்றூட் | 70 | 100 | 120 |
| கறிமிளகாய் | 160 | 120 | 240 |
| முருங்கைக்காய் | 250 | 400 | 400 |
| போஞ்சி | 140 | 120 | 160 |
| கத்தரிதம்புள்ள | 30 | 30 | -- |
| கீரை – 1 பிடி | 20 | 30 | 30 |
| தேசிக்காய் | 80 | 120 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 35 | 30-40 |
| இராசவள்ளி | 100 | 120 | 100 |

# இராசி பலன்

15.06.2013
(ஆனி 01, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.56 மணிக்கு
சஷ்டி காலை 6.39 மணிவரை
மகம் முற்பகல் 9.19 மணிவரை
இராகுகாலம் 8.53-10.23 மணிவரை
சுபநேரம் 2.53-4.23 மணிவரை

**மேடம்**

தொட்ட காரியங்கள் வெற்றி பெறும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, பிள்ளைகள் பொறுப்புணர்ந்து நடந்து கொள்வர், திருமண பேச்சுக்கள் சுமுகமாக அமையும்.

**இடபம்**

சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், பூணிபுரியும் இடத்தில் பெயரும் புகழும் கூடும், வழிபாடு முன்னேற்றம் தரும், எடுத்த காரியத்தை முடிப்பதில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**மிதுனம்**

சகோதர ஒற்றுமை பலப்படும், நேற்றைய பிணக்கு இன்று நல்லவிதமாக முடியும், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், காரிய அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.

**கடகம்**

கொடுத்த வாக்கை காப்பாற்றும் எண்ணம் மேலோங்கும், தொலைதூரத்திலிருந்து சுப தகவல்கள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும், மங்கல நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**சிங்கம்**

குடும்பத்தில் மூத்தவர்களால் ஏற்பட்ட பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைப்பீர்கள், திடீர் பயணங்கள் உருவாகலாம், மனதில் இனம்புரியாத கற்பனைகள் தோன்றி மறையும். போசன நன்மையுண்டு.

**கன்னி**

குடும்பத்தில் உள்ளவர்களை அனுசரித்து செல்வதன் மூலம் மகிழ்ச்சி அதிகரிக்கும், சுப நிகழ்வுக்காக சில செலவுகளை மேற்கொள்வீர்கள், சஞ்சலங்கள் குறைய இறைவனை பிரார்த்திப்பீர்கள்.

**துலாம்**

செல்வ நிலை உயரும் நாள், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், திடீர் பயணங்களால் நன்மையுண்டு, எடுத்த கருமங்கள் எளிதில் கைகூடும், புதிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**விருச்சிகம்**

உறவினர்கள் உங்கள் இல்லம் தேடி வரலாம், தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும், பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள்,வீட்டுத் தேவைகளை நிறைவு செய்து கொள்வீர்கள்.

**தனுசு**

புத்திசாதுரியமாக நடந்து காரியம் சாதிக்க வேண்டிய நாள், மருத்துவச் செலவுகள் குறைந்து மனநிம்மதியைக் கொடுக்கும், தொழில் ரீதியாக முக்கியமானவர்களைச் சந்திப்பீர்கள், பயணங்கள் கைகூடும்.

**மகரம்**

உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், தொழிலில் கவனத்துடன் செயற்படுவது நல்லது, பிரயாண பயமுண்டு, எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்படலாம், பண விரயங்கள் கூடும்.

**கும்பம்**

குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும், சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும், உறவினர் வருகையுண்டு, செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், கௌரவமான நாள்.

**மீனம்**

நிர்வாகத் திறமை பிறக்கும் நாள், எடுத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், ஆரோக்கியமான நாள், சுவாரஸ்யமான நாள், திடீர் பயணங்கள் நன்மை தரும், வருமானம் திருப்தி தரும்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வடமராட்சி கிழக்கில் உள்ள


# நான்கு கிராமங்களுக்கு இன்று மின்சாரம் வழங்கல்

(கரவெட்டி)

வடமராட்சி கிழக்கு நான்கு கிராமங்களுக்கு வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மின்சாரம் வழங்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.

வடமராட்சி கிழக்கு கிராமங்களான மருதங்கேணி, வத்திராயன், உடுத்துறை, ஆழியவளை பகுதிகளை சேர்ந்த ஆயிரம் குடும்பங்களுக்கு மின் இணைப்புக்கள் வழங்கப்படவுள்ளன.

இந்நிகழ்வில் பராம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, வடக்கின் வசந்தம் திட்ட முகாமையாளர் குணசீலன், வடக்கின் வசந்த யாழ்.மாவட்ட இணைப்பாளர் ஜெயதிலக, மருதங்கேணி பிரதேச செயலர் ந.திருலிங்கநாதன், ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் வடமராட்சி அமைப்பாளர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன், வடமராட்சி நெல்லியடி உபமின்சார அலுவலக அத்தியட்சகர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-3-24)




நன்றி: மிரர்

## புதுவசந்தம் இதழ் அறிமுக விழா இன்று

(யாழ்ப்பாணம்)

தேசிய கலை இலக்கிய பேரவையினால் வெளியிடப்படும் புதுவசந்தம் இதழ் அறிமுகவிழா இன்று சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் இருவேறு இடங்களில் நடைபெறவுள்ளன.

இவ் இதழ் அறிமுக விழாவின் முதல் நாள் நிகழ்வு சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு இலங்கை வங்கியின் சங்கானை கிளையின் மேல்மாடியில் த. தனுஜன் தலைமையில் நடைபெறவுள்ளது.

2-ம் நாள் நிகழ்வுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். கோட்டை பின்புறக் கடற்கரைப் பகுதியில் தேசிய கலை இலக்கிய பேரவையின் யாழ்.பிரதேசச் செயலாளர் த.பிரகாஸ் தலைமையில் நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வில் தேசிய கலை இலக்கியப் பேரவையின் இலக்கியச் செயலாளர் மு.மயூரன் நூலை அறிமுகம் செய்து வைக்கவுள்ளது டன் புதிய பண்பாடு புதிய வாழ்வு என்னும் தொனிப் பொருளிலான கருத்துரையினை சட்டத்தரணி சோ.தேவராஜா வழங்கவுள்ளார். (அ-5)

## மகிழ்வூட்டல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி சிமாட்கிட்ஸ் மாதிரி முன்பள்ளி சிறார்களின் அரங்கினூடான மகிழ்வூட்டல் நிகழ்வு இன்று சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு சிமாட் கிட்ஸ் முன்பள்ளியில் நடைபெறவுள்ளது. (அ-5)

## மாடு வெட்டிய நபருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம்

துன்னாலை குடவத்தை பகுதியில் வீட்டில் வைத்து மாடுவெட்டிய நபருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து பருத்தித்துறை நீதவான் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. மேற்குறித்த பகு தியில் வீட்டில் வைத்து மாடு வெட்டிய நபரை நெல்லியடி பொலிஸார் கைது செய்து நேற்று வெள்ளிக்கிழமை பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரித்த பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளி எனக் கண்டு 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார். (அ-3-60)

## வீதியை புனரமைத்து தருமாறு கோரிக்கை

(கரணவாய்)

உடுப்பிட்டி வீரபத்திரர் கோவிலுக்கு அருகாமையில் உள்ள வீதி புனரமைக்கப்படாது குன்றும் குழியுமாக காணப்படுவதால் பயணிக்க முடியாத நிலை உள்ளதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இவ்வீதிக்கு அருகாமையில் குளம் உள்ளதால் மழை காலங்களில் குளம் நிரம்பிய வழியும்போது வீதியூடாகவே மழை நீர் பாய்வதால் பயணிக்க முடியாத இக்கட்டான நிலை காணப்படுகிறது.

இவ்வீதியானது கரவெட்டி பிரதேச சபைக்கு சொந்தமான வீதியாகும்.

எனவே துறைசார்ந்த அதிகாரிகள் இவ்வீதி யைப் புனரமைத்து போக்குவரத்துக்கு உதவ வேண்டுமென பயணிகளும் அப்பகுதி மக்களும் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர். (அ-3-60)

## ஒரு இலட்சம் ரூபா அபராதம் விதிப்பு

(கரணவாய்)

ஆபாச படங்களை வீடியோவில் வைத்திருந்த இராஜ கிராமத்தை சேர்ந்த நபர் ஒருவருக்கு பருத்தித்துறை நீதவான் நீதிமன்றம் ஒரு இலட்சம் ரூபா அபராதம் விதித்துள்ளது.


ஆபாசபடங்களை வீடியோவில் வைத்திருந்த நபர் ஒருவரை கடந்த புதன்கிழமை கைது செய்த நெல்லியடி பொலிஸார் ஆபாச கட்டளைச் சட்டம் 2, ஆ, பிரிவை மீறியதன் மூலம் அச் சட்ட கோட்பாட்டின் 2, 1 பிரிவின் படி பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரித்த பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீ நிதிநந்தசேகரம் குறித்த நபர் நீதிமன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் குற்றவாளி எனக் கண்டு நேற்று முன்தினம் பிணையில் செல்ல அனுமதித்ததுடன் நேற்று மன்றில் ஆஜராகுமாறு உத்தரவிட்டார்.

ஆஜராகிய நபருக்கு ஒரு இலட்சம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது. (அ-3-60)

# மரண அறிவித்தல்

## சரவணமுத்து பரம்சோதி



### (உரிமையாளர்-வெங்கடேஸ்வரா ஸ்ரோர்ஸ்)

காரைநகர் மணற்பிட்டியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து பரம்சோதி கடந்த 13.06.2013 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து-சரஸ்வதி தம்பதியினரின் அன்பு மகனும், காலம்சென்ற தேவகுஞ்சரியின் அன்புக் கணவனும், காலஞ்சென்றவர்களான சுந்தரமூர்த்தி-செந்தில்நாயகி தம்பதியினரின் அன்பு மருமகனும், செந்தூரன், சிவதர்ஷினி, சாளினி ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், காண்டீபனின் அன்பு மாமனும், காலஞ்சென்ற சிதம்பரநாதன் மற்றும் தனலக்சுமி தம்பதியினரின் சம்பந்தியும், கருணாநிதி, சிவசோதி, கற்பகநாதன், கணேசன், பாக்கியவதி, தவமணி, கோகிலாவதி, சிவமணி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், அருணகிரிநாதன், இராசகுமாரி, கமலக்கண்ணன், சாந்தகுமாரி, யோகேஸ்வரி, பரமேஸ்வரி, சறோஜினிதேவி, இராஜேஸ்வரி, காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் சிவானந்தன், சிவபாலன், இராஜேந்திரம் ஆகியோரின் மைத்துனரும், சுரேந்திரன், சொர்ணதேவி, சிவயோகன், நகுலி ஆகியோரின் சகலனும் ஹரிஷின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை 16.06.2013 ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

354/7, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்

(சி-3643)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுத்தமான போசணைமிக்க பசுப்பால் உற்பத்தி

பசுப்பாலானது உடலுக்கு வேண்டிய சகல போசணைகளையும் நிறைவாகக் கொண்டுள்ளதால் எல்லா வயதினருக்கும் ஏற்ற நிறை உணவாக விளங்குகின்றது. அது மட்டுமன்றி பக்ரீரியா போன்ற நுண்ணுயிர்கள் வளர்வதற்கு ஒரு சிறந்த ஊடகமாகவும் காணப்படுகின்றது. இதன் காரணமாக பாலானது மிக விரைவில் பழுதடைந்து விடக் கூடியதாகவும் சில வேளைகளில் நோய்க் கிருமிகளை மனிதனுக்குக் கடத்திச் சென்று நோய்களை உருவாக்கக் கூடியதாகவும் இருக்கின்றது.

தரமான பால் உற்பத்தி மற்றும் பால் கறந்த பிற்பாடு உள்ள பாதுகாப்பு முறைகள் பற்றிய தெளிவின்மை காரணமாக உற்பத்தி செய்கின்ற பால் முழுவதனையும் விற்பனை செய்யவோ அல்லது நுகர்வதற்கு முடியாமல் போகின்றது. இதன் காரணமாக பால் உற்பத்தியாளர்கள் போதியளவு வருமானம் இன்றி பொருளாதார ரீதியில் பின்தள்ளப்படுகின்றனர்.

**மனிதனின் போசணையில் பாலின் முக்கியத்துவம்**

1.அனைத்துப் போசணைப் பதார்த்தங்களையும் உள்ளடக்கியதால் ஒரு சமநிலையான முழுமையான ஆகாரமாக விளங்குகின்றது.

2. திரவமாக இருப்பதனால் இலகுவில் உள்ளெடுக்கப்படக் கூடியதாகவும் உடலில் இலகுவில் சமிபாடு அடைந்து அகத்துறிஞ்சப்படக் கூடியதாகவும் உள்ளது.

3. உடல் வளர்ச்சிக்குத் தேவையான கேசின், அல்புமின், குளோபியூலின் ஆகிய முக்கியமான புரதங்களைக் கொண்டுள்ளது.

4.விற்றமின்கள் A,B,C,D,E மற்றும் Ca,P போன்ற கனியுப்புக்களையும் கொண்டுள்ளது.

பாலில் காணப்படும் முக்கியமான போசணைக் கூறுகள்

| பாலின் கூறுகள் | தாய்ப்பால் | பசுப்பால் |
|---|---|---|
| | (%) | (%) |
| நீர் | 87.5 | 87.5 |
| கொழுப்பு | 3.8 | 3.7 |
| இலக்ரோசு | 6.9 | 4.6 |
| புரதம் | 1.2 | 3.2 |
| கனியுப்புக்கள் | 0.6 | 0.7 |

மூலம் கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம் வெளியீடு

சுத்தமான பால் உற்பத்தியில் பங்கு வகிக்கும் முக்கியமான காரணிகள்.

1.கறவை பசுக்களின் சுத்தம் மற்றும் ஆரோக்கியம்

2.பால் கறக்கும் இடம், பால் கறப்பவர் மற்றும் பால் கறக்கும் பாத்திரத்தினுடைய சுத்தம்.

3.பால் கறந்த பின்னரான பாதுகாப்பு முறை.

**1.கறவை பசுக்களின் சுத்தம் மற்றும் ஆரோக்கியம்**

கறவைப் பசுக்களின் சுத்தம் மற்றும் ஆரோக்கியம் என்பன சுத்தமான தரமான பால் உற்பத்தியில் முக்கியமான பங்கை வகிக்கின்றன. அழுக்குகள், தூசுகள் மற்றும் கண்ணுக்குப் புலப்படாத நுண்ணங்கிகள் என்பன மிக இலகுவாக கறவை மாடுகளின் உடலில் சேர்கின்றன.

இவை கறவைப் பசுக்களின் பால் மடி மற்றும் முலைக்காம்புகளில் சேருகின்ற சந்தர்ப்பத்தில் இலகுவாக கறக்கப்படுகின்ற பாலினுள் கலந்து விடுகின்றன. பாலெடுத்தலிற்கு முன்பாக கறவைப்பசுக்களின் பால்மடி மற்றும் முலைக்காம்புகள் தூய்மையானதாக இருப்பதை உறுதிப்படுத்தல் வேண்டும். சுத்தமான நீரினால் பால் மடி மற்றும் முலைக் காம்புகள் முழுமையான கழுவுதல் வேண்டும். அத்தோடு ஐதரசன் பேறொக்சைட் போன்ற தொற்று நீக்கிகளை பயன்படுத்தி கழுவுவதன் மூலம் பாதுகாப்பை அதிகப்படுத்தலாம். பின்னர் சுத்தமான உலர்ந்த துணியினால் முழுமையாகத் துடைத்து உலர்த்த வேண்டும். இதன் மூலம் பால்மடி மற்றும் முலைக் காம்புகள் மூலம் அழுக்குகள் மற்றும் நுண்ணுயிர்கள் பாலினுள் சென்றடைவதைத் தடுக்கலாம்.

கறவைப் பசுக்களின் ஆரோக்கியம் பற்றிய விழிப்புணர்வு என்பது கறவைப் பசுக்களுக்கு மட்டுமன்றி பால் பருகும் அனைத்து நுகர்வோர்களுடைய பாதுகாப்பை உறுதிப்படுத்துகின்ற ஒரு செயற்பாடு ஆகும்.

கறவைப் பசுக்களை குறிப்பிட்ட கால இடைவெளிகளில் கால்நடை மருத்துவரின் பரிசோதனைக்கு உட்படுத்துதல் வேண்டும். அதன் மூலம் கறவைப் பசுக்களில் காணப்படுகின்ற நோய் அறிகுறிகளை ஆரம்ப நிலையிலே கண்டுபிடித்து அதற்குரிய சிகிச்சைகளை மேற்கொள்ள முடியும். நோய் காரணமாக ஏற்படக் கூடிய பொருளாதார இழப்புக்களைக் குறைக்க முடியும்.

அத்தோடு பசுக்களில் ஏற்படும் காச நோய் மற்றும் கருச்சிதைவு நோய்கள் பாலின் மூலம் மனிதர்களுக்கு பரவக் கூடிய சந்தர்ப்பங்கள் அதிகளவில் காணப்படுவதாக விஞ்ஞான ரீதியிலான முடிபுகள் பரிந்துரை செய்கின்றன.

எனவே, கால்நடை வைத்தியரின் மருத்துவப் பரிசோதனைகளை குறிப்பிட்ட கால இடைவெளியில் செய்வதன் மூலம் கறவைப் பசுக்களில் நோய் ஏற்படாமல் தடுப்பது மட்டுமன்றி பசுக்களின் மூலம் மனிதர்களுக்கு நோய் பரவாமல் உறுதிப்படுத்தலாம்.

கறவைப் பசுக்களில் பொதுவாக ஏற்படுகின்ற நோய் மடியழற்சி/மஸ்ரைரிஸ் ஆகும். அதிகளவிலான பால் தருகின்ற பசுக்களில் இந்நோய் அதிகமாக அவதானிக்கப்படுகின்றது. பால் உற்பத்தியாளர்களுக்கு அதிகளவு பொருளாதார ரீதியிலான நட்டத்தை இந்த நோய் ஏற்படுத்துகின்றது. மஸ்ரை ரிஸ் எனப்படுகின்ற நோய் இரு வகைப்படுகின்றது.

1.நோய் அறிகுறிகள் இன்றி நோய் பீடிப்பு

2. நோய் அறிகுறிகள் வெளிக்காட்டி நோய் பீடிப்பு

1.நோய் அறிகுறிகள் இன்றி நோய் பீடிப்பு

இங்கு நோய்க்கிருமிகள் கறவைப் பசுக்களின் மடியினுட் புகுந்து நோயை உருவாக்கியிருக்கும். ஆனால் பசுக்களில் நோய் அறிகுறிகள் வெளிக்காட்டப்பட்டு இருக்க மாட்டாது. இங்கு பாலின் உற்பத்தி அதிகளவில் குறைவதோடு பாலின் போசணைக் கூறுகளின் அளவிலும் அதிகளவிலான மாற்றங்கள் ஏற்படுகின்றன. இதனால் பாலின் தரம் குறைவடைகின்றது. இப்பாலை விற்பனை செய்ய முடியாத நிலை தோன்றுகின்றது. (தொடரும்)

**சுகந்தி வைரமுத்து,**
**கால்நடை புலனாய்வு நிலையம்,**
**யாழ்ப்பாணம்.**

## கல்யாணமாலை அறிவித்தல்

கோவை ஒழுங்குபடுத்தல்கள் காரணமாக 16.06.2013 தொடக் கம் 19.06.2013 வரை கல்யாணமாலையின் அனைத்து செயற் பாடுகளும் நடைபெறாது என்பதனை அன்புடன் அறியத் தருகின்றோம். முகாமைத்துவ பீடம்.

# இலங்கையில் மும்மொழித்திட்டத்தை மும்முரமாக முன்னெடுக்கிறார்கள் இந்து பௌத்த கலாசாரப்பேரவையினர்

கடந்த 09.06.2013, ஞாயிற்றுக்கிழமை பௌத்த சாசன ஆராய்ச்சி நிலையத்தின் தலைமைக் காரியாலயமான ராஜகிரியவில் மும்மொழிக்கான பயிற்சிப் புத்தகத்தினை வெளியிட்டு வைத்துள்ளனர். இப்புத்தகம் அந்நிறுவனத்தின் நிர்வாகச் செயலாளரும் விரிவுரையாளருமான உயர்திரு.கித்ஸ்ரீ ஆனந்தா அவர்களால் எழுதப்பட்டு நிறுவனத்தின் தலைவர் வணக்கத்திற்குரிய அத்துரலிய ரத்தன தேரோ (பாராளுமன்ற உறுப்பினர்) தலைமையில், இலங்கையின் கல்வியமைச்சர் கௌரவ பந்துல குணவர்த்தன, தொழில்நுட்பம் ஆராய்ச்சியும் அணுசக்தி அமைச்சர் கௌரவ பாட்டாளி சம்பிக்க ரணவக்க போன்ற அமைச்சர்கள் பலர் வைபவத்தில் கலந்து சிறப்புரை நிகழ்த்தி புத்தகத்தை வெளியிட்டு வைத்தபோது, இந்துபௌத்த கலாசாரப்பேரவையின் செயலாளர் தேசமானிய M.T.S. இராமச்சந்திரன் கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்டு, நூலாசிரியர் உயர்திரு.கித்ஸ்ரீ ஆனந்தாவிடம் முதற்பிரதியைப் பெற்றுக்கொண்டார்.

அங்கே சொற்பொழிவாற்றிய வணக்கத்திற்குரிய அத்துரலிய ரத்ன தேரோ் தெற்கிலும் வடக்கிலும் இளைஞர்கள் யுவதிகள் எதிர்காலத்தில் மும்மொழிகளையும் பேசவேண்டுமென்ற மகிந்த சிந்தனைக்கமைய வடக்கில் தேசமானிய M.T.S. இராமச்சந்திரனும் தென்னிலங்கையில் இந்துபௌத்த கலாசாரப் பேரவை நிர்வாகமும் நடாத்துவது எனக்குப் பெருமகிழ்ச்சியைத் தருகிறது என்றும் இவ்வாறான செயற்பாட்டை வடஇலங்கையில் தேசமானிய இராமச்சந்திரன் செயற்படுத்தி வருவதால் அங்கே பல இளைஞர் யுவதிகள் பயன்பெற்றுக் கொண்டிருக்கின்றனர். அத்தகைய இராமச்சந்திரன் கௌரவ விருந்தினராக கலந்து சிறப்பித்தமையை இங்கு கலந்து கொண்ட அமைச்சர்களும் சதகாம் செவன நிர்வாகமும் பெருமகிழ்ச்சியடைவதுடன் இப்புத்தகத்தை வெளியிட்ட கித்ஸ்ரீ ஆனந்தா சிறந்த ஆசிரியரும் விரிவுரை யாளரும் என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம். ஆனால் அவர் ஒரு எழுத்தாளர் என்பது இந்நூலின் வாயிலாகத் தெரியவந்துள்ளது எனக்குறிப்பிட்டார். அங்கேஅதற்குமுன் ஆங்கிலக்கல்விகற்ற




பௌத்தபிக்குகள், கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டது. குறிப்பாக இந்நிகழ்வு எதிர்வரும் காலங்களில் வடக்கிலுள்ள மாணவர்களுக்கும் நடத்தப்படவுள்ளதாக வணக்கத்திற்குரிய அத்துரலிய ரத்ன தேரோ குறிப்பிட்டார்.

இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1980 இந்து(V)<br>நட்சத்திரம்: பூராடம் 2<br>உயரம்: 5'5"<br>கி.பா : 33.5<br>தகைமை/தொழில்: A/L சுவிஸ் PR<br>தொ.இ:B538 | பிறப்பு: 1984 இந்து(Pa)<br>நட்சத்திரம்: புனர்பூசம் 2<br>உயரம்: 5'<br>கி.பா :43.75 2ல்<br>செவ்தகைமை/தொழில்: A/L<br>தொ.இ:G724 |
| பிறப்பு: 1977 இந்து (V)<br>நட்சத்திரம்: உத்தரம் 1<br>கி.பா :25 4ல் செவ்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: பட்டதாரி பிரதேச செயலகம்<br>தொ.இ:B540 | பிறப்பு: 1986 இந்து(V)<br>நட்சத்திரம்: பூசம் 2<br>கி.பா : 46.75 1ல் செவ்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: College ஆசிரியைசைவபோசனம்<br>தொ.இ:G726 |
| பிறப்பு: 1985 இந்து(V)<br>நட்சத்திரம்: பூசம் 4<br>கி.பா :39 2ல் சூ,செவ்<br>உயரம்: 5'6".தகைமை/ தொழில்: O/L தனியார்<br>தொ.இ:B541 | பிறப்பு: 1982 இந்து(V)<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி 1<br>கி.பா : 28.75<br>உயரம்: 5' 5" 2ல் செவ்<br>தகைமை/தொழில்: BBA எழுதுவினைஞர்<br>தொ.இ:G728 |
| பிறப்பு: 1978 Non RC(Barber)<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: O/L வியாபாரம்<br>தொ.இ:B542 | பிறப்பு: 1983 இந்து(V)<br>நட்சத்திரம்: அவிட்டம் 4<br>கி.பா:70.75 உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BA ஆசிரியை<br>தொ.இ:G729 |

சகல தொடர்புகளுக்கும்:-
**கல்யாண மாலை**
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலய திருவிழா நேற்று முன்தினம் நடைபெற்றது. இத்திருவிழர்வில் அருட்தந்தையர்கள் திருப்பலி ஒப்புக்கொடுப்பதையும் புனித அந்தோனியாரின் திருச்சொரூப பவனி இடம்பெறுவதையும் படங்களில் காணலாம்.

# 13 ஆவது திருத்தத்தில் பெரும்பான்மை இன்றேல் சர்வஜன வாக்கெடுப்பு

## தேசிய அமைப்புக்களின் ஒன்றியம் வலியுறுத்து

(கொழும்பு)

**அரசியல் அமைப்பு சட்டத்தின் 13 ஆவது திருத்தச்சட்டத்தில் திருத்தங்கள் ஏற்படுத்துவதற்கான நாடாளுமன்றில் கொண்டுவரப்படவுள்ள திருத்த யோசனைக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகள் கிடைக்காது போனால் கட்டாயமாக சர்வஜன வாக்கெடுப்பை நடத்த வேண்டும் என தேசிய அமைப்புக்களின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.**

தேசிய அமைப்புக்களின் ஒன்றியம் கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் இதனை தெரிவித்துள்ளது.

அரசாங்கத்திற்கு முன்வைக்கப்பட்டு ள்ள இரண்டு யோசனைகளுடன் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களும் நீக்கப்பட வேண்டும்.

தெரிந்தோ தெரியாமலோ நாட்டை கஷ்டத்தில் தள்ள நடவடிக்கை எடுத்தால் அரசாங்கத்தை பாதுகாக்க முன்வரப்போவதில்லை என அந்த அமைப்பு கூறியுள்ளது.

மக்களின் உரிமை சகலவற்றையும் விட முக்கியமானது.

இதனால் இவ்வாறான தேசிய பிரச்சினைகளின் போது முடிவு எடுக்கும் பொறுப்பை மக்களிடம் ஒப்படைக்க வேண்டும் என அந்த அமைப்பின் தலைவர் பொங்கமுவெ நாலக தேரர் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் முழு மையாக முஸ்லிம் மக்களை பிரதிநிதித்துவப்படுத்த வில்லை.

வாசுதேவ நாணயக்கார உள்ளிட்ட கம்யூனிஸ்ட் கட்சி முழு இடதுசாரி மக்களை பிரதிநிதித்துவப்படுத்தவில்லை. இதனால் தேசிய மற்றும் சர்வதேச அழுத்தங்களுக்கு அடி பணியாது மக்களின் உரிமைகளை மதிக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை.

மாகாணசபை முறை கொண்டு வரப்பட்டபோது சிறிமாவோ பண்டாரநாயக்க அதற்கு எதிராக நடத்திய தெளிவுபடுத்தும் கூட்டங்களை அன்று நாடாளுமன்ற உறுப் பினர்களாக இருந்த மகிந்த ராஜபக்ஷ, சுசில் பிரேமஜயந்த போன்றோர் முன்னெடுத்த னர் என்பதால் அவர்க ளுக்கு பிடிக்கதாதது தற்போது பிடித்தமாய் மாறுவதற்கு வாய்ப் பில்லை எனவும்நாலகதேரர் கூறியுள்ளார். (அ-2)

# கோடி ரூபா பெறுமதியான ஆபரணங்கள் கொள்ளை

(கொழும்பு)

மாணிக்கக்கல் வியாபாரியிடமிருந்து சுமார் ஒன்றரைகோடி ரூபா பெறுமதியான மாணிக்கக் கற்கள் மற்றும் தங்க ஆபரணங்கள் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவமொன்று லக்கலையில் இடம்பெற்றுள்ளது.

பொலிஸார் எனக் கூறிக்கொண்டு அவருடைய வீட்டுக்கு சென்ற கொள்ளை கோஷ் டியினரே இவற்றை கொள்ளையடித்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வலான குற்றத்தடுப்பு பிரிவைச் சேர்ந்தவர்கள் என்று தங்களை கூறிக்கொண்டு வர்த்தகரின் வீட்டுக்குள் புகுந்த கொள்ளை கோஷ்டியினர் வர்த்தகரின் கைகளுக்கு கைவிலங்கு இட்டதன் பின்னர் வீட்டிலிருந்தவர்களை அறையொன்றில் தள்ளி பூட்டி விட்டே இந்த பொருட்களை கொள்ளையடித்துக் கொண்டு தப்பிச்சென்றுவிட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

# மீனவர்கள் தம்மை பதிவு செய்வது கட்டாயமாக்கப்படும்-ராஜித

கடலுக்கு செல்லும் மீனவர்களை பதிவு செய்து கொள்ளும் முறைமை கடுமையாக அமுல்படுத்தப்படவிருப்பதாக மீன்பிடித்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

மீனவர்கள் பதிவு செய்யப்படும் போது படகுகளில் உயிர்க்காப்பு அங்கிகள் கட்டாயப் படுத்தப்படுவதுடன் அனைத்து படகுகளையும் இயல்பாகவே காப்புறுதி திட்டத்திற்குள் உள்வாங்கும் வகையில் இச்செயற்திட்டம் நடைமுறைக்கு கொண்டு வரப்படுமெனவும் அமைச்சர் கூறினார்.

கடந்த வாரம் சீனாவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த அமைச்சர் ராஜித சேனாரத்ன நேற்று முன்தினம் நாடு திரும்பியுள்ளார்.

இதன்போது இலங்கையில் மீனவர்கள் உயிரிழந்துள்ள சம்பவத்திற்கு அனுதாபம் தெரிவித்த அவர் இக்கொடூரமான சம்பவத்தை அடிப்படையாக வைத்து மேற்படி நீண்டகால திட்டங்களை உடனடி அமுலுக்கு வரும் வகையில் செயற்படுத்தவிருப்பதாகவும் அவர் கூறினார்.

இதற்கு முன்னர் பல தடவைகள் அனைத்து மீனவர்களையும் காப்புறுதி செய்யுமாறு நாம் வற்புறுத்தியுள்ள போதும் அதில் கணிசமானவர்கள் மாத்திரமே அக்கறை செலுத்தியிருந்தனர்.

வருடத்திற்கு 750 ரூபாய் வீதமே காப்புறுதி தொகை அறவிடப்படுகிறது. அந்த வகையில் மாதாந்தம் 60 ரூபா வீதமே செலுத்தப்பட வேண்டும். அவ்வாறான காரப்புறுதி திட்டத்தில் மீனவர்கள் தங்களை உள்வாங்கிக் கொள்வதன்மூலம் இவர்களுக்கும் இவர்களது பிள்ளைகளுக்கும் பல சலுகைகள் பெற்றுக் கொடுக்கப்படுகின்றன.

எனவே படகுகள் மீனவர்களை காப்புறுதி திட்டத்திற்குள் உள்வாங்கும் வகையில் பதிவு முறைமை கட்டாயமாக்கப்படுமெனவும் அமைச்சர் கூறினார். (அ-2)

# வடமாகாண அதிபர் சங்க நிர்வாக சபைத் தெரிவு

வடமாகாண அதிபர் சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவு கடந்த மே மாதம் 24 ஆம் திகதி யாழ். இந்துக்கல்லூரியில் இடம்பெற்றது.

புதிதாக தெரிவு செய்யப்பட்ட நிர்வாக உறுப்பினர்களின் விபரங்கள் வருமாறு,

தலைவர்- மானிப்பாய் இந்துக்கல்லூரி அதிபர் எஸ். சிவனேஸ்வரன், செயலாளர்- சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் அ.கயிலாயபிள்ளை, பொருளாளர்- கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி அதிபர் மு. கனகலிங்கம், உப்தலைவர்களாக நெல்லியடி ம.ம.வி. வித்தியாலய அதிபர் செ. சேதுராசா, யாழ். இந்து கல்லூரி அதிபர் வ.கணேசராசா, சுழிபுரம் விக்டோரியாக்கல்லூரி அதிபர் வ. ஸ்ரீகாந்தன், மன்னார் சித்தி விநாயகர் கல்லூரிஅதிபர் ஐ.தயாகந்தராசா, உப செயலாளராக ஊரெழு கணேச வித்தியசாலை அதிபர் சி. திரிகரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

அத்தோடு நிர்வாக சபை உறுப்பினர்களாக யாழ். அருணோதயாக் கல்லூரி அதிபர் நா.கேதீஸ்வரன், நெல்லியடி ம.ம. வித்தியாலய பிரதி அதிபர் க.கிருஷ்ணகுமார், கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலை அதிபர் ஆ.தங்கவேலு, யாழ். வயாவிளான் ம.ம. வித்தி யாலய அதிபர் த.ஜயந்தன், கொட்டடி நமசியவாய வித்தியாலய அதிபர் ப. கணேசன், கோப்பாய் சரவணபவானந்தா வித்தியாலய அதிபர் அ.ஆனந்தராசா, சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் கு.விமலன், கொடிகாமம் மத்திய கல்லூரி அதிபர் வ.நடராசா, புங்குடுதீவு மகாவித்தியாலய அதிபர் எஸ் .கனகேஸ்வரன், அதிபர் எவ். எக்ஸ் அன்ரன், நெடுங்குள மகா வித்தியாலய அதிபர் எஸ். அமிர்தலிங்கம் போன்றோர் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக உப செயலாளர் சி.திரிகரன் அறிவித்துள்ளார். (அ)

# கஞ்சா தோட்டத்துடன் ஒருவர் கைதானார்

4 ஆயிரம் செடிகள் அடங்கிய கஞ்சா தோட்டத்துடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

எம்பிலிப்பிட்டி பொலிஸார் நேற்று முன்தினம் இரவு மேற்கொண்ட சுற்றிவளைப்பிலேயே குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

எம்பிலிப்பிட்டி -தொரகொல்யாய -ஹிக்தலுக்கஹின்ன பகுதியில் கஞ்சா தோட்டம் வைத்திருந்த ஒருவரே இவ்வாறு சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவராவார்.

சந்தேகநபர் 4 ஆயிரம் செடிகள் அடங்கிய கஞ்சா தோட்டம் ஒன்றை வைத்திருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட நபர் எம்பிலிப்பிட்டி நீதிமன்றில் ஆஜர் செய்யப்படவுள்ளார்.(அ-2)

# பொதுநலவாய நாடுகளின் மகளிர் மாநாடு டாக்காவில்!

(கொழும்பு)

பொதுநலவாய நாடுகளின் மகளிர் விவகார அமைச்சர்களின் 10 ஆவது மாநாடு நாளை மறுதினம் திங்கட்கிழமை தொடக்கம் 19 ஆம் திகதி புதன்கிழமை வரை பங்களாதேஷில் நடைபெறும்.

பங்களாதேஷின் தலைநகரான டாக்காவில் நடைபெறும் இம்மாநாட்டுக்கு அந்நாட்டு பிரதமர் ஷேக் ஹஸீனா தலைமை வகிப்பார்.

இலங்கையின் சார்பில் சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தலைமையிலான குழுவினர் இம்மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளனர்.

சர்வதேச வர்த்தக மற்றும் தொழிற்சங்க சம்மேளனத் தலைவி பிரீடா மிரக்லிஸ் இம் மாநாட்டில் விசேட உரைநிகழ்த்துவார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரையோர மண்ணை தோண்டியதால் உவராகிறது கொட்டடி கரையோரம்



கடற்கரையோரத்தில் சுற்றுலா விடுதி அமைப்பதற்காக கரையோர மண்ணை தோண்டியதால் அதற்கு அருகில் உள்ள நிலம் உவர் நிலமாக மாறும் அபாயம் காணப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

காரைநகர் வீதி, கொட்டடி பகுதியில் ஜே/81 கிராமசேவையாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள முத்தமிழ்திடல் எனும் சிறு நிலப்பரப்பே தோண்டப்பட்டு காணப்படுவதனால் வெள்ள அபாயம், உவர் நீர் அபாயம் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த கரையோர காணியில் இடம்பெயர்வினால் பாதிக்கப்பட்ட சுமார் 28 வரையிலான குடும்பங்கள் வாழ்கின்றனர்.

எனினும் கடந்த வருடம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் குறித்த காணியில் விருந்தினர் விடுதி ஒன்று அமைப்பதென தீர்மானிக்கப்பட்டு கட்டடத்திற்கான திட்ட வரைபடம் அடிக்கல் என்பனவும் நாட்டப்பட்டது.

இதற்கு முன்னதாக அக் காணியில் அரசினால் குடியேற்றப்பட்ட அம்மக்கள் பலவந்தமாக விடுதிகட்டுவதற்காக வெளியேற்றப் பட்டிருந்தனர்.


மேலும் இக் காணியில் 1983 ஆம் ஆண்டு முதல் பதிவு செய்யப்பட்ட சனசமூக நிலையம் ஒன்று முத்தமிழ் சனசமூக நிலையம் என்ற பெயரோடு இயங்கியும் வந்துள்ளது.

அது தற்போது அருகிலுள்ள பாடசாலை ஒன்றுக்கு பக்கத்தில் இயங்கி வருகின்றது.

இவ்வாறு அரசினால் குடியேற்றப்பட்டு வெளியேற்றப்பட்ட மக்கள் தற்போது நிர்க்கதி நிலையில் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றனர். இந்நிலம் தற்போது ஆழமாக்கப்பட்டு அருகிலுள்ள நிலங்களுக்கு பரவப்படுகின்றது. இதனால் கடல் தற்போது குறித்த காணிக்குள் மேவி வீதியோடு நிற்கின்றது.

இதனால் எமது நன்னீர் கிணறு குழாய்க்கிணறுகள் உவர் நீராக மாற்றமுறும் அபாயம் காணப்படுகிறது.

அத்துடன் வெள்ள அபாயம் காணப்படுவதனால் உரியவர்கள் விரைந்து நடவடிக்கையெடுக்க வேண்டுமென அம்மக்கள் கேட்டுள்ளனர். (அ-4)



## ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகர் ஆலயம்

**இன்று நான்காம் திருவிழா**

**பக்தர் குறை தீர்த்திடும் நாயகனே!**

விக்கினங்கள் போக்கி வைக்கும் நீராவி விநாயகனே!
வேதனைகள் நீக்கியே அருள்புரியவேண்டும்
பக்குவமாய் விழாக் கண்டே பதமலர் பணிந்திட்டோம்
பாரோர் மகிழ்ந்திடவே பக்தர்கள் பார்த்திடவே
நெக்குருகி நின்றே உந்தன் அருட்காட்சிகாண
திருவீதி வலம்வந்து திருக்கோலம் காட்டுகிறாய்!
திக்கெட்டும் புகழ்பரப்பி நின் திருவிழாவைக் கண்டாலே
பக்தர் குறை தீர்ந்திடுமே கஜமுகனே சரணம்! சரணம்!!

கலாபூஷணம் இராசையா ஸ்ரீதரன்

# கொலைக்குற்றவாளிக்கு மரண தண்டனை தீர்ப்பு

பெண் ஒருவரை கொலை செய்தமை தொடர்பில் நீதிமன்ற விசாரணைகளின் பின்னர் கொலை சந்தேகத்துக்கிடமின்றி நிரூபணமான நபர் ஒருவருக்கு நீர்கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி எம்.எம்.ஏ. கபூர் மரண தண்டனை விதித்து நேற்று முன்தினம் தீர்ப்பளித்துள்ளார்.

மினுவாங்கொட கோப்பியாவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த கருணாமுனி தினேஷ் பெர்னாந்து (வயது 28) என்ற திருமணமான நபரே தண்டனை விதிக்கப்பட்டவராவார்.

மினுவாங்கொட கோப்பியாவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த குருவிட்ட ஆராச்சிகே தயாவதி (வயது 55) என்ற பெண்ணை கத்தியால் குத்தி கொலை செய்ததாக பிரதிவாதி மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருந்தது. இச்சம்பவம் 2005 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 29 ஆம் திகதி மினுவாங்கொட கோப்பியாவத்தை பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

பிரதிவாதி கொலை செய்யப்பட்ட பெண்ணின் பேர்த்தியுடன் காதல் தொடர்பு கொண்டுள்ளார். இதற்கு கொலை செய்யப்பட்ட பெண் எதிர்ப்பு தெரிவித்து வந்துள்ளார். இதன் காரணமாக இக்கொலை இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

தொடர்ந்து இடம்பெற்ற வழக்கு விசாரணைகளின் போது இக்கொலை சந்தேகத்துக்கிடமின்றி நிரூபணமானதை அடுத்து நீதிபதி பிரதிவாதிக்கு மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

பிரதிவாதி கொலை செய்யப்பட்ட பெண்ணின் பேர்த்தியை (காதலி) கொலை சம்பவத்தின் பின்னர் திருமணம் செய்து வாழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# அமெ.வின் ஆசியா குறித்த நாட்டம் இலங்கையையும் பாதிக்கும்

## பாதுகாப்புச் செயலாளர்

(கொழும்பு)

**அமெரிக்காவின் ஆசியா குறித்த நாட்டமானது இலங்கையும் பாதிக்கும் என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்துள்ளார். அண்மைக் காலமாக அமெரிக்கா ஆசிய பிராந்திய வலய நாடுகளின் மீது கூடுதல் நாட்டம் காட்டி வருவதாகவும் இந்தியாவுடனும் மாலைதீவுடனும் அமெரிக்கா கூடுதல் உறவுகளைப் பேணி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.**


கொத்தலாவல பாதுகாப்பு கல்லூரியில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்துரைக்கையில்,சீனா, ரஷ்யா போன்ற நாடுகளுடனான உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியமானது என அவர் வலியுறுத்தியுள்ளார். அரேபிய புரட்சியைப் போன்று இலங்கையில் ஏற்பட வாய்ப்பு கிடையாது எனத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ஜனநாயக ஆட்சி நிலவி வருவதாகவும் அரசியல் தலைமை மீது மக்கள் மிகுந்த மரியாதை கொண்டுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

குழப்பங்களை விளைவிப்போர் தொடர்ந்தும் கண்காணிக்கப்படுவர் என தெரிவித்துள்ளார்.

நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படுத்த முயற்சி எடுக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். டியூனிசியா போன்ற நாடுகளில் பேஸ்புக் மற்றும் ஏனைய



இணையத்தளங்களை அடிப்படையாகக் கொண்டே புரட்சி வெடித்தது என அவர் தெரிவித்துள்ளார்.(அ-2)

# தெற்காசிய வலயத்தின் ஹோட்டல் கண்காட்சி

தெற்காசிய வலயத்தில் பாரம்பரிய சமையல் விற்பன்னர்களின் ஹோட்டல் கண்காட்சி-2013 (Hotel Show-2013) எதிர்வரும் ஜூலை மாதம் 26 ஆம் திகதி தொடக்கம் 28 ஆம் திகதி வரை கொழும்பில் நடைபெறவுள்ளது.

கொழும்பு சிறிமாவோ பண்டாரநாயக்க சர்வதேச கண்காட்சி நிலையத்தில் மூன்று தினங்களுக்கு குறித்த கண்காட்சியும்இலங்கையில் பாரம்பரிய சமையல் விற்ப ன்னர்களின் சமையல் கள் குறித்த மாபெரும் போட்டி ஒன்று இடம்பெறவுள்ளதுடன், இந்தப் போட்டிக்கு நடுவர்களாக பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த பிரமுகர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

இந்த இறுதிப் போட்டியில் வெற்றி பெறும் இலங்கையருக்கு பிரான்சில் நடைபெறும் இவ்வாறான போட்டியில் கலந்து கொள்ளவும் வாய்ப்பளிக்கப்படும்.

இலங்கை சுற்றுலா சபையின் தலைவர்பாஸ்வர குணரத்ன கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் இத்தகவலைத் தெரிவித்தார். இலங்கையில் இத்தகைய ஹோட்டல் கண்காட்சி நடைபெறுவது இது 8 ஆவது தடவையாகும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# முருகமூர்த்தி ஆலய மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

தாவடி அருள் மிகு வேம்படி முருக மூர்த்தி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத் திருவிழா நேற்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

இதற்கமைய எதிர்வரும் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 8 மணிக்கு சப்பறத் திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு தீர்த்தமும் மாலை 7 மணிக்கு கொடியிறக்கமும் நடைபெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (அ)

# ஐ.தே.கட்சி ஆட்சியமைக்க ஆதரவு வழங்க போவதில்லை

## ஜே.வி.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

1978 ஆம் ஆண்டு அரசியல் அமைப்புச் சட்டத்தை நிறைவேற்றிய ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியை பிடிக்கும் தேவைக்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ ஆதரவு வழங்க ஜே.வி.பி. தயாரில்லை என அந்த கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

78 ஆம் ஆண்டு அரசியல் அமைப்புச் சட்டத்தை நிறைவேற்றிய ஐக்கிய தேசியக்கட்சி நாட்டை நடமாடும் மயானமாக மாற்றியுள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சி மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகளுக்கு இடையிலான சந்திப்பு குறித்து கருத்து வெளியிட்ட அனுரகுமார திஸாநாயக்க அரசாங்கத்தில் இருந்து கொண்டு தாம் எதிர்நோக்கியுள்ள அசௌகரியத்தை மக்கள் முன்னிலையில் மூடி மறைத்துக்கொள்ள ஹெல உறுமயவிற்கு இந்தச் சந்திப்பு நல்லவாய்ப்பாக அமைந்தது என அவர் தெரிவித்துள்ளார்.

அதேபோல்மரணவீட்டுக்குச்சென்று சாதாரண மக்களை சந்திக்க முடியாத நிலைமைக்கு ஐக்கிய தேசியக்கட்சி ஜாதிக ஹெல உறுமயவுடன் பேச்சுவார்த்தை நடத்த அக்கறை காட்டியது. ஐக்கிய தேசியக் கட்சி நாட்டை நடமாடும் மயானமாக்கியதன் பிரதிபலன்கள்தான் தற்போது வெளிவந்து கொண்டிருக்கின்றன.

அத்துடன் இந்த கட்சிகளுடன் பேச்சுக்களை நடத்த ஜே.வி.பி.எந்த விதத்திலும் தயாரில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனி மாத இராசி பலன்கள்

# 15.06.2013-16.07.2013



## சிம்மம்

**மகம், பூரம், உத்தரம்**
**1 ஆம் பாதம்**

**வருமானம் திருப்தி தரும் நேரம்!**

**விடா முயற்சியால் வெற்றியை வரவழைத்துக் கொள்ளும் சிம்ம இர்ராசி நேயர்களே!**

ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது இராசிநாதன் சூரியன் லாபஸ்தானத்தில் லாபாதிபதியுடன் இணைந்து சஞ்சரிப்பதால் பொருளாதாரநிலை உயரும். பணத்தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். எந்தக் காரியத்தையும் எடுத்தோம் முடித்தோம் என்று செய்து முடிப்பீர்கள்.

செவ்வாய் பலத்தால் அரசியல் ஈடுபாடு கொண்டவர்களுக்கு அதிசயதக்க வழியில் பொறுப்புகளும் பதவிகளும் வந்து சேரலாம். இதுவரை பத்தில் சஞ்சரித்து வந்த குருபகவான் இப்பொழுது பதினொன்றில் சஞ்சரிப்பது யோகம்தான். குருவின் பார்வை பஞ்சம ஸ்தானத்தில் பதிவதால் பிள்ளைகள் வழியில் சுபகாரிய பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும். சகோதர ஸ்தானத்தில் சஞ்சரித்து வந்த சனிபகவான் இப்பொழுது வக்ர நிவர்த்தியாகப் போகிறார். 6-7 க்கு அதிபதியாக சனிபகவான் வக்ர நிவர்த்தியாவதால் சகோதர வழியில் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும்.

வாழ்க்கைத்துணை வழியே ஏற்பட்ட பிணக்குகள் மாறி பிரியங்கள் கூடும். மனதளவில் செய்ய நினைத்த காரியங்களை மறுநிமிடமே செய்து முடிப்பீர்கள். விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேரும் இந்த நேரத்தில் விட்டு பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். போட்டிகள் அகலும். பொறுப்புகள் கூடும். மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர். கூட்டு முயற்சிகளில் ஏற்பட்ட குழப்பங்கள் அகலும்.

என்ன இருந்தாலும், ஒன்பதில் கேது சஞ்சரிப்பதால் ஒருசில நேரங்களில் மனக்கசப்பு தரும் செய்திகளும் வந்து சேரலாம். எனவே, ஆனைமுகப்பெருமான் வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

**கடகச் சுக்ரனின் சஞ்சாரம்!**

கடக இராசியில் ஜூன் 23 ஆம் திகதி சுக்ரன் சஞ்சரிக்கப்போகிறார். உங்கள் இராசிக்கு 3,10 க்கு அதிபதி விரய் ஸ்தானத்தில் சஞ்சரிக்கும்பொழுது உங்களைச் சார்ந்திருக்கும் சகோதரர்களால் சில விரயங்களை சந்திக்க நேரிடும். அவர்களின் இல்லங்களில் நடைபெறும் திருமணம் போன்ற சுபகாரியங்களுக்கு கொடுத்து உதவி செய்ய முன்வருவீர்கள். ஆடை, ஆபரணம் சேர்க்கை உருவாகும். அந்நியதேச பயணங்களை எதிர்ப்பார்த்துக் காத்திருந்தவர்களுக்கு அது கைகூடுவதற்கான அறிகுறிகள் தோன்றும். புதிய வாகனங்கள் வாங்கி மகிழும் வாய்ப்பும் கிட்டும்.

**மிதுனச் செவ்வாயின் சஞ்சாரம்!**

ஜூலை 4 ஆம் திகதி மிதுன இராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். 4,9 க்கு அதிபதி 11 -ல் சஞ்சரிப்பது யோகம்தான். செல்வாக்கு மேலோங்கும். செயற்பாடுகளில் வெற்றி கிடைக்கும். இடம், பூமியால் லாபம் உண்டு. வாங்கிய இடத்தை விற்று விட்டு, புதிய இடம் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். அஞ்சல் வழியில் அனுகூலச் செய்திகள் வந்து சேரும். நண்பர்களுக்கு கொடுத்து வாக்குறுதியைக் காப்பாற்றுவீர்கள். பூர்வீக சொத்துக்களில் இருந்த பஞ்சாயத்துக்கள் நல்ல முடிவிற்கு வரும்.

**சனியின் வக்ர நிவர்த்திக் காலம்!**

ஜூலை 4 ஆம் திகதி சனி வக்ர நிவர்த்தியாகிறது. 6,7 க்கு அதிபதி வக்ர நிவர்த்தியாவதால் பக்கத்தில் இருப்பவர்களின் பகை உணர்ச்சிக்கு ஆளாக நேரிடலாம். உத்தியோகத்தில் வேலைப்பளு கூடும். தொழிலுக்காகவோ, மற்றவர்களுக்காகவோ கடன் வாங்கும் சூழ்நிலை ஒருசிலருக்கு உருவாகலாம். அதே நேரத்தில் சப்தமாதிபதி வக்ர நிவர்த்தியாவதால் வாழ்க்கைத்துணை வழியே வந்த பிரச்சினைகள் அகலும். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரும். இக்காலத்தில் சங்கடங்கள் அகல சனிவழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

இம்மாதம் செவ்வாய்க்கிழமை தோறும் முருகப்பெருமான் வழிபாட்டை மேற்கொள்வது முன்னேற்றத்திற்கு வித்திடும்.

**பெண்களுக்காக சிறப்பு பலன்கள்**

இம்மாதம் பணத்தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். பக்கத்தில் இருப்பவர்களால் ஏற்பட்ட சிக்கல்கள் அகலும். உடன்பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வதோடு மட்டுமல்லாமல் உதவிக்கரம் நிட்டும் சூழ்நிலையும் அமையும். கணவன்-மனைவிக்குள் கனிவு கூடும். பாசத்தோடும் நேசத்தோடும் குடும்ப உறுப்பினர்கள் பழகுவர். உங்கள் பெயரிலேயே வீடு, இடம் வாங்க எடுத்த முடிவைக்கேட்டு ஆச்சரியப்படுவீர்கள். அரசியல் பொதுநல ஈடுபாடு கொண்டவர்களுக்கு புதிய பொறுப்புகளும் பதவிகளும் கூட கிடைக்கலாம். வீடு மாற்றங்கள் விருப்பம்போல அமையும். பிரதோஷத்தன்று நந்தியம்பெருமான் வழிபாட்டை மேற்கொள்வது பெருமை சேர்க்கும்.

## அதிசயத்தக்க வகையில் பொறுப்புகளும் பதவிகளும் வந்து சேரப்போகிறது

# சிவல்புரி சிங்காரம்



## கன்னி

**உத்தரம் 2,3,4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1,2 ஆம் பாதங்கள்**

**சனிவழிபாடு சந்தோஷத்தை வழங்கும்!**

**நிதானத்துடன் செயற்பட்டால் நிச்சயம் வெற்றி கிட்டும் என்று சொல்லும் கன்னி இராசிநேயர்களே!**

ஆனி மாதக்கிரக நிலைகளை ஆராய்ந்து பர்க்கும் பொழுது இராசிநாதன் புதன் வலிமையடைந்து சொந்தவீட்டில் சஞ்சரிப்பதால் ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். உற்சாகத்தோடும் ஊக்கத்தோடும் பணிபுரியத் தொடங்குவீர்கள். விரயாதிபதி சூரியனும் தனாதிபதி சுக்ரனும் இராசிநாதனோடு இணைந்து சஞ்சரிப்பதால் விரயத்திற்கேற்ற தனலாபம் வந்துகொண்டே இருக்கும்.

கையில் காசு வைத்துக்கொண்டு காரியத்தைத் தொடங்க வேண்டும் என்ற கவலை இனி அகலும். காரியத்தைத் தொடங்கி விட்டால் காசு, பணம் தானாகவே வரும் சூழ்நிலையும், நண்பர்களின் ஒத்துழைப்பும் கிடைக்கும் நேரமாக இந்த நேரம் அமையும்.

பத்தாமிடத்து குரு பதவி மாற்றம் செய்யும் நேரம் என்பதால் ஒரு வேலையில் இருப்பவர்கள் மற்றொரு வேலையில் சேர முன்வருவர். இடமாற்றங்களால் இனிமை தரும் நேரமிது. கடன்சுமை குறையும். கல்விக்காக எடுத்த முயற்சி கைகூடும். ஏழரைச் சனியின் ஆதிக்கம் இருப்பதால் எதையும் ஒருமுறைக்கு இருமுறை யோசித்து செய்வது நல்லது.

நண்பர்களை நம்பி செய்த காரியம் ஒன்றிரண்டு இழுபறி நிலையிலேயே இருக்கலாம். சனியின் வக்ர நிவர்த்திக்குப் பின்னால் ஓரளவு நற்பலன்கள் நடைபெறத்தொடங்கும். உறவினர் பகை அகலும். உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்கள் உங்களை விட்டு விலகுவர். கரைந்த சேமிப்புகளை ஈடு கட்ட புதிய யுக்திகளைக் கையாளுவீர்கள்.

**கடகச் சுக்ரனின் சஞ்சாரம்!**

ஜூன் 23 ஆம் திகதி கடக இராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். 2, 9க்கு அதிபதி பதினொன்றில் சஞ்சரிப்பது யோகம்தான். பணவரவு திருப்திகரமாக இருக்கும். பயணங்களால் பலன் கிடைக்கும். அந்நியதேசத்திலிருந்து அனுகூலச் செய்திகள் வந்து சேரும். புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று தீர்த்த மாடும் வாய்ப்பு ஒருசிலருக்குஉருவாகும்.

**மிதுனச் செவ்வாயின் சஞ்சாரம்!**

ஜூலை 4 ஆம் திகதி மிதுன இராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். 3,8 க்கு அதிபதியான செவ்வாய் பத்தில் சஞ்சரிக்கும் பொழுது முன்னேற்றப் பாதையில் சில இடையூறுகள் வந்து சேரலாம். அண்ணன், தம்பியைப்போல பழகியவர்கள், அடுத்த நிமிடமே பகையாகலாம். அனுசரிப்பும் ஆதரவும்தான் இக்காலத்தில் தேவை. இருப்பினும் செவ்வாய் குருவோடு இணைந்து குருமங்கல யோகத்தை உருவாக்குவதால் இல்லத்தில் நீண்ட நாட்களாக முடிவடையாத சுபகாரியப்பேச்சுக்கள் இப்பொழுது நல்ல முடிவுக்கு வரலாம். புத ஆதித்ய யோகம் இருப்பதால் செல்வாக்கு மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாக இருந்து சில காரியங்களை முடித்துக்கொடுப்பர்.

**சனியின் வக்ர நிவர்த்திக் காலம்!**

ஜூலை 4 ஆம் திகதி சனி வக்ர நிவர்த்தியாகிறார். எனவே, சில நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரப்போகிறது. பிள்ளைகள் வழியில் பெருமைக்குரிய சம்பவங்கள் நடைபெறும். பதவி மாற்றம், இலாகா மாற்றம் ஒரு சிலருக்கு வந்து சேரும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். அரசுவழிச் சலுகைகளை எதிர்பார்த்துக் காத்திருப்பவர்களுக்கு அது கைகூடுவதற்கான அறிகுறி தோன்றும். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு மகிழ்வீர்கள். அடுத்தவர் நலனில் அக்கறை எடுத்துக் கொண்டதன் விளைவாக ஆதாயம் கிடைக்கும். சனியின் ஆதிக்க காலத்தில் ஒவ்வொரு சனிக்கிழமையும் விரதமிருந்து சனிபகவானை வழிபட்டு வருவது நல்லது.


**பெண்களுக்கு சிறப்பு பலன்கள்**

இம்மாதம் உற்றார், உறவினர்களின் பகை மாறும். உற்சாகம் உள்ளத்தில் குடி கொள்ளும். வீடு மாற்றம், இடமாற்றம் விரும்பும் விதத்தில் அமையும். உடன்பிறப்புகளின் இல்லத்தில் நடைபெறும் விழாக்களில் முன்னின்று நடத்தி வைப்பீர்கள். கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும். பக்கத்து வீட்டாரின் பகை மாறும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரலாம். தங்கம், வெள்ளி போன்ற விலையுயர்ந்த பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். வியாழக்கிழமை தோறும் விரதமிருந்து குருவை வழிபட்டு வருவதன்மூலம் குடும்ப முன்னேற்றம் கூடும். (தொடரும்)

## சிலமாற்றங்களால் இனிமை தரும் நேரமிது கல்விக்காக எடுத்த முயற்சிகள் கைகூடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "எனது கேள்விகளுக்கு சித்தர் அளித்த பதில்கள்"



## ஆன்மீகம் 33

**அன்னை சித்தர் இராஜ்குமார் குருஜி**

அடியேன்:- அவரைத்தான் ஒருவன் சுட்டுவிட்டானே?

சித்தர்:-அகத்திலும் முகத்திலும் ஜீவ களைதோன்றும்! ஒப்பிட்டுக்கூற முடியாத விதத்தில் மனநிறைவும் நன்றி உணர்வும் ஏற்படும்! அவன் ஆன்மா ஆனந்தப்படும். அழியாத இந்த ஆன்மா ஆண்டவனின் சொத்தல்லவா? இதனால்தான் உலகின் சிறந்த தானம் அன்னதானமாகும். இதுமாதிரி மற்ற உயிர்களிடம் நாம் காட்டும் கருணைதான் அருட்பெரும் ஜோதி என்று வள்ளலார் கூறியிருக்கிறார். அதோடு இந்த தானத்தை வேறு யார் வேண்டுமானாலும் எளிதில் செய்ய முடியும். இந்த தானத்தால் நாம் ஆண்டவனை நேரடியாக திருப்திப்படுத்துகிறோம். அதனால்தான் வரப்போகும் அழிவிலிருந்து தம்மைக் காத்துக்கொள்ள மனிதர்களுக்கு இந்த அன்னதானம்தான் கவசமாக இருக்கும்! அதனால்தான் இந்த பொறுப்பை இப்போதே நிறைவு செய்ய ஆயத்தமாக வேண்டும் என்று கூறுகிறேன் ராஜா! ஆய கலைகள் எத்தனை தெரியுமா உனக்கு?


அடியேன்:- அறுபத்து நாலு என்று படித்திருக்கிறேன்?

சித்தர்:- இல்லை அறுபத்து ஐந்து கலைகள்!

அடியேன்:- மன்னிக்கணும்! புரியவில்லை அந்த அறுபத்தி ஐந்தாவது கலை என்ன கலை?

சித்தர்:- எச்சில் கலை!

அடியேன்:- (திடுக்கிட்டு) சாமி!



கும்பமலை கும்பமுனி சித்தர் இடம்

சித்தர்:- (சிரித்தவாறே) யாரையாவது இழிவுபடுத்தி ஏசுவதற்கு சொல்வார்களே! அந்த பொருளில் நான் சொல்லவில்லை. இது எச்சில் கலை! அதாவது சாப்பிட்டவர்களின் எச்சில் இலையை எடுத்தல் பெரிய புண்ணியமான காரியம்! ஐயப்ப பக்தர்கள் பந்தி முடிந்ததும் எச்சில் இலைகளை எடுப்பதற்கு போட்டி போடுபவர்களே ஏன் தெரியுமா? அந்த இலைகளில் சாப்பிட்ட பக்தர்களில் ஒருவராய் ஐயப்ப சுவாமிகளே சாப்பிடுவதாக ஐதீகம்! இதனால்தான் அந்த பக்தர்கள் அதை புண்ணியமாகக் கருதுகிறார்கள்! நாம் எடுக்கும் இலைகளின் எண்ணிக்கை எவ்வளவோ! அவ்வளவு புண்ணியம் கிடைக்கும். அன்னதானமிட்டு சாப்பிட்டவர்கள் இலையையு; எடுத்தலே எச்சில் கலை ஆகும். இது தர்தவான்களுக்கே கிடைக்கும் பாக்கியமாகும்.

அடியேன்:- சாமி நான் இளைஞன். அதோடு மக்களிடம் அறிமுகமில்லாதவன் நான் சொல்வதை மக்கள் கேட்கும்! அளவிற்கு எந்த செல்வாக்கோ! புகழோ நான் சம்பாதிக்கவில்லை! தகுதி இல்லாத என்னிடம் இவ்வளவு பெரிய பொறுப்பை கொடுப்பது ஏன் என்று எனக்குப் புரியவில்லையே?

சித்தர்:-ராஜா! உன்னையே நீ அறிவாய் அதற்கான சமயம் சமீபித்து விட்டது.நீ உன் கடமையைச் செய். பலனை எதிர்பார்க்காதே! ஆயுள் உள்ளவரை ஆத்மா, உன்னை நல்வழிப்படுத்தும்.

தொடரும்

# பெருந்தேசியவாதம் பூசப்பட்ட மந்திரக்கோல்

**புதிய சிந்தனை முறைமைகளை, புதியவாழ்வுச் சூழலும், வரலாற்று ரீதியிலான இயங்கியல் போக்கும் இணைந்து தீர்மானிக்கின்றன**

நாட்டின் பொருளாதார வீழ்ச்சி–அதாவது, சிங்களத்தின் பொருளாதார வீழ்ச்சி, தமிழ் மக்களை போதையூட்டும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்திவிடும் என்று, சிலரால் கருதப்படுவது தவறாகும்.

வெளிநாட்டு நேரடி முதலீடுகள் எங்கே குவிக்கப்படுகிறது என்பது, குறித்தான தெளிவான செய்திகளை ஈழத்தமிழ் மக்களிடையே கொண்டு செல்வதும், அக்கடன்கள் பிரசவிக்கும் சுமைகள், நலிவடைந்துள்ள சமுதாயத்தை மென்மேலும் கீழிறக்கிவிடும் என்பதை ஊடகப்பரப்பில் முன்வைப்பதும், தேவையற்ற விவகாரமாகக் கருதமுடியாது.

ஒடுக்கப்படும் தமிழினம் மகிழ்வுறக்கூடிய வகையில் எதைச் சொல்லமுடியும்? அபகரிக்கப்படும் பூர்வீக நிலங்களில் மாளிகைகள் அமைத்து, துரத்தப்பட்ட மக்கள் மீள் குடியேற்றம் செய்யப்படுகிறார்கள் என்று அரசை நியாயப்படுத்த முடியுமா?

வாங்கிய கடனுக்கு வட்டிகட்ட முடியாமல், 2 மில்லியன் டொலர் பெறுமானம் உடைய நிலங்களை பன்னாட்டுக் கம்பனிகளுக்கு தாரை வார்க்க அரசு தயாராகிக் கொண்டிருக்கிறது என்கின்ற விடயத்தை அப்படி நடக்காது என்று அபத்தமாகப் பேச முடியுமா?

பின்னடைவு வரும்போதுதான், போராடியது தவறு என்கின்ற, குறுகிய மீள்பார்வைச் சிக்கலும் சேர்ந்து வருகிறது. எதிரியோடு மோதும்போது பேசப்படாத நியாயங்களும் மாற்றுச் சிந்தனைகளும், எதிரியின் இயங்குதளத்தில் நிற்கும்போது பீறிட்டுவரும்.

இப்போது கருணா மற்றும் கே.பி. கூறும் நியாயங்கள், இந்த நிலைமாற்ற உளவியலைச் சரிபார்க்கின்றன. ***புதிய சிந்தனை முறைமைகளை, புதியவாழ்வுச் சூழலும், வரலாற்று ரீதியிலான இயங்கியல் போக்கும் இணைந்து தீர்மானிக் கின்றன*** என்று சொல்லலாம்.

போராட்டங்களில் தொடர்ச்சியாக ஏற்படும் பின்னடைவுகளை, தர்க்கீக வழியில் ஆய்விற்கு உட்படுத்தினால், புறக்காரணிகளின் அழுத்தமே பெரிதாகத் தெரியும். அதற்காக, அகநிலை முரண்பாடுகளைக் குறைத்து மதிப்பீடு செய்யமுடியாது.

அதேவேளை, மக்களின் அழிவிற்கு, விடுதலைப்புலிகள் போராடியதுதான் காரணமென்றால், இந்த அழிப்பில் சீனா கொடுத்த போர் விமானங்களும் எறிகணைகளும், அமெரிக்கா வழங்கிய பயிற்சிகளும், இந்தியாவின் கடற்படைத் துணையும் ராடர்களும், ரஷ்யாவின் ஒலிவிழுங்கி வானூர்திகளும், பங்களிப்புச் செய்யவில்லை என்றாகிவிடாது.

தனிஈழம் மட்டுமல்ல, சிங்களம் விரும்பாத தமிழினத்தின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையைக்கூட (அது உள்ளகமோ அல்லது வெளியகமோ) இந்த வல்லரசாளர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. மேற்குலகின் தீர்மானங்களும், கறிவேப்பிலைக்காம்பு போலாகிய 13–வது திருத்தச் சட்டமும், நீதியை வழங்கும் தீர்வினைத் தரும் என்கின்ற, நம்பிக்கைகள் விதைக்கப்படுகின்றன.

அதுமட்டுமல்ல, ஆசிய– பசுபிக் பிராந்தியத்தில், மறுபடியும் உலகநாயகன் வேரூன்றி கிளைபரப்புகிறார் என்கிற கருத்துக்கள் திணிக்கப்படுகின்றன. ஐ.நா.ஊடாக சிங்களத்திற்கு தண்டனை வழங்கி, சுயநிர்ணய உரிமைக்கான கதவினைத் திறந்துவிடுமென சத்தியவாக்கு வழங்கப்படுகிறது.

இந்த சிந்தனைத் திணிப்புகள், எம்மை இலவுகாத்த கிளிகள் போலாக்கி விடுமென்று வரலாற்றுச் சாட்சியங்களோடு கருத்தினை முன்வைத்தால், சீனாவின் அனுதாபிகள் இவர்களென்று பட்டமளிக்கிறார்கள்.

ஆனாலும், தாயக மக்களுக்கு இதிலெல்லாம் பெரும் நம்பிக்கை இருப்பது போல் தெரியவில்லை. 2009 இற்குப் பின்னர் கிரீஸ், ஊசி பூதங்களை கண்ட மக்கள், தற்போது வாழ்விடங்களை இழக்கும் அவலநிலையை எதிர்கொள்கின்றார்கள். அதற்கு எதிராக புதிதாகப் போராடும் போது, வடமாகாணசபைத் சங்கதிகளும் புதிதாகப் புகுந்துவிட்டன. தேர்தல் நடக்குமா? நடக்காதா? என்கின்ற கச்சேரிகளும் களைகட்டுகின்றன. முதலமைச்சர் யார்? என்ற நாற்காலி விவாதங்களுக்கும் குறைவில்லை. எதிரியின் கரங்களில் அதிகாரம் செல்ல விடக் கூடாதென்று, தேர்தலில் குதிப்பதை நியாயப்படுத்தும் தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள், நிலம் பறிபோகும் முக்கிய விவகாரத்தை இரண்டாவது ஆட்டத்திற்கு விட்டு வைத்துள்ளார்கள் போலிருக்கிறது.

இருப்பினும், பாரதீய ஜனதாக் கட்சியின் சமஸ்கிருத மொழியில் கூறினால், எல்லாத் தீர்வும் மகிந்தரின் மந்திரக்கோலில் இருப்பதாகக் கொள்ளலாம். அந்த பெருந்தேசியவாத முலாம்பூசப்பட்ட மந்திரக்கோல், 13–வது திருத்தச்சட்டத்தை மாற்றும், நிறைவேற்றும் வல்லமை கொண்டது.

ஜனாதிபதியின் சக தோழனும், சட்டத்துறை பேராசிரியருமாகிய ஜி.எல்.பீரிஸ் அரசியலமைப்புச்சட்டம்–13 இலுள்ள முக்கியசரத்துக்களை மாற்றும் முன்மொழிவுகளை ஏற்கனவே மந்திரி சபையில் சமர்ப்பித்துள்ளார்.



அதாவது, அதிலுள்ள சரத்துக்களை பெரும்பான்மை பலம்கொண்டு மாற்றலாம் என்பதோடு, பக்கத்திலுள்ள இரண்டு அல்லது மூன்று மாகாணங்கள்விரும்பினாலும் இணைய முடியாது என்பதுதான், சட்டப்பேராசான் முன்வைத்த விடயங்கள்.

இதைப் பெறுவோம், இது முதல்படி என்று வியாக்கியானங்கள் கூறிய தமிழ்த் தேசிய சட்டத்தரணிகள், இப்போது முழிபிது ங்கி நிற்பதாக உள்ளக புலனாய்வுத் தகவல் கள் தெரிவிக்கின்றன.

சிங்களத்தின் இந்த நகர்வினை எப்படியாவது இந்தியா தடுத்துவிடும் என்று மக்களைச் சமாதானப்படுத்த கூட்டமைப்பு முற்படும்போது, இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட இந்திய எதிர்க்கட்சியினர், மந்திரக்கோல் கதை கூறி எல்லாவற்றையும் குழப்பிவிட்டார்கள். இந்தியாவில் ஆட்சி மாறினால், இலங்கை குறித்தான வெளியுறவுக் கொள்கை தலைகீழாக மாறுமென்று எதிர்வுகூறியவர்களும், பா.ஜ.க. சுழற்றிய மந்திரக்கோலால் தடுமாறிவிட்டனர். அதாவது, அரசுகளுக்கு லொபி செய்து, அவற்றின் வெளியுறவுக் கொள்கைகளை மாற்றிவிடலாம் என்று நம்பிக்கையோடு பயணிப்பவர்கள், கற்றுக்கொள்ள வேண்டிய பல பாடங்கள், இந்த மந்திரக்கோலில் இருப்பதை இனியாவது புரிந்துகொள்ள வேண்டும்.

இதேபோன்று, ஐ.நா.பேரவைக்கு அமெரிக்காவின் பிரதிநிதியாக சமந்தா பவர் சென்றால், சிங்களத்தின் மீது அழுத்தங்கள் அதிகரிக்கும் என சிலர் ஆனந்தப்படுகின்றனர். ஆனால், தீர்விற்கான மந்திரக்கோல் மஹிந்த ராஜபக்ஷவின் கைகளில் மட்டுமே இருக்கிறது என்று, சமாந்தாபவர் கைவிரித்து ஒதுங்கிச் செல்லும்போது உண்மை நிலை புரியப் படும்.

-இதயச்சந்திரன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# விலைக்கு அறிவுரை



ஒரு ஊரில் ஒரு விசித்திரமான கடை இருந்தது. அதில் மற்ற கடைகளில் கிடைப்பது போல அரிசி, உப்பு, புளி போன்றவை கிடைக்காது. அங்கு விலைக்குக் கிடைப்பது சில புத்திமதிகளே.

ஒரு நாள் அந்தக் கடைக்கு வள்ளியப்பன் என்பவன் வந்தான். அவன் பணம் கொடுத்து மூன்று புத்திமதிகளை வாங்கிக் கொண்டான். ஒன்றில் "எங்காவது செல்லும் போது அந்தப் பயணத்தைப் பற்றிய விவரத்தை உன் மனைவியிடம் சொல்லாதே" என்றிருந்தது.

இரண்டாவது "பாதையில் செல்கையில் உணவருந்த நேரிட்டால் அப்பாதையில் இருந்து சற்றுத் தூரம் தள்ளிப் போய் உட்கார்ந்து சாப்பிடு" என்றிருந்தது. மூன்றாவது "அவசரப்பட்டு யாரிடமும் எதுவிடயமாகவும் பந்தயம் போடாதே" என்பது.

## அம்புலிமாமா கதைகள்

இந்த அறிவுரைகளைப் படித்துவிட்டு வள்ளியப்பன் தன் வீட்டிற்குப்போனான். அந்த அறிவுரைகள் எவ்வளவு தூரம் உண்மையானவை எனக் கண்டு கொள்ள அவன் மனம் துடித்தது. எனவே அவன் தன் மனைவியிடம் சொல்லாமலே ஒன்பது பைகளில் பணத்தை எடுத்து கட்டிக்கொண்டு ஒரு வண்டியை வாடகைக்குப் பேசிக்கொண்டு புறப்பட்டான்.

உச்சிப் பொழுதாகி விட்டது. எனவே வள்ளியப்பன் ஓரிடத்தில் உட்கார்ந்து சாப்பிட நினைத்தான். அப்போது அறிவுரை நினைவிற்கு வந்தது. எனவே தனது பணமூட்டைகளையும்,சோற்று மூட்டையையும் எடுத்துக்கொண்டு அப்பாதையினின்றும் சற்றுதூரம் விலகிப்போய் கிணற்றிற்கு அருகில் அமர்ந்து சாப்பிட்டுவிட்டு தன் பணப்பைகளை எடுத்துக்கொண்டு திரும்பினான்.

மீண்டும் அவன் தன்னுடைய பயணத்தைத் தொடங்கினான். ஆனால், சிறிது தூரம் போனதும் அவன் தன்னிடம் இருந்த பணப் பைகளை எண்ணிப்பார்த்தான். எட்டுபைகள் இருந்தன. அது கண்டு திடுக்கிட்டு அவன் திரும்ப தான் உணவு உண்ட கிணற்றங்கரைக்குப் போனான். அங்கே அவன் விட்டுச்



சென்ற பணப்பை இருந்தது. எனவே அந்த அறிவுரை உண்மையாகி



விட்டது. அவன்தன் வண்டிக்கு வரும் வழியில் அவன் காலில் ஏதோ ஒரு காய் பட்டது. உடனே வெகு நாள்களாக அவன் காலிலிருந்த புண் திடீரென மறைந்து விட்டது. வலி பறந்து விட்டது. அதில் ஏதோ விசேடசக்தி இருக்கிறதென கண்டு வள்ளியப்பன் அதை எடுத்து ஓரிடத்தில் ஒளித்து வைத்துத்தன் வழியே சென்றான்.

அவன் வியாபாரத்தில் அன்று நல்ல லாபம் கிடைத்தது. ஆகையால் அவன் ஊருக்கு மிகவும் சந்தோசத்தோடு வந்து சேர்ந்தான்.

அவன் ஊருக்கு வந்தபோது அந்த ஊரிலுள்ள லட்சாதிபதியான லட்சுமணன் செட்டியார் ராஜபிளவையால் மிகவும் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தார். அதை குணப்படுத்துவோருக்கு பத்தாயிரம் வராகன்கள் கொடுப்பதாக அறிவித்திருந்தார்.

அப்போது வள்ளியப்பனுக்குத் தான் வழியில் ஒளித்துவைத்த காயைப்பற்றிய நினைவு வந்தது. அவன் தன் மனைவியிடம் அதைச் சொல்லி அந்தக் காயைத் தான் எங்கே ஒளித்து வைத்திருக்கிறான் என்பதையும் கூறி, "இது பரமரகசியமாக இருக்கட்டும்" எனக் கூறினார்கள்.

வள்ளியப்பனின் அந்த பயண விவரங்களையும், குறிப்பாக காயின் மகிமையையும் தன் கணவனிடம் கேட்டதில் இருந்து, வள்ளியப்பனின் மனைவி அந்த ரகசியத்தை யாரிடமாவது கூறவேண்டுமே என்று துடியாய் துடித்தாள். ஆகையால் பக்கத்து வீட்டு பங்கஜத்திடம் சொல்லி விடத் தீர்மானித்தாள் இரவோடு இரவாக, பங்கஜத்திடம் அதை சொன்ன பிறகு தான் அவளால் அன்றிரவு தூங்கவே முடிந்தது. பங்கஜத்திற்கோ எந்த ஒரு ரகசியத்தையும் தன் கணவனிடம் கூறாவிட்டால் தலை வெடித்துவிடும். அதனால் அதை தன் கணவனிடம் கூறினாள். உடனே, பங்கஜத்தின் கணவன் அந்தக் காயை தான் பயன்படுத்திக் கொண்டு செட்டியாரிடம் பணம் பெறத்திட்டமிட்டான்.

மறுநாள் வள்ளியப்பன் இலட்சுமணன் செட்டியார் வீட்டிற்கு போகும் போது அடுத்த வீட்டுக்காரனும் வந்தான்.

அப்போது வள்ளியப்பன் "லட்சுமணன் செட்டியாரின் ராஜ பிளவையைக் குணப்படுத்த என்னால் தான் முடியும்" என்றான். அடுத்த வீட்டுக்காரனோ "எனக்குத் தான் தெரியும். நான் அதைக் குணப்படுத்துகிறேன். என்ன பந்தயம்" என்றான். அதற்கு வள்ளியப்பன் "நீ அப்படி குணப்படுத்தினால் என் வீட்டிற்குள் நுழைந்து உன்கையால் முதலில் தொடுவதை கொடுக்கிறேன்" என்றான்.


அடுத்த வீட்டுக்காரனோ அப்போதே அங்கிருந்து கிளம்பி வள்ளியப்பன் அந்தக்காயை ஒளித்து வைத்து இருந்த இடத்திற்குப் போனான். அக்காயை எடுத்துவந்த லட்சுமணன் செட்டியாரின் முதுகில் வைக்க அவரது ராஜபிளவை மறைந்து விட்டது. அவரும் பத்தாயிரம் வராகன்களை கொடுத்து அனுப்பினார்.

அதோடு திருப்தியடையாமல் அவன் வள்ளியப்பனின் எல்லாப் பணத்தையும் அடைய ஆசைப்பட்டான். பந்தயத்தில் தான் தோற்றது கண்டு வள்ளியப்பன் திகில் அடைந்தான். அப்போது அறிவுரை பெற்ற கடைக்ககாரனின் நினைவு வரவே அங்கே ஓடினான்.

அவனிடம் நடந்ததைக் கூறவே "அவனும் அவன் உன்னுடைய இரும்புப்பெட்டி யைத் தொடவே வருவான். அதை நீ பரண் மீது வைத்துவிடு. பரன் மீது ஏற ஏணியையும் வை" என்றான். அவனும் அப்படியே செய்தான்.

அடுத்த வீட்டுக்காரன் ஊரார் சிலரை சாட்சியாக அழைத்துக் கொண்டு வள்ளியப்பனின் வீட்டிற்கு வந்தான். வள்ளியப்பனும் பந்தயப் படி தான் நடந்து கொள்வதாக கூறினான். அடுத்த வீட்டுக்காரன் பணப்பெட்டி பரண்மீது இருந்ததைக் கண்டு அதைத் தொட ஏணியைப் பிடித்தான்.

அங்கு கூடியிருந்தோரில் அறிவுரை வழங்கும் கடைக்காரனும் இருந்தான். உடனே "பேஷ் நீ முதலில் உன் கையால் தொட்டது இந்த ஏணியைத் தான். இதை எடுத்துக் கொண்டுபோ" என்றான். அங்கு கூடி இருந்தோரும் அதுதான் சரி என்று தமக்கு வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு கூறினார்.



அடுத்த வீட்டுக்காரன் முகத்தைத் தொங்கவிட்டுக் கொண்டு அங்கிருந்து போனான். வள்ளியப்பனின் பணமும் தப்பியது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அவுஸ்திரேலியா மேலும் 41 பேரை நாடு கடத்தியது

அவுஸ்திரேலியாவில் இருந்து மேலும் 41 இலங்கை அகதிகள் நாடு கடத்தப்பட்டுள்ளனர். அவர்களை ஏற்றி வந்த விமானம் கொழும்பில் தரையிறங்கி இருப்பதாக அவுஸ்திரேலியாவின் குடிவரவுத்துறை அமைச்சர் பிரென்டன் ஓ கோனர் தெரிவித்துள்ளார்.

இதன்படி அவுஸ்திரேலியாவில் இருந்து ஆயிரத்து 247 பேர் இதுவரையில் நர்டு கடத்தப்பட்டுள்ளனர்.

அவர்களில் ஆயிரத்து 35 பேர் பலவந்தமாக நாடு கடத்தப்பட்டவர்களாவர்.

இவ்வாறான நாடுகடத்தப்படும் திட்டம் ஆட்கடத்தல் காரர்களுக்கும் சட்ட விரோதமான முறையில் அவுஸ்திரேலியாவுக்குள் நுழைய முயற்சிப்பவர்களுக்கும் கடுமையான செய்தியை அனுப்புவதாக அமைந்திருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (அ-2)

# 13ஐ இரத்து செய்தால் நீதிமன்றம் செல்வோம்

## அசாத்சாலி தெரிவிப்பு



(கொழும்பு)

13ஆவது அரசியல் அமைப்பு திருத்தச் சட்டத்தை இரத்துச் செய்யவோ, அதில் திருத்தங்களை ஏற்படுத்தவோ அரசாங்கம் நடவடிக்கை எடுத்தால் அதற்கு எதிராக நீதிமன்றத்திற்கு செல்லப் போவதாக தமிழ் முஸ்லிம் முன்னணியின் தலைவர் அசாத் சாலி தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன கொண்டு வந்த இந்த 13 ஆவது அரசியல் அமைப்புத்திருத்தத்திற்கு அதனை தாண்டிய மேலும் அதிகாரங்களை வழங்குவதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ் தெரிவித்திருந்தார்.

கடந்த 25 வருடங்களாக 13 ஆவது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தின் கீழ் 8 மாகாண சபைகள் இயங்கி வருகின்றன. ஆனால், வடமாகாணம் மாத்திரம் அவை போன்று ஏன் இயங்கக் கூடாது எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

எவ்வாறாயினும் 13 ஆவது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தை இரத்து செய்வதையும், அதில் திருத்தங்கள் ஏற்படுத்துவதையும் அரசாங்கத்தில் உள்ள சுமார் 20 அமைச்சர்கள் எதிர்த்துள்ளனர். இவ்விடயத்தினை தாம் வரவேற்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்கள் அரசாங்கத்துடன் இணைந்து தேர்தலில் போட்டியிடும் போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டும் அரசாங்கத்திற்கு பயங்கரவாதியாக தெரிவதாகவும் அசாத் சாலி மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# பொலிஸாரின் நடத்தைகளுக்கு பொலிஸ்மா அதிபரே பொறுப்பு

## பொன்சேகா தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையர்கள் பலர் கொலை செய்யப்படுவதற்கு காரணமாகவிருந்ததாக கூறப்படும் உயர் பொலிஸ் அதிகாரிகள் உட்பட அவரின் கீழிருக்கும் அதிகாரிகளின் நடத்தைக்கு பொலிஸ்மா அதிபர் என். இலங்ககோன் பொறுப்பேற்க வேண்டும் என்று முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா வலியுறுத்தியுள்ளார்.

பொலிஸ் உயரதிகாரி தனது கடமையை சரிவர செய்தால் இத்தகையதான விடயங்கள் இடம்பெற்றிருக்காது எனவும் பிரதி பொலிஸ்மா அதிபர் ஒருவர் இவ்வாறான குற்றத்தை இழைத்ததாக கூறப்படுவது பொலிஸ் திணைக்களத்தில் பல பிரச்சினைகள் இருப்பதனை வெளிச்சம் போட்டு காட்டுகின்றது.

எனவே, பொலிஸ் அதியுயர் அதிகாரி தற்போது நடப்பவற்றுக்கு பொறுப்பேற்க வேண்டும் என்றும் பொன்சேகா தெளிவுபடுத்திக் கூறியுள்ளார்.

பிரதி பொலிஸ் மா அதிபர் வாஸ் குணவர்தன அரச சாட்சியாக மாற்றப்பட்டு இக்குற்றச்சாட்டுக்களிலிருந்து தப்பித்துப் போக விடப்படுவார் என்பதையிட்டு தான் கவலையடைவதாகவும் கைது செய்யப்பட்டுள்ள பிரதி பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்தன ஓர் உயர்பாதுகாப்பு உத்தியோகத்தரின் நெருங்கிய கூட்டாளி என்பதால் தான் இவரது கேள்விக்குரிய கடந்த காலத்தையும் உதாசீனம் செய்து இவருக்கு பிரதி பொலிஸ்மா அதிபர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது என சரத் பொன்சேகா மேலும் சுட்டிக் காட்டியுள்ளார். (அ-2)

# 32 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு பயிற்சி

(கொழும்பு)

வெளிநாட்டில் வேலைவாய்ப்புப் பெற்றுச் செல்வோருக்கு பயிற்சி அளிக்கும் வேலைத்திட்டம் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவிக்கின்றது.

இதன்படி, கடந்த ஜனவரி மாதம் முதல் மே மாதம் வரையிலான காலப் பகுதியில் 32 ஆயிரம் பேருக்கு இப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.நாடு முழுவதிலும் இயங்கும் 42 பயிற்சி நிலையங்களில் இவர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டதாக வேலைவாய்ப்பு பணியகம் மேலும் தெரிவிக்கின்றது.

இவ்வாறு பயிற்சி பெற்றவர்கள் வெளிநாடுகளில் அனுப்பப்படுவதன் மூலம் அந் நாடுகளில் அவர்கள் எவ்வித சிரமமுமின்றி வேலை செய்யும் வாய்ப்பை பெறுவதாக பணியகம் நம்பிக்கை தெரிவிக்கின்றது. (அ-2)




- கிமு 763 - மெசொப்பொத்தேமியாவின் வரலாற்றுக் காலக்கோட்டைக் கண்டறிய உதவிய சூரிய கிரகணம் ஒன்றை அசீரியர்கள் பதிந்தார்கள்.
- 923-பிரான்சின் முதலாம் றொபேர்ட் மன்னன் பலியானான்.
- 1184-நோர்வேயின் ஐந்தாம் மாக்னஸ் மன்னன் ஃபிம்ரெயிட் என்ற இடத்தில் இடம்பெற்ற போரில் உயிரிழந்தான்.
- 1246-இரண்டாம் பிரெடெரிக்கின் இறப்புடன் ஆஸ்திரியாவின் பாபன்பேர்க் அரச வம்சம் அழிந்தது.
- 1389-கொசோவோவில் இடம்பெற்ற சமரில் ஒட்டோமான் படைகள் செர்பியர்களையும், பொஸ்னியர்களையும் தோற்கடித்தனர்.
- 1667 - சான் பாப்டிஸ்ட் டெனிஸ் என்ற பிரெஞ்ச் மருத்துவர் முதன் முதலில் மனித இரத்த மாற்றீட்டை செயற்படுத்தினார்.
- 1752 - மின்னல் ஒரு மின்சாரம் என்பதை பெஞ்சமின் பிராங்கிளின் நிறுவினார்.
- 1775: அமெரிக்கப் புரட்சிப் போர்: ஜோர்ஜ் வாஷிங்டன் அமெரிக்கத் தரைப் படைத் தளபதியாக நியமனம் பெற்றார்.
- 1808-ஜோசப் பொனபார்ட் ஸ்பெயின் மன்னனாக முடி சூடினான்.
- 1836 -ஆர்கன்சா ஐக்கிய அமெரிக்காவின் 25ஆவது மாநிலமானது.
- 1844 - இறப்பர் பதப்படுத்தும் முறை (vulcanization) சார்ல்ஸ் குடியர் என்பவரர்ல் காப்புரிமம் பெறப்பட்டது.
- 1846 -இலங்கையின் ரோயல் ஏசியாட்டிக் சபை என்ற அமைப்பு தனது முதலாவது இதழை வெளியிட்டது.
- 1864-அமெரிக்க உள்நாட்டுப் போர்: வேர்ஜீனியாவின் பீட்டர்ஸ்பேர்க் நகர் அமெரிக்கப் படைகளின் முற்றுகைக்குள்ளானது.
- 1904 - நியூயோர்க்கில் ஜெனரல் ஸ்லோகம் என்ற கப்பலில் ஏற்பட்ட தீவிபத்தில் 1021 பேர் உயிரிழந்தனர்.
- 1911 - ஐபிஎம் நிறுவனம் அமைக்கப்பட்டது.
- 1938 - பிரித்தானியாவில் லாஸ்லோ பைரோ குமிழ்முனைப் பேனாக்களைக் கண்டுபிடித்தார்.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: அமெரிக்கப் படைகள் சாய்ப்பான் தீவை கைப் பற்றினர்.
- 1954-ஐரோப்பிய உதைபந்தாட்டக் கூட்டமைப்பு யூஏஃபா சுவிட்சர்லாந்தில் அமைக்கப்பட்டது.
- 1984-யாழ்ப்பாணம் காரைநகரில் இலங்கையின் கடல் விமானம் ஒன்று விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டது.
- 1996 - ஐக்கிய இராச்சியம், மான்செஸ்டரில் இடம்பெற்ற தீவிரவாதிகளின் குண்டுத்தாக்குதனில் 200 பேர் காயமடைந்தனர். நகரின் மத்திய பகுதி பெரும் சேதத்துக்குள்ளானது.
- 2007 - உலகின் மிகவும் நீளமான 34 கி.மீ. நீள தொடரூந்து சுரங்கப் பாதை சுவிட்சர்லாந்தில் ஆல்ப்ஸ் மலைக்குக் கீழாக அமைக்கப்பட்டது.
- 2009 -ரிச்மண்ட் ஹில் முருகன் கோவில் கொடியேற்றம்
- 2009 - ஸ்காபோரோ பெரிய சிவன் கோவில் தீர்த்தம்

*பிறப்புகள்*

- 1914 - யூரி அந்திரோப்பொவ், சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் (இ. 1984)
- 1950 - லக்ஸ்மி மிட்டால், லண்டனைச் சேர்ந்த உலகச் செல்வந்தர்களில் ஒருவர்
- 1953 - உமர் தம்பி, தமிழ்க் கணிமைக்கு சிறந்த பங்களிப்புக்களை வழங்கியவர் (இ. 2006)

*இறப்புகள்*

- 1838 - ரோணியஸ், ஜேர்மனியத் தமிழறிஞர் (பி. 1790)
- 1849 - ஜேம்ஸ் போக், ஐக்கிய அமெரிக்காவின் 11ஆவது ஜனாதிபதி (பி. 1795)
- 1948 - ராஜா சர் அண்ணாமலை செட்டியார் (பி. 1881)
- 1971 - வெண்டல் ஸ்டான்லி, நோபல் பரிசு பெற்றவர் (பி. 1904)
- *2008 - தங்கம்மா அப்பாக்குட்டி, ஈழத்தின் ஆன்மீகவாதி (பி. 1925)*

### தங்கம்மா அப்பாக்குட்டி



தங்கம்மா அப்பாக்குட்டி 1925 ஆம் ஆணடு ஜனவரி மாதம் 7 ஆம் திகதி யாழ்ப்பாணம் தெல்லிப்பழையில் அப்பாக்குட்டி-தையற் பிள்ளை தம்பதிகளுக்குப் பிறந்தார்.

இலங்கையில் நன்கு அறியப்பட்ட சமூக சேவையாளரும், சமயச் சொற்பொழிவாளரும் ஆவார். ஈழத்தில் சைவத்துக்கும் தமிழுக்கும் பெரும் தொண்டாற்றியவர்.

ஏழை மக்களுக்கும் அநாதைப் பிள்ளைகளுக்கும் ஆதரவு இல்லங்கள் அமைத்து சேவையாற்றி வந்தார். யாழ்ப்பாணம் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவராகச் செயற்பட்டு வந்தார். "சிவத்தமிழ்செல்வி" என்று அழைக்கப்பட்டு வந்தார்.


அப்பாக்குட்டி 1929 ஆம் ஆண்டு மல்லாகம் அமெரிக்கமிஷன் பாடசாலையில் தனது ஆரம்பக் கல்வியை ஆரம்பித்தார். பின்னர் தனது இடைநிலைக் கல்வியை மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலையில் தொடர்ந்தார். 1940 ஆம் ஆண்டு க.பொ.த. (சா.த) (ஆண்டு 10) பரீடசையில் சித்தியடைந்ததையடுத்து 1941 ஆம் ஆண்டு சுன்னாகம் இராமநாதன் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் ஆசிரியப் பயிற்சிக்குச் சேர்ந்தார்.தமிழையும் சைவ சமயத்தையும் முறையாகக் கற்று 1952 ஆம் ஆண்டு பாலபண்டிதராகத் தேர்வடைந்த இவர், 1958 இல் தமிழகத்தில் சைவப புலவர் பட்டத்தையும் பெற்றார். இவரது 31 ஆண்டுகள் ஆசிரியைப் பணியில் கடைசி 12 ஆண்டுகள் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் ஆசிரியையாகப் பணியாற்றி 1976 இல் ஓய்வுபெற்றார்.

ஈழத்துச் சிதம்பரம் என்றழைக்கப்படும் காரைநகர் சிவன் கோயிலில் ஆற்றிய சிறப்புச் சொற்பொழிவுக்காக "சிவத்தமிழ்ச் செல்வி" என்ற பட்டம் இவருக்கு வழங்கப்பட்டது. மேலும் "திருவாசகக் கொண்டல்", "செஞ்சொற் செம்மணி", "சிவஞான வித்தகி", "துர்க்கா புரந்தரி" போன்ற பதினைந்திற்கும் மேற்பட்ட பட்டங்களையும் பதக்கங்களையும் பெற்றுக்கொண்டார்.

திடீரென நோய் வாய்ப்பட்ட சிவத்தமிழ்ச் செல்வி சில வாரங்களாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் 2008 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15 ஆம் திகதி நண்பகல் 12.15 மணியளவில் காலமானார். 16 ஆம் திகதி ஜூன் மாதம் மாலை 4:00 மணிக்கு தெல்லிப்பழை இந்து மயானத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் மத்தியில் இவரது இறுதி நிகழ்வுகள் இடம்பெற்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவின் முத்துமாலைத் திட்டம்- பிரதான பங்காளியாக இலங்கை?




"String of Pearls" [21]

Chinese political influence or military presence astride oil routes.

வளர்ந்துவரும் சீன- இலங்கை உறவானது, இந்துமாகடலில் இலங்கையின் கேந்திர முக்கியத்துவத்தின் மீதான அமெரிக்க, இந்திய அக்கறையை கேள்விக் குறியாக்கியுள்ளது என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இவ்வாறு கொழும்பை தளமாகக் கொண்ட த சன்டே லீடர் ஊடகத்தில் டினேஸ்.டி.டொடம்கொட எழுதியுள்ளார்.

இலங்கை மீதான சீனாவின் அதிகரித்த செல்வாக்கையும், 'மிகவும் ஒத்துழைப்பான, இரு தரப்பு ஆதரவுமுள்ள' - சீன - இலங்கை இருநாடுகளின் மிக நெருக்கமான உறவை, இலங்கை அன்புக்கரம் நீட்டி அரவணைத்து ஏற்றுக்கொள்வதாக, இலங்கையின் வெளியுறவு அமைச்சர் ஜி.எல் பீரிஸ் குளோபல் ரைம்ஸ் என்ற ஊடகத்துடனான நேர்காணலில் தெரிவித்துள்ளார்.

சீனாவானது, இலங்கைக்கு மிக இக்கட்டான நேரங்களில் கைகொடுத்துள்ளதுடன், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இறுதிக்கட்டப் போரின்போது சீனாவானது இலங்கைக்கு இராணுவ உதவிகளைப் புரிந்த்தாகவும், இதே போன்று அமெரிக்கா தலைமையில் இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் பேரவைய்யில் முன்வைக்கப்பட்ட தீர்மானத்தை சீனா எதிர்த்ததன் மூலம் இலங்கைக்கு தனது ஆதரவை வழங்கியதாகவும், ஜி.எல்.பீரிஸ் தனது நேர்காணலின்போது தெரிவித்துள்ளார்.

எது எவ்வாறிருப்பினும், வளர்ந்துவரும் சீன- இலங்கை உறவானது இந்து மாகடலில் இலங்கையின் கேந்திர முக்கியத்துவம் மீதான அமெரிக்க, இந்திய அக்கறையை கேள்விக் குறியாக்கியுள்ளது என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

சீனாவின் முத்துமாலை மூலோபாயத்தில் இலங்கை மிகப்பிரதான பங்காளியாக மாறிவ்ருகிறது. ஆபிரிக்கா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளின் கடற்பிரதேசங்களில் சீனா தனது முக்கிய வளத்துறைகளை இணைப்பதற்கான கடல் வழித் தொடர்பாடல்களைக் குறிவைத்து அமெரிக்காவால் மேற்கொள்ளப்படும், கடல்சார் நடவடிக்கையை எதிர்ப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ள மூலோபாயமே முத்துமாலை எனக் கூறப்படுகிறது.

சீனாவின் முத்துமாலையில் சில முத்துக்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது. ஹைனான் தீவில் தரமுயர்த்தப்பட்ட இராணுவ வசதி வாய்ப்பு, வூடித் தீவின் விமான ஓடுதளம், பங்களாதேசின் சிற்றாகொங்கில் உருவாக்கப்பட்டுள்ள கப்பற்றுறை வசதி வாய்ப்பு, மியன்மாரின் சிற்வேயில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்கடல் துறைமுகம், இலங்கையின் அம்பாந்தோட்டை துறைமுகத்தில் அமைக்கப்பட்டுள்ள கப்பல் எரிபொருள் நிரப்பு நிலையம், பாகிஸ்தானின் க்வாடரில் அமைக்கப்பட்டுள்ள கடற்படைத் தளம் போன்றன சீனாவின் முத்துமாலை மூலோபாயத்தைச் சேர்ந்த சில முத்துக்களாகும்.

சீனாவின் பிரதான எண்ணெய் மற்றும் வாயு உற்பத்தி நிறுவனமான 'சீன தேசிய பெற்றோலிய கூட்டுத்தாபனம்' அண்மையில் மியன்மாரிலிருந்து சீனாவரை இயற்கை வாயுக் குழாய் கட்டுமானத் திட்டத்தை நிறைவு செய்துள்ளது. மலாக்கா நீரிணையில் ஏதாவது சாத்தியமான இராணுவ ஆக்கிரமிப்பைத் தவிர்ப்பதற்கான சீனாவின் மூலோபாய வழியாகவே இந்த எண்ணெய் வாயுக்குழாய் காணப்படுகிறது.

சீனாவின் இவ்வாறான முத்துக்கள் எண்ணெய் வளத்தை தடையின்றிப் பெற்றுக் கொள்வதை உறுதிப்படுத்துகிறது. அடுத்து பத்து ஆண்டுகளில் சீனாவின் எண்ணெய் நுகர்வானது அண்டுக்கு சராசரி 5.8 சதவீத வளர்ச்சியைக் கொண்டிருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. சீனா ஏற்றுமதி செய்யும் 70 சதவீத எண்ணெய் வளமானது ஆபிரிக்கா மற்றும் மத்திய கிழக்கிலிருந்து கடல்வழியாகப் பெறப்படுகிறது. இதன் மூலம், இந்துமாகடல் மற்றும் தென்சீனக் கடலினூடாக சீனாவானது, மத்தியகிழக்கு மற்றும் ஆபிரிக்காவிலிருந்து எண்ணெய் இறக்குமதி செய்வதில் அமெரிக்காவின் கடல்வழி அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதை உறுதிப்படுத்துவதற்கு சீனாவின் முத்துமாலை உதவுகிறது.

ஆசியாவில் சீனாவின் செல்வாக்கு அதிகரித்த நிலையில், 2011ல் அமெரிக்காவானது, தனது பிரதான மூலோபாயக் குவிப்பை ஆசிய-பசுபிக் பிராந்தியத்தை நோக்கி நகர்த்தவுள்ளதாக ஒபாமா அரசாங்கம் தொடர்ச்சியாக அறிவித்தல்ளை மேற்கொண்டிருந்தது. அமெரிக்காவின் இந்த மூலோபாயமானது பசுபிக்கை நோக்கி மையங்கொள்ளுதல்-'Pivot to the pasific என அறியப்பட்டுள்ளது.

எது எவ்வாறிருப்பினும், இந்து மாகடல் பிரதேசத்தில் அமெரிக்காவானது, தனக்கான எந்தவொரு ஆதரவு நாட்டையும் கொண்டிருக்கவில்லை. இந்துமாகடல் பிராந்தியத்தில் உள்ள டியாகோகார்சியா தீவல் அமெரிக்க இராணுவப் பிரசன்னம் காணப்படுவதானது, இந்தப் பிராந்தியத்தில் அமரிக்காவின் மூலோபாய ரீதியான அக்கறையைப் பிரதிபலிக்கிறது.

இதற்கும் மேலாக மாலைதீவில் இராணுவத் தளங்களை அமைப்பதற்காக அமெரிக்காவானது, மாலைதீவு அரசாங்கத்துடன் 'படைத் தகுதி ஒப்பந்தம்' ஒன்றை மேற்கொள்ளத் திட்டமிடுவதானது அமெரிக்காவின் டியாகோ கார்சியா இராணுவ மூலோபாயத்தை மேலும் விரிவுபடுத்துவதைச் சுட்டி நிற்கிறது.

அமெரிக்க-சீன மூலோபாயப் போட்டியின் விளைவாகவே, அமெரிக்காவானது, ஆசியாவை மையப்படுத்தித் தனது செல்வாக்கை விரிவுபடுத்துவதாக, மூலோபாய மற்றும் அனைத்துலக கற்கைகளுக்கான மையம் குறிப்பிட்டுள்ளது.

இவ்வாறான சூழலானது, சீனா மற்றும் அமெரிக்கா ஆகியன ஆசிய, பசுபிக் பிராந்தியத்தில் தமக்கான கூட்டணிகளை உருவாக்க முயற்சிப்பதைக் காண்பிக்கிறது. இந்தியா மற்றும் யப்பான் போன்றன அமெரிக்காவின் கூட்டணி நாடுகளாக உள்ள அதேவேளையில், சீனாவான்து பாகிஸ்தான், இலங்கை, பங்களாதேஷ், மியன்மார், கம்போடியா மற்றும் வியட்நாம் போன்ற நாடுகளைத் தனது கூட்டணியில் இணைத்துள்ளது.



இவ்வாறான கேந்திர முக்கியத்துவம் மிக்க பின்னணியில், சீனா மற்றும் இலங்கை ஆகியன தமது பாதுகாப்பு ஒத்துழைப்பை மேலும் ஆழமாக்குவது தொடர்பில் உடன்பட்டுள்ளன. "எமக்கு யார் முக்கியத்துவமாக உள்ளார்கள் என்பதை நாம் நன்றாகப் புரிந்து வைத்துள்ளோம்" என இலங்கையின் பாதுகாப்புச் செயலர் ஒரு தடவை சுட்டிக்காட்டியிருந்தார். இந்தக்கூற்றைப் போன்று இலங்கையானது, சீனாவுடன் மூலோபாயம் சார்ந்த உறவை மிக ஆழமாகப் பேணிவருகிறது.

எது எவ்வாறிருப்பினும், இப்புதிய மூலோபாய ஒத்துழைப்பானது, அமெரிக்கா மற்றும் இந்தியாவுக்கு ஆபத்தான சமிக்ஞைகளை அனுப்பும். இவ்வாறான மூலோபாயம் சார்ந்த பதற்றநிலையானது, இலங்கை வெளியுறவு அமைச்சர் ஜி.எல் பீரிஸ் கூறியது போன்று "கடல்சார் நகர்வுகள் எந்தவொரு நாட்டுக்கும் செலவீனத்தை ஏற்படுத்தாது. இதனால், எந்தவொரு நாட்டுக்கும் ஆபத்தையும் எற்படுத்தாது" என இலங்கை அரசாங்கம் கருதுகிறது.

"நாங்கள் ஒருவருக்கொருவர் அச்சுறுத்தலாக விளங்கமாட்டோம், அத்துடன் நாங்கள் ஒருவரையொருவர் கட்டுப்படுத்தவும் மாட்டோம்" என சீனாவின் புதிய பிரதமர் லீ கீகியாங் முதன்முதலாக இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது இந்தியப் பிரதமரிடம் உறுதியளித்திருந்தார்.

இருப்பினும், இலங்கையானது இந்துமாகடலின் மூலோபாயப் போட்டியில் நடுநிலையாகச் செயற்பட வேண்டிய தேவையுள்ளது. குறிப்பாக இந்தோ-லங்கா உறவுநிலையைக் கருத்திற்கொண்டு இலங்கை இந்த மூலோபாயப் போட்டியில் நடுநிலையுடன் செயற்பட வேண்டும்.

"சீனாவானது, இந்தியாவின் மிகப் பெரிய வர்த்தகப் பங்காளியாக உள்ள போதிலும் சீனா, இந்தியாவுக்கு அச்சுறுத்தலாக உள்ளதாக 80 சதவீதத்திற்கும் மேற்பட்ட இந்தியர்கள் கருதுகிறார்கள்" என அண்மையில் அவுஸ்திரேலியாவின் லொவி நிறுவகத்தால், மேற்கொள்ளப்பட்ட கருத்து வாக்கெடுப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இந்தியாவுடனான தனது உறவைக் கருத்திற்கொண்டு இலங்கையானது நடுநிலையுடன் செயற்பட வேண்டிய தேவையுள்ளது.

புதினப்பலகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்படவேண்டும்

## எதிர்க் கட்சி தலைவர் ரணில்



(கொழும்பு)

**நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறைமையை இல்லாதொழிக்காது போனால், மக்களின் ஜன நாயக உரிமைகள் இல்லாதுபோய், நாட்டில் சர்வாதிகார ஆட்சி ஏற்படும் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.**

கண்டி முஸ்லிம் சமூகத்தினர் மத்தியில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

தற்போதுள்ள ஜனாதிபதி ஆட்சி முறைமையின் கீழ், சிங்கள, தமிழ், முஸ்லிம் என எந்த இன மக்களினதும் ஜனநாயக் உரிமைகள் பாதுகாக்கப்பட மாட்டாது எனவும் அவர் கூறியுள்ளார்.

கண்டி ரிவடோல் விடுதியில் நடைபெற்ற இந்த கூட்டத்தின் போது, ஐக்கிய தேசியக் கட்சி தயாரித்துள்ள புதிய அரசியலமைப்பு சட்டம் குறித்து முஸ்லிம் சமூக மக்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சி தயாரித்திருப்பது அரசியல் அமைப்புச் சட்டம் அல்ல. அரசியல் அமைப்புச் சட்டத்திற்கான யோசனைகள் மாத்திரமே எனவும் ரணில் விக்ரமசிங்க கூறியுள்ளார்.

இந்த யோசனைகள் விரிவான கலந்துரையாடல்களுக்கு உட்படுத்தப்பட வேண்டும். புதிய அரசியல் அமைப்புச் சட்டம் குறித்து முஸ்லிம் மக்கள் கவனம் செலுத்த வேண்டும். தற்போதுள்ள ஜனாதிபதி ஆட்சி முறைமையில் முஸ்லிம் மக்களுக்கு கிடைத்த நன்மை என்ன எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

அனைத்து இன மக்களையும் பாரபட்சமின்றி கவனிக்கும் அரசியலமைப்பு முறைமையொன்று நாட்டுக்கு அவசியம். நாம் அனைவரும் இலங்கை வாழ் மக்கள். அனைவரும் ஒரு கொடியின் கீழ் வரவேண்டும்.

அனைத்து மக்களையும் ஒரு கொடியின் கீழ் கொண்டு வருவதற்காகவே ஸ்ரீவிக்ரம ராஜ சிங்க மன்னனின் கொடியில் இரண்டு வர்ணங்கள் சேர்க்கப்பட்டன. டி.எஸ்.சேனாநாயக்க, ஜீ.ஜீ.பொன்னம்பலம், சேர்.ஜோன் கொத்தலாவல உள்ளிட்ட அனைத்து கட்சித் தலைவர்களும் இந்த கொடியை ஏற்றுக் கொண்டனர்.

இலங்கை என்பது அனைவரையும் இணையாக மதிக்கும் நாடு, இந்துக்கோயில், முஸ்லிம் பள்ளி, விகாரை என அனைத்து மதத் தலங்களும் சமனாக மதிக்கப்படுகிறது. அதேபோல் அந்த மதத் தலங்கள் பாதுகாக்கப்படுகின்றன. நாட்டில் உள்ள அனைத்து மொழிகளும் பாதுகாக்கப்பட வேண்டும்.

இனங்கள் மற்றும் அவர்களின் மதங்களை சமனாக பாதுகாக்க வேண்டும் . சகல கலாசாரங்களையும் பாதுகாக்க வேண்டும். மத வழிபாட்டு சுதந்திரம் இருக்க வேண்டும். நீதிமன்றம் தயார் நிலையில் இருக்க வேண்டும். நீதிமன்றம் உறங்கிவிட்டால் என்ன நடக்கும். சுயாதீன ஆணைக் குழுக்கள் அவசியம். அந்த ஆணைக்குழுக்கள் பாதுகாக்கப்பட வேண்டும் எனவும் ரணில் விக்ரமசிங்க மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)



உலக சுற்றுச் சூழல் வாரத்தை முன்னிட்டு வடமாகாண சபையினால் ஒழுங்கு செய்யப்பட்ட மரநடுகை நிகழ்வு நேற்று யாழ். பழைய பூங்காவில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும், வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி மரம் நாட்டுவதையும் படங்களில் காணலாம். [படங்கள்:– என்.குமார்]

# சட்டவிரோதமான செயற்பாடு; நபருக்கு விளக்கமறியல்

அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள இரத்மலானை விமான நிலையத்திற்குள் சட்டவிரோதமான முறையில் நுழைவதற்கு முயன்ற ஒருவரை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

கிம்புலனிலுள்ள அந்திட்டிய வாவியின் ஊடாகவே குறித்த சந்தேக நபர் அதியுயர் பாதுகாப்பு வலயத்திற்குள் கடந்த செவ்வாய்க்கிழமை நள்ளிரவு 12 மணியளவில் நுழைவதற்கு முயன்றுள்ளார்.

இதன்போதே குறித்த நபரை விமானப்படையினர் கைது செய்துள்ளனர். பின்னர் அவரை மேலதிக விசாரணைகளுக்காக கல்கிஸைப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

சந்தேக நபரை பொலிஸார் கல்கிஸை நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் ஆஜர்படுத்திய போது அவரை 26 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதவான் அவரை மனநல வைத்தியரிடம் பரிசோதனைக்கு உட்படுத்தி அறிக்கையொன்றை பெற்றுக்கொள்ளுமாறு உத்தரவிட்டார். (அ-2)

# ஐ.தே.கட்சி குழுவினர் மு.கா.வினரை சந்திப்பர்

ஐக்கிய தேசிய கட்சியின் உத்தேச அரசியல் யாப்பு குறித்து, விரைவில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் பேசப்படும் என்று கட்சியின் பொது செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு நேற்றுமுன்தினம் வழங்கிய செவ்வியில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியினால் முன்வைக்கப்பட்டுள்ள உத்தேச அரசியல் யாப்பு குறித்து, தமிழ்த்தேசிய கூட்டமைப்பு உள்ளிட்ட பல்வேறு தரப்பிடம் இருந்து கருத்துக்கள் கோரப்பட்டுள்ளன.

அவ் வகையில் இந்த விவாதத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸையும் இணைத்துக் கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளதாக திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே 13 ஆவது திருத்தச் சட்டத்தின் மீதான சீராக்கல்கள் மற்றும், மாகாண அதிகாரங்களை கைப்பற்றுதல் போன்ற விடயங்களுக்கு ஸ்ரீலாங்கா முஸ்லிம் காங்கிரஸ் எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்ற நிலையில், அதிகாரங்களுக்கு முக்கியத்துவம் வழங்கியுள்ள ஐக்கிய தேசிய கட்சியின் அரசியல் யாப்பு குறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அக்கறை செலுத்தலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில் எதிர்வரும் ஓரிரு தினங்களில் ஐக்கிய தேசிய கட்சியின் பிரதிநிதிகள் குழு ஒன்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை சந்திக்கும் என்றும் திஸ்ஸ அத்த நாயக்க குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# வாக்கெடுப்பு முறை குறித்து ஆராய அரசாங்கம் தீர்மானம்

(கொழும்பு)

சுவிட்சர்லாந்தில் நடைமுறையில் உள்ள சர்வஜன வாக்கெடுப்பு முறை குறித்து ஆராய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அரசியல் நெருக்கடிகள் ஏற்படும் போது, மக்களின் கருத்துக்களை அறிந்து கொள்வதற்காக இந்த சர்வஜன வாக்கெடுப்பு வெற்றியளிக்கும் என அரசாங்கத்தின் ஆலோசகர் ஒருவர், அரசாங்கத்திடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

13 ஆவது அரசியல் அமைப்புத் திருத்தம் தொடர்பாக சுவிஸ் முறையில் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்தும் யோசனை ஏற்கனவே அரசாங்கம் மற்றும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகிய தரப்பிடம் முன்வைக்கப்பட்டுள்ளது. சுவிஸ் சர்வஜன வாக்கெடுப்பு முறைமை சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வாக்கெடுப்பு முறையாகும்.

இந்த சர்வஜன வாக்கெடுப்பு முறையை மேற்கொள்வதற்கான அறிக்கை ஒன்றை இலங்கைக்கு வழங்க சுவிஸ் அரசாங்கம் இணக்கம் வெளியிட்டுள்ளது. (அ-2)

# அரபுவசந்த எழுச்சி ஏற்படாது ஆயினும் கண்காணிப்பு அவசியம்

## பாதுகாப்பு செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

மிகவும் விருப்பத்துக்குரிய அரசியல் தலைமைத்துவம் கொண்ட ஒரு ஜனநாயக நாடாக இலங்கை இருப்பதனால் அரபுவசந்தம் போன்ற எழுச்சிகள் இங்கு ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் குறைவு என்று பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் முதுமாணி மற்றும் கலாநிதி பாடநெறிகளுக்கான ஆரம்ப விழா நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

அரசாங்கம், நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை கொண்டிருப்பதனால் அவ்வாறான எழுச்சிகள் உருவாவதற்கான சந்தர்ப்பம் மிக மிக குறைவாகும். என்றாலும் இந்த வகையான அச்சுறுத்தலை கண்காணிக்க வேண்டிய தேவையுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

பேஸ்புக், டுவிட்டர் போன்ற புதிய சமூக ஊடகங்களின் ஊடாக நாடுகளை குழப்புவதற்கான ஆற்றல்களை கொண்டிருக்கின்றன என்பதை துனிசியா, லிபியா, எகிப்து போன்ற நாடுகளில் கண்டிருக்கின்றோம் என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

இந்த சமூக ஊடகங்களை பயன்படுத்தி குழப்பத்தை ஏற்படுத்துவதற்கு அதிகமான ஆட்கள் தேவையில்லை. எனவே, இவர்களை பாரம்பரிய தேசிய பாதுகாப்பு முறையில் கட்டுப்படுத்தமுடியாது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே, புலனாய்வு அமைப்புகள் ஒன்றிணைக்கப்பட்ட கட்டளை அமைப்பின் கீழ் வேலை செய்வது அவசியமெனவும் அவர் தெரிவித்தார்.

சீனா, ரஷ்யா போன்ற சக்திவாய்ந்த நாடுகளுடன் தற்போதுள்ள நல்லுறவை மேலும் பலப்படுத்திக் கொள்வது அவசியம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

வீட்டோ அதிகாரமுள்ள இந்த நாடுகள் இலங்கை மீதான சர்வதேச நடவடிக்கைகள் மீது செல்வாக்கு செலுத்த வல்லன என்றும் அவர் தெரிவித்தார். (அ-2)

# “உயர்நீதிமன்றில் இலத்திரனியல் விளம்பரம்”

வழக்கு விபரங்கள் தொடர்பில் மக்கள் தெரிந்துக் கொள்வதற்காக உயர் நீதிமன்றத்தில் இலத்திரனியல் விளம்பர பலகையை பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸின் பணிப்புரையின்பேரிலேயே இந்த விளம்பரப் பலகை பொருத்தப்படவுள்ளது.

நாளாந்தம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் வழங்குகள் தொடர்பிலான விபரங்களே இவ்வாறு விளம்பரப்படுத்தப்படவுள்ளன.

உயர் நீதிமன்றத்தின் வாயிலிலேயே இந்த இலத்திரனியல் விளம்பர பலகை பொருத்தப்படவுள்ளது. அதில் ஒவ்வொரு நாட்களும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் வழக்குகள், விசாரணை நடைபெறும் அறையின் இலக்கம், நீதியரசர்களின் விபரங்கள் போன்றவற்றை பார்வையிட முடியும. (அ-2)

# சதங்கை நாதம் நடன ஆற்றுகை

நல்லைக் கலாமந்திர் மாணவர்கள் வழங்கும் சதங்கை நாதம் நடன ஆற்றுகை நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வுநிலை மாவட்ட நீதிபதி விகடகவி மு.திருநாவுக்கரசு, சிறப்பு விருந்தினராக ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன், கௌரவ விருந்தினராக யாழ். வலய ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர் ஸ்ரீமதி பத்மினி செல்வேந்திரகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதியோர் மற்றும் அநாதை விடுதிகளில் தங்கியிருப்போருக்கும் வாக்காளர் பதிவு

## 2013 வாக்காளர் பதிவில் நடைமுறை

**(கொழும்பு)**

**2013 வாக்காளர் இடாப்பு திருத்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் வைத்தியசாலைகளில் நீண்டகாலமாக தங்கியிருந்து சிகிச்சை பெறுவோர் முதியோர் இல்லங்கள் மற்றும் அநாதை விடுதிகளில் வசிப்போரையும் வாக்காளராகப் பதிவதில் கவனம் செலுத்தப்பட்டு வருவதாக தேர்தல் செயலகம் தெரிவித்தது.**

இது தொடர்பில் அந்தந்த பிரதேசங்களிலுள்ள கிராம சேவகர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் இவர்கள் தொடர்பில் தகவல்களை வழங்குவதில் சம்பந்தப்பட்டோரின் குடும்பத்தினர் கிராம சேவகர்களுக்கு பூரண ஒத்துழைப்பினை வழங்க வேண்டுமெனவும் பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம். மொஹமட் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வாக்காளர் இடாப்பு திருத்த நடவடிக்கைகளின் முன்னோடியாக தற்போது 2013 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியல்கள் நாட்டின் சகல பகுதிகளிலும் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

அவற்றை மீளப் பெறும் நடவடிக்கைகள் எதிர்வரும் ஜுலை மாதம் 15 ஆம் திகதி வரை இடம்பெறும். வாக்காளர்களாகத் தம்மைப் பதிவு செய்ய தகுதியுள்ளவர்கள் கண்டிப்பாகதம்மை பதிவு செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

குறிப்பாக வாக்குரிமை தொடர்பில் தெளிவில்லாத மக்களும் அது அவசியமற்றது என நினைப்பவர்களும் அதிகாரிகளை நெருங்க முடியாத அளவில் உயர் மட்டத்தில் இருப்போரும் தம்மை வாக்காளர்களாகப் பதிவு செய்து கொள்வது மிகக் குறைவே. இவர்கள் விடயத்தில் இம்முறை கூடுதல் கவனம் செலுத்தப்படவுள்ளது. அதேவேளை வைத்தியசாலைகளில் நீண்ட காலமாகத் தங்கியிருந்து சிகிச்சை பெறுபவர்கள், மனநோயாளிகளாகவுள்ளவர்கள், வயோதிபர்மடம்மற்றும் அநாதை மடங்களில் உள்ளவர்கள் பெருமளவில் காணப்படுகின்றனர்.

இவர்களை வாக்காளர்களாகப் பதிவதில் தேர்தல் செயலகம் அக்கறை காட்டி வருகின்றது. எனினும் இவர்களை அந்தந்தப் பகுதி கிராம சேவகர்களிடம் இனங்காட்டி தேர்தல் இடாப்பில் அவர்கள் பதியப்படுவதற்கு பூரண ஒத்துழைப்பை சம்பந்தப்பட்டவர்கள் வழங்க வேண்டும் எனவும் பிரதித் தேர்தல் ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# அவுஸ்திரேலியா செல்ல முற்பட்ட 43 இலங்கையர்கள் இந்தோவில் கைது

சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியா செல்ல முற்பட்ட 43 இலங்கையர்களை இந்தோனேசிய அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

இந்தோனேசியாவின் சியான்ஜர் பகுதியில் வைத்தே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஜாவா தீவின் கடல் ஊடாக அவர்கள் அவுஸ்திரேலியா செல்வதற்கு தயாரான நிலையில் இருந்தபோது அவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்னர் தற்போது அவர்கள் அனைவரும் இந்தோனேசியாவின் குடிவரவுத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

விமானம் மூலம் இந்தோனேசியாவுக்குள் நுழைந்த அவர்கள் அங்கிருந்து படகு ஒன்றின் மூலம் அவுஸ்திரேலியா செல்லத் திட்டமிட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# இலங்கை விவகாரத்தில் இந்தியா ஒதுங்க வேண்டும்

## ஜாதிக ஹெல உறுமய போர்க் கொடி

(கொழும்பு)

இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட முனைவதாக இந்தியா மீது இலங்கையின் ஆளும் கூட்டணியில் அங்கம் வகிக்கும் ஜாதிக ஹெல உறுமய குற்றம்சாட்டியுள்ளது.

சர்ச்சைக்குரிய 13 ஆவது திருத்தச் சட்டத்தில் திருத்தம் செய்வது தொடர்பாக இலங்கை அரசாங்கத்துக்கு இந்தியா அழுத்தங்களைக் கொடுத்துள்ளதாக ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சீன செய்தி நிறுவனமான சின்ஹுவாவிடம் பேசிய ஜாதிக ஹெல உறுமயவின் பேச்சாளர் நிசாந்த சிறி வர்ணசிங்க இந்தியாவின் நடவடிக்கைகள் இலங்கை மக்களிடையே ஆத்திரத்தை ஏற்படுத்தும்.

எமது உள்நாட்டு விவகாரங்களில் இருந்து இந்தியா ஒதுங்கி நிற்க வேண்டும். அவர்களுக்கு கவலைகள் இருந்தால், அது தொடர்பாக இலங்கை அரசாங்கத்துடன் நேரடியாகப் பேச வேண்டும்.

விடுதலைப் புலிகளின் ஆயுதங்களைக் களையும் முயற்சியில் தோல்வி கண்ட இந்தியாவுக்கு 13 ஆவது திருத்தத்தை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தும்படி அழுத்தம் கொடுப்பதற்கு எந்த உரிமையும் கிடையாது என்றும் தெரிவித்துள்ளார். (அ-2)

# பாலர் பாடசாலை விளையாட்டுவிழா

(சித்தன்கேணி)

சித்தன்கேணி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கமும் முகாமைத்துவக் குழுவும் இணைந்து நடத்தும் பாலர் பாடசாலையின் 48 ஆவது ஆண்டு விளையாட்டு விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சித்தன்கேணி பிள்ளையார் ஆலய வீதியில் நடைபெறவுள்ளது.

மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திருமதி அஜிதா சிவகரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக ஊர்காவற்றுறை பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் ச.ஐங்கரன், வலி.மேற்கு சுழிபுர பிரதேச சபை தவிசாளர் திருமதி ஐ.நாகறஞ்சினி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிகழ்வின் கௌரவ விருந்தினர்களாக சித்தன்கேணி சிவன் ஆலய சிவாச்சாரியார் சிவஸ்ரீ சா. வாசுதேவக் குருக்கள், சித்தன்கேணி பிள்ளையார் ஆலய சிவாச்சாரியார்கள் சிவஸ்ரீ ச.மதுசூதனக் குருக்கள், பிரம்மஸ்ரீ நா. கமலநாத சர்மா ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக வலிகாம கல்வி வலய ஆரம்ப பிள்ளை பருவ அபிவிருத்திப் பிரிவின் உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.குகணேசன், வலி.மேற்கு பிரதேச செயலகத்தின் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆ.கோகுலன், வலி.மேற்கு பிரதேச சபையின் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி. ஹேமா சிவசோதி, சித்தன்கேணி கிராம சேவை அலுவலர் த.சர்வானந்தா, சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலய அதிபர் நா. ஜெயராணி, முன்பள்ளி இணைப்பாளர் செல்வி நா. நிறஞ்சனா, முன்பள்ளி ஆசிரியை சாயத் தலைவி திருமதி ஜெ. அஜந்தமதி ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-17)

# மணிபல்லவத்தில் மஹோற்சவம்




## இன்று கைலைக்காட்சி திருவிழா

### நல் உலகைக் காத்திடுவாய்

நித்தம் கடலரவம் துதிபாட உறைபவளே!
திக்கெட்டும் வரும் அடியார் குறை தீர்த்து அருள்பவளே!
சித்தம் களி கூர்ந்து சீர் நயினை உறை தாயவளே!
எத்திக்கும் தமிழ் கூறும்நல் உலகைக் காத்திடம்மா!

பரமன் மகன்,
இணுவில் மேற்கு.

### உலகைக் காத்திடு நீயம்மா!

தரணியைக் காத்திடும் ஈஸ்வரி தாயே
என் குழந்தைகளைக் காத்திடும் தேவியே
நாகம் வழிபட்ட அன்னையும் நீயே
நாமும் வழிபடும் தெய்வமும் நீயே!
உலகினைக் காத்திடும் தாயும் நீயம்மா
உன் காலடி சரணம் நானம்மா
என் குழந்தை பிணி தீர்த்திடம்மா
நயினையிலே வாழும் அரசி நீயம்மா!
உன் பாதம் சரணம் நானம்மா
என் குறை தீர்த்திடு நீயம்மா
உன்னடி சரணம் நாமம்மா
உலகைக் காத்திடு நீயம்மா!

யசிதீபன், அரியாலையூர்.

### அருள் தருவாய் வளம் பெருக!

ஆழ்கடலின் மத்தியிலே அலைக்கரங்கள் தாலாட்ட
பார்போற்றும் நாயகியாய் வீற்றிருக்கும் கற்பகமே
சூழ்கலிகள் பலவரினும் வேரோடு களைந்துவிடும்
சீர்மேவு நயினைப்பதி தனிலுறையும் நல்லணங்கே
பாழ்பட்டுநின்ற பழவினைகள் தனையகற்றி
வாழ்வுதனை வளமாக்க வழங்கி விடு நல்லருளை...

கெங்கா. சுகந்தன்,
தாவடி.

### அருள் தருவாய் அன்னையே!

அலைகடல் மத்தியில் அருளாட்சி புரியும்
அன்னையவள் பாதம் தொழுவோம்
பாரெல்லாம் பரந்திருக்கும் பக்தர் கூட்டம்
பாவத்தை போக்கிட உன்பாதம் தேடிவர
நாகத்தில் நடமாடும் நயினை அன்னையே
நம்பியவர் வாழ்வில் நன்மைகளைச் செய்திடுவாய்
அலைகடலில் ஆர்ப்பரிக்கும் அம்மாவே
அனுதினமும் உனைத் தொழுவோம் அருள் தருவாய்

ரேவதி தர்மா,
மாகியப்பிட்டி.

### அருள்வாயே தாயே

கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பே
கற்கண்டே களிரமே
நல்லாரும் பொல்லாரும் வாழ
நலம் அளிக்கும் நாயகியே
பல்லோரும் பணிந்து ஏத்திடவே
நயினை பதிவாழ் நான் முகியே
எல்லாரும் எல்லாமும் பெற்றிட
எந்நாளும் இனிதருள்வாயே

குருநேசன்,
பண்ணாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முல்லை. கல்வி வலயத்தின்

# க.பொ.த (சா/த) பெறுபேற்று சித்தி வீதம் அதிகரிப்பு

(முல்லாவி)

முல்லை. கல்வி வலயத்தின் கீழ் உள்ள பாடசாலைகளிலிருந்து கடந்த 2011ஆம் ஆண்டு க.பொ.த சர்தாரண தர பரீட்சைப் பெறுபேறுகளின் சித்திவீதத்தைவிட 2012 ஆம் ஆண்டு பரீட்சை எழுதிய மாணவர்களின் சித்திவீதம் அதிகரித்துள்ளதாக முல்லை. வலய கல்விப் பணிப்பாளர் மாணிக்கவாசகர் ராஜகுமார் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

முல்லை. கல்வி வலயத்தின் கீழ் 63 பாடசாலைகள் உள்ளன. இவற்றில் மக்கள் மீள்குடியேற்றத்தின் பின் 59 பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

வன்னியில் இடம்பெற்ற இறுதிப்போர் நடவடிக்கை காரணமாக பல மாணவர்கள் உடல், உளரீதியாக பாதிக்கப்பட்ட நிலையிலும் பௌதீக வளங்கள் அழிக்கப்பட்ட நிலையிலும் மாணவர்கள் தமது கல்வியை தொடர்ந்திருந்தனர். இம்மாணவர்களின் உள ரீதியான ஆற்றுகைப்படுத் தல்களுக்காக பல கல்வி நடவடிக்கைகளைமேற்கொண்டிருந்தோம்.

இதனுடைய வெற்றிதான் மாணவர்களின் கல்வியில் ஏற்பட்டுள்ள மாற்றமாகும்.

முல்லைத்தீவு கல்வி வலயத்தின் கீழ் உள்ள கரைது, றைப்பற்று கல்விக்கோட்டம் 2011 ஆம் ஆண்டின் க.பொ.த சாதாரண தர பரீட்சையின் சித்தி வீதத்தின் அடிப்படையில் 43. 55 வீதமாக இருந்தது. இச் சித்திவீதம் கடந்த ஆண்டு 49.03 வீதமாகவும் புதுக்குடியிருப்பு கல்விக் கோட்டம் 2011 ஆம் ஆண்டு 27.80 வீதமாகஇருந்துகடந்த ஆண்டு 40.25 வீதமாகவும் வளர்ச்சியடைந்ததன் காரணமாக வலயங்கள் ரீதியாக முல்லை. கல்வி வலயம் 36.24 வீதமாக இருந்து கடந்தாண்டு 44.61 வீதமாக அதிகரித்துள்ளது.

பிரதான பாடங்களை நோக்கில், தமிழ்மொழி 2011 ஆம் ஆண்டு 67.67 வீதமாகவிருந்து, கடந்தாண்டு 72.99 வீதமாகவும் கணித பாடத்தில், 38.54 வீதத்திலிருந்து 45. 5 வீதமாகவும் விஞ்ஞான பாடத் தில் 37.84 வீதத்திலிருந்து 43.4 வீதமாகவும் ஆங்கில பாடத்தில் 11.51 வீதத்திலிருந்து 13.45 வீதமாகவும் வரலாற்று பாடத்தில் 52.85 வீதத்திலிருந்து 42.51 வீதமாகவும் உள்ளன.

எதிர்வரும் ஆண்டுகளில் க.பொ.த சாதாரணம், க.பொ.த உயர்தரம் ஆகிய பரீட்சைகளில் மாணவர்களின் சித்தி வீதத்தை அதிகரிப்பதற்காக பல ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-3-15)

# கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

(பூந்தோட்டம்)

வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டிகள் இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிறுக்கிழமையும் நாளை மறுதினம் திங்கட்கிழமை ஆகிய தினங்களில் ஓமந்தை மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கமைய இன்று சனிக்கிழமை 15, 17, 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான போட்டியும் நாளையும் நாளை மறுதினமும் 15, 17, 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான போட்டியும் நடைபெறவுள்ளதாக மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் சத்தியபாலன் அறிவித்துள்ளார். (அ-3-266)

# கருத்தரங்கு

(பூந்தோட்டம்)

வவுனியா மாவட்ட பாடசாலைகளிலிருந்து தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான முன்னோடிக் கருத்தரங்கு எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிக்கு நகர சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சம்பத் வங்கியின் வவுனியா கிளையினரால் நடத்தப்படவுள்ள இக்கருத்தரங்கில் கலந்து கொள்ள விரும்பும் மாணவர்களை மேற்படி கிளையினூடாக பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவுறு த்தப்பட்டுள்ளது. (அ-3-266)

# வவு.வடக்கு பி.செ.உத்தியோகத்தர்கள் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம்



(குருமன்காடு)

வவுனியா வடக்கு பிரதேச செயலக உத்தியோகத்தர் ஒருவரை நெடுங்கேணி பொலிஸார் தாக்கியதை கண்டித்து வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இச் சம்பவம் தொடர்பில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் தெரிவிக்கையில்,

நேற்று முன்தினம் **நெடுங்கேணி பிரதேச விளையாட்டு** விழா இடம் பெற்றபோது மைதானத்தில் இருந்து தனது விடுதிக்கு சென்ற சமயம் பொலிஸார் மறித்தபோதிலும் அதனை அவதானித்த போதிலும் அதனை அவதானிக்காத நிலையில் அவர் மோட்டார் சைக்கிளை நிறுத்தாது தனது விடுதிக்கு சென்றபோது பின் தொடர்ந்து சென்ற பொலிஸார் அவரை விடுத்திக்குள் வைத்து தாக்கியதுடன் கைது செய்து பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

இதன் காரணமாக பொலிஸாரிடம் கலந்துரையாடுவதற்காக சென்ற பிரதேச செயலாளரை நிலையத்தின் பொறுப்பதிகாரி நீண்டநேரம் சந்திக்காது காத்திருக்க வைத்ததுடன் உதவி பிரதேச செயலாளரை போக்குவரத்து பொலிஸார் தரக்குறைவாக நடத்தினர். எனவே, நாம் இதனை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்தினோம் என தெரிவித்தனர்.

இதேவேளை, வவுனியா வடக்கு பிரதேச செயலாளருக்கும் மாங்குளம் பொலிஸ் நிலையத்தின் தலைமையக பொலிஸ் அதிகாரிக்கும் இடையில் இச்சம்பவம் தொடர்பில் கலந்துரையாடல் இடம்பெற்று வருகின்றது. (அ-3-250)




# கொக்குத்தொடுவாய் பகுதியில் உப அஞ்சலகம் அமைக்க வேண்டும்

கொக்குத் தொடுவாயில் உப அஞ்சல் அலுவலகம் அமைக்கப்பட வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

1984 ஆம் ஆண்டுக்கு முன்னர் இப்பகுதியில் அஞ்சலகம் இயங்கியதாகவும் மக்கள் மீள்குடியமர்ந்து ஒரு வருடமாகியும் உப அஞ்சலகம் நிர்மாணிக்கப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டுகின்றனர்.


இதனால் இப்பகுதி மக்கள் கொக்கிளாய் உப அஞ்சல் அலுவலகத்திலேயே தமது தேவைகளை பெறுகின்றனர்.

மேற்படி பிரதேசத்தில் உப அஞ்சல் அலுவலகம் அமைப்பதற்கு காணி இருந்தும் கட்டடம் இல்லாத நிலை காணப்படுகின்றது.

உப அஞ்சல் அலுவலகம் இல்லாமையால் கொக்குத் தொடுவாய் வடக்கு, கொக்குத் தொடுவாய் தெற்கு, கொக்குத் தொடுவாய் மத்தி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 600 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

எனவே, துறைசார்ந்த அதிகாரிகள் சொந்த இடத்தில் உப அஞ்சல் அலுவலகத்தை நிர்மாணிக்க ஆவன செய்ய வேண்டுமென பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை ஒன்றை முன் வைத்துள்ளனர். (அ-3-267)

# மாணவர் கௌரவிப்பு



கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளில் இருந்து 2012 ஆம் ஆண்டில் க.பொ.த உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றி 3 பாடங்களிலும் ஏ தரச் சித்தியைப் பெற்ற 17 மாணவர்கள் கடந்த 10ஆம் திகதி கௌரவிக்கப்பட்டுள்ளனர். கணிதத்துறையில் 3ஏ பெற்ற மூன்று மாணவர்களும் வணிகத்துறையில் 3ஏ பெற்ற 14 மாணவர்களுமே இவ்வாறு கௌரவிக்கப்பட்டனர்.

கிளிநொச்சி மாவட்ட சதுரங்க சங்கத்தின் ஏற்பாட்டில் சுவிஸ் தமிழர் சதுரங்க ஒன்றிய அனுசரணையுடன் கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலக வணிகக் கல்வித் துறையினரால் இக்கௌரவிப்பு நிகழ்வு நடத்தப்பட்டது.

கிளிநொச்சி மகா வித்தியாலய பிரதான மண்டபத்தில் கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலக வர்த்தக பாட ஆசிரிய ஆலோசகர் தி.சிவரூபன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கிளிநொச்சி வலயக்கல்விப்பணிப்பாளர்க.முருகவேல், கிளிநொச்சி வலய வர்த்தக பாட உதவிக் கல்விப்பணிப்பாளர் எஸ்., சிறிக்குமரன், சுவிஸ் தமிழர் சதுரங்க ஒன்றிய தலைவர் கந்தையாசிங்கம் மற்றும் கலாநிதி அகளங்கன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

3 பாடங்களிலும் ஏ தரச் சித்தியைப் பெற்ற 17 மாணவர்களுக்கும் தலா 10 ஆயிரம் ரூபா வீதம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (அ-3)

# கொக்கிளாயில் பொலிஸ் நிலையம் அமைக்க வேண்டும்

(முல்லைத்தீவு)

கொக்கிளாய் பிரதேசத்தில் பொலிஸ் நிலையம் அமைக்கப்பட வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

கடந்த 1984 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்த மக்கள் 27 வருடத்திற்கு பின்னர் கடந்த 2011 ஆம் ஆண்டு மீள்குடியேறி ஒரு வருடம் கடந்த நிலையில் பொலிஸ் நிலையம் இன்மையால் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவிக்கின்றனர்.

பொலிஸ் நிலையம் இன்மையால் கொக்கிளாய் கிழக்கு, கொக்கிளாய் மேற்கு, கருநாட்டுக்கேணி, கொக்குதொடுவாய் வடக்கு, கொக்குத்தொடுவாய் தெற்கு, கொக்குத்தொடுவாய் மத்தி ஆகிய கிராம மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இங்கு வாழும் மக்கள் தமது தேவையின் நிமித்தம் 180 ரூபாவை செலவு செய்து முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்திற்கு செல்ல வேண்டிய நிலை உள்ளது.

இதில் மேற்குறித்த கிராமங்களில் உள்ள ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் சில சந்தர்ப்பங்களில் தமது அவசர தேவைகளுக்கும் இராணுவத்தினரை நாட வேண்டியுள்ளது.

எனவே, கொக்கிளாய் கிராமத்தில் பொலிஸ் நிலையம் அமைக்க உரிய தரப்பின் முன்வர வேண்டுமென அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (அ-3-267)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரிய போராளிக் குழுவுக்கு அமெரிக்கா நேரடி உதவி

(வோஷிங்கடன்)

**சிரியாவின் அஸ்ஸத் பகுதியில் குறைந்த அளவிலான இரசாயன ஆயுதத் தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாகவும், மேலும் நடத்தப்பட வாய்ப்பிருப்பதாகவும் புலனாய்வு அமைப்பு கூறியுள்ள நிலையில், சிரியாவில் போரிட்டுவரும் போராளிகளுக்கு நேரடியாக இராணுவ ஒத்துழைப்பு வழங்க அமெரிக்கா முடிவு செய்துள்ளது. இதனையடுத்து போராளிகளுக்கு முன்னறிவிப்பின்றி ஆயுதங்கள் வழங்கி உதவிட அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா முடிவு செய்துள்ளார். அத்துடன் சிரியாவிற்கு அமெரிக்க இராணுவத்தையும் அனுப்ப அவர் முடிபு எடுத்துள்ளார்.**



சிரியாவில் ஷியா பிரிவை சேர்ந்த ஜனாதிபதி ஆசாத் ஆட்சிக்கு எதிராக சன்னி மற்றும் கிறிஸ்தவ போராளிகள் சண்டையிட்டு வருகினறனர்.

கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக நடந்துவரும் சண்டையில் இதுவரை 93, ஆயிரம் பேர் வரையில உயிரிழந்துள்ளதாக ஐ.நா. அதிகாரி நவநீதம்பிள்ளை கூறியுள்ளார்.

அலெப்போ நகரை போராளிகளிடமிருந்து கைப்பற்ற ஜனாதிபதி படை தீவிரமாக சண்டையிட்டு வருகிறது. இதில் இரசாயன ஆயுதங்களை பயன்படுத்தி பொதுமக்கள் 150 பேரை ஜனாதிபதி படையினர் கொன்று விட்டதாக அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது.

இதனையடுத்து போராளிகளுக்கு முன்னறிவிப்பின்றி ஆயுதங்கள் வழங்கி உதவ ஜனாதிபதி பராக் ஒபாமா முடிவு எடுத்துள்ளதாக அமெரிக்கா கூறியுள்ளது.

ஜனாதிபதி படை இரசாயன ஆயுதங்களை பயன்படுத்துவது உறுதியாகியுள்ளதால் போராளிகளுக்கு அது போன்று இரசாயன ஆயுதங்கள்வழங்கப்படும் என்று இறுதி எச்சரிக்கை விடுத்துள்ளது.

லெபனான் ஹிஸ்புல்லா இயக்கத்தினரும், ஈரானும் சிரியாவிற்கு உதவுவதால் அமெரிக்கா இந்த மிரட்டலை விடுத்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, சிரிய பிரசினைக்கு அரசியல் தீர்வுகாண, அமெரிக்காவுடன் பிரிட்டனும், இணைந்து செயற்படமுடிவு செய்துள்ளது.

சிரியாவில் அமைதியை ஏற்படுத்துவது தொடர்பாக அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஜான் கெர்ரி, பிரிட்டன் வெளியுறவு அமைச்சர் வில்லியம் ஹேக்.ஆகியோர் வோஷிங்டனில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

இதன்போது வில்லியம் ஹேக் கூறுகையில்,

சிரியாவில் அமைதியை கொண்டு வருவதற்கு ஒருங்கிணைந்த மற்றும் உறுதியான நடவடிக்கை தேவை என்பதை உணர்ந்துள்ளோம். இது தொடர்பாக அமெரிக்காவுடனும், ஐரோப்பியாவில் உள்ள எங்களின் கூட்டாளி நாடுகளுடனும் இணைந்து செயற்படுவோம்.

ஜெனீவாவில் மேற்கொள்ளப்படும் பேச்சுவார்த்தைக் கூட்டங்கள் மூலம் இராச்சிய ரீதியாக பிரச்சினைக்கு தீர்வு காண முடிவு செய்துள்ளோம். சிரியாவில் உயிரிழப்புகளை தடுக்க பேச்சுவார்த்தைக்கு முன்வருமாறு ஜனாதிபதி ஆசாத்தை வலியுறுத்துவோம். இதன் மூலம், கிளர்ச்சியாளர்களையும் சிரிய ஜனாதிபதியையும் பேச்சுவார்த்தைக் கூட்டங்களில் பங்கேற்க வைத்து சுமுகத் தீர்வுகாண முடிவு செய்துள்ளோம்.

அமைதியான முறையில் தங்கள் எதிர்ப்பை தெரிவித்து வந்த கிளர்ச்சியாளர்கள் மீது ஆசாத்தின் இராணுவம் தாககுதலைத் தொடங்கிய தால் தான் உள்நாட்டுப் போர் ஏற்பட்டது என்பதை நாம் மறந்து விடக்கூடாது. இந்தப் போரினால், 15இலட்சத்துக்கும் மேறபட்ட மக்கள் அகதிகளாக வெளி நாடுகளில் தஞ்சமடைந்துள்ளனர். 40 இலட்சம் பேர் உள்நாட்டுக்குள்ளேயே இடம் பெயர்ந்து அவதிப்படுகின்றனர் என்றார். (அ-2)



ஈரான் நாட்டில் ஜனாதிபதி தேர்தலுக்கான வாக்கெடுப்பு நேற்றையதினம் நடைபெற்றது. இதன்போது முக்கிய தலைவர் ஆயத்துல்லா அலிகாமேனி வாக்களிப்பதைப் படத்தில் காணலாம்.

## 2025 ஆம் ஆண்டில்
# உலக மக்கள் தொகை 8.1 பில்லியனாக கூடும்

உலக மக்கள் தொகை எதிர்வரும் 2025 ஆம் ஆண்டளவில் 8.1 பில்லியனாக அதிகரிக்கக் கூடும் என ஐ.நா. வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இது குறித்து ஐ.நா. வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளதாவது,

2013 ஆம் ஆண்டில் உலக மக்கள் தொகை 5.9 பில்லியன் என்ற அளவில் உள்ளது. அவை எதிர்வரும் 2025 ஆம் ஆண்டளவில் 8.1 பில்லியனாகவும் 2050 ஆம் ஆண்டளவில் 9.6 பில்லியனாகவும் அதிகரிக்கக் கூடும்

இந்த மக்கள் தொகை அதிகரிப்பு வளர்ச்சியடைந்த நாடுகளை காட்டிலும் வளர்ந்து வரும் நாடுகளான ஆபிரிக்க கண்டத்திலுள்ள நாடுகள் மற்றும் ஆசிய நாடுகளான இந்தியா, இந்தோனேஷியா, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளில் மக்கள் தொகை வளர்ச்சி அதிகரிப்பு இருக்கக் கூடும் என தெரிவித்துள்ளது. (அ-2)

# இரசாயன தொழிற்சாலையில் விபத்து!
## ஒருவர் பலி; 30 பேர் காயம்



அமெரிக்க இரசாயன தொழிற்சாலையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் ஒருவர் பலியானதுடன் 30 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

அமெரிக்க லூசியானா மாகாண பேடன் ரூஜ் என்னுமிடத்தில் இரசாயன தொழிறசாலை ஒன்று நேற்றுமுன்தினம் வெடித்து சிதறியது.

எத்திலீன், புரோபீலின் எரிவாயுக்கள் உற்பத்தியாகும் இந்த தொழிற்சாலையில் உடனே புகை மூட்டத்துடன் பல மீற்றர் உயரத்திற்கு தீபிடித்து எரிந்தது, இதில் ஒருவர் உயிரிழந்ததுடன், 30இற்கும் மேறபட்டோர் தீக்காயங்களுடன் உடனடியாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவ இடத்திற்கு வந்த மீட்புக்குழுவினர் காற்றில் எரிவாயுக்கள் கலக்காதவாறு உடனே ஏனைய எரிவாயுக்குழாய்களை மூடினர். தீ ஏனைய பகுதிகளுக்கு பரவாதவாறும் அணைத்தனர். (அ-2)

# பிரிட்டன்-கனடா இடையே ஒப்பந்தங்கள் கைச்சாத்து

ஐரோப்பிய நாடுகளுக்கான விஜயத்தை மேற்கொண்டிருக்கும் கனேடிய



பிரதமர் ஸ்டீபன் ஹார்ப்பர், பிரித்தானியா சென்றுள்ளார்.

பிரித்தானிய பிரதமர் கமரூனுடன் நேற்று முன்தினம் அவர் முக்கிய பேச்சுவார்த்தைகள் நடத்தியுள ளார்.

இதன்போது இருநாடுகளுக்குமிடையான தொழில் முறை ஒப்பந்தங்கள் குறித்து விரிவாக பேசப்பட்டன.

ஸ்டீபன் ஹார்ப்பர் லண்டனில் செய்தியாளர்களிடையே பேசியபோது,

பிரித்தானியாவுடன் செய்து கொண்ட தொழில்முறை ஒப்பந்தத்தால் இரு நாடுகளும் தொழிற்றுறையில் பெரும் முன்னேற்றம் அடையும் நிலை உள்ளது. இரு நாடுகளின் தொழில் வளர்ச்சிக்கு இந்த ஒப்பந்தங்கள் பெரிதும் உதவும் என தான் நம்புவதாக கூறினார்.

பின்னர் கமரூன் கனேடிய பிரதமருக்கு மதிய விருந்து அளித்து கௌரவப்படுத்



தினார்.

விருந்து முடிந்த பின் மரியாதை நிமித்தமாக பிரிடிஷ் மகாராணி எலிசபெத் கனேடியப் பிரதமரைச் சந்தித்தார். (அ-2)

# இந்தியாவின் பாதுகாப்புக்கு பாதிப்பை ஏற்படுத்தோம்-இஸ்ரேல்

இந்தியாவின் பாதுகாப்புக்கு பாதிப்பை ஏற்படுத்தும் எந்தவொரு செயலிலும் ஈடுபட மாட்டோம் என்று இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானுக்கு இராணுவ சாதனங்களை ஏற்றுமதி செய்ததாக வெளியான தகவலை மறுத்துள்ள இஸ்ரேல், தான் தொடர்ந்து இந்தியாவுடனான உறவுகளை மேம்படுத்த முக்கியத்துவம் அளித்து வருவதாகக் கூறியுள்ளது.

பிரிட்டனிடமிருந்து இராணுவ சாதனங்களுக்கான உதிரிப்பாகங்களைப் பெற்று பிற நாடுகளுக்கு இஸ்ரேல் ஏற்றுமதி செய்து வருகிறது.

இதற்கு பிரிட்டனிடம் இஸ்ரேல் அனுமதி பெறவேண்டும். கடந்த 2010ஆம் ஆண்டு பாகிஸ்தானுக்கு ரேடார், இராணுவ தளபாடங்களில் பொருததப்படும் மின்னணு சாதனங்கள் உள்ளிட்டவற்றை ஏற்றுமதி செய்ய இஸ்ரேல் அனுமதி கோரியது தொடர்பாக பிரிட்டன அரசின் அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில், பாகிஸ்தானுக்கும், 4 அரபு நாடுகளுக்கும் இஸ்ரேல் இராணுவ சாதனங்களை ஏற்றுமதி செய்துள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

**இந்தியா அதிருப்தி**

இஸ்ரேலிடமிருந்து பெருமளவில்இந்தியா ஆயுதங் களை கொள்முதல் செய்துவருகிறது. கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு தனது மொத்த இராணுவ தளபாடக் கொள்முதலில் 50 சதவீதத்தை இஸ்ரேலிடமிருந்துதான் இந்தியா பெற்றது.

இந்நிலையில், பாகிஸ்தானுக்கும் இஸ்ரேல் இராணுவ சாதனங்களை ஏற்றுமதி செய்துள்ளது இந்தியாவுக்கு அதிருப்தியை அளித்துள்ளது.

**இஸ்ரேல் மறுப்பு**

இதையடுத்து பாகிஸ்தானுக்கு இராணுவ சாதனங்களை ஏற்றுமதி செய்ததாக வெளியான தகவலை இஸ்ரேல் மறுத்துள்ளது.

இது தொடர்பாக இஸ்ரேல பாதுகாப்புத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

இந்தியாவுடன் நீண்ட காலமாக இஸ்ரேல் நல்லுறவை பேணி வருகிறது.

இஸ்ரேலைப் போலவே, பயங்கரவாதத்தை எதிர் கொண்டு வரும் ஜனநாயக நாடு என்பதால், இந்தியாவை எங்களின் கூட்டாளியாக கருதுகிறோம்.

இந்தியாவின் பாதுகாப்புக்கு குந்தகம் விளைவிக்கும் எந்தவொரு செயலிலும் இஸ்ரேல் ஈடுபடாது. பாகிஸ்தானுக்கு இராணுவ சாதனங்கள் எதையும் இஸ்ரேல் ஏற்றுமதி செய்யவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

## பாகிஸ்தானின் முதல் பெண் விமானி

பாகிஸ்தான் விமானப் படையில் விமானியாக 19 பெண்கள் பயிற்சி பெற்று வந்தனர. இவர்களுக்கான விமானியாகும் தேர்வு நடைபெற்றது. இதில் ஆயிஷா பாரூக் என்ற (வயது26) என்ற பெண விமானியாக தெரிவானார்.

ஆயிஷா பாகிஸ்தான் பஞ்சாப் மாகாணம் பாகல் பூரை சேர்ந்தவர். ஆயிஷா பாகிஸ்தான் விமானப் படையின் முதல் பெண் விமானியாக தேர்ந்து எடுக்கப்பட்டுள்ளார். இவர் [illegible] கோடா [illegible] விமானப் படைப பிரிவில் பணிபுரிந்து வருகிறார். (அ-2)

# நேபாளத்தில் தேர்தல்

நேபாளத்தில் புதிய அரசியல நிர்ணய சபைக்கான தேர்தல் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறும் என அநநாட்டு இடைக்கால அரசு அறிவித்துள்ளது.

காத்மாண்டுவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அந்நாட்டு அமைச்சரவைக் கூட்டத்தில் 491 உறுப்பினர்களைக் கொண்ட அரசியல் நிர்ணய சபைக்கு நவம்பர் மாதம் 19ஆம்திகதி தேர்தல் நடத்த வேணடும் என முடிவெடுக்கப்பட்டது.

அரசியல் கட்சிகள், அதிகாரிகள், ஊடகங்கள், பாதுகாப்புப படையினர் ஆகியோர் தேர்தல் வெற்றிகரமாக நடைபெற ஒத்துழைக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. அரசியலசட்டத்தை வடிவமைக்காமல், அரசியல் நிர்ணய சபை கலைக கப்பட்டதால்,நேபாளத்தில் சட்டச்சிக்கல் ஏற்பட்டது. இந்நிலையில் கடந்த 2012 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடைபெறவிருந்த தேர்தலும் நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினை விதைத்தவன் வினை அறுப்பான்;
தினை விதைத்தவன் தினை அறுப்பான்.
– தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வினை விதைக்கிறீர்கள் அறுத்து எடுப்பீர்கள்

தேவை ஏற்படும் சந்தர்ப்பங்களில் மாகாண சபைகளை இணைக்கும் அதிகாரத்தை; ஜனாதிபதியிடம் இருந்து அகற்றுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஜனாதிபதியிடம் இருக்கக்கூடிய எத்தனையோ அதிகாரங்களை அகற்ற வேண்டிய தேவை இருக்கின்ற போதிலும்,

மாகாண சபைகளை இணைக்கின்ற அதிகாரத்தை அவசரஅவசரமாக அகற்ற முற்படுவது, இந்த நாட்டின் ஆட்சியதிகாரம் எந்தளவு தூரம் தமிழ் மக்களுக்கு எதிராக வுள்ளது என்பதை வெளிப்படுத்தும்.

வடக்குக் கிழக்கு மாகாண சபைகளை இணைக்க வேண்டிய ஒரு தேவை ஏற்பட்டு விட்டால் – சர்வதேச அழுத்தம் அவ்வாறாக இருந்தால், அல்லது இந்த நாட்டில் என்றாவது ஒருநாள் இனசமத்துவத்தை நேசிக்கின்றவர் ஜனாதிபதி ஆகிவிட்டால்,

வடக்குக் கிழக்கு மாகாண சபைகள் இணைக் கப்பட்டு விடலாம் என்ற ஏக்கத்தின் காரணமாக, குறித்த அதிகாரத்தை ஜனாதிபதியிடம் இருந்து நீக்குவதற்கு திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சியை இல்லாதொழிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தால், ஆரோக்கியமான ஒரு செயற்பாடு நடந்துள்ளதாக நாம் ஆறுதல் அடைந்திருக்க முடியும்.

ஆனால், நடந்ததோ! தமிழ் மக்களுக்கு உதவும் வகையில், ஜனாதிபதியிடம் இருக்கக் கூடிய மாகாண சபைகளை இணைக்கும் அதிகாரத்தை நீக்கும் நடவடிக்கையாகும்.

மாகாண சபைகளை இணைக்கும் அதிகா ரத்தை ஜனாதிபதியிடம் இருந்து நீக்கிவிட்டால், வடக்கு கிழக்கு மாகாணங்களின் இணைப்பை தமிழ் மக்கள் பெற முடியாது போகும்.

இது, தமக்குப் பெரு வெற்றியென்று ஆட்சியாளர்கள் நினைக்கிறார்கள்.

இதற்கு அடுத்தபடியாக மாகாண சபைக்கு இருக்கக் கூடிய பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களைப் பறிப்பதற்கான நடவடிக்கையும் முன்னெடுக்கப்படுவது திண்ணம்.

பொலிஸ், காணி அதிகாரங்களைப் பறித்து விட்டால், மாகாண சபை நிர்வாகம் வெறுமையாகி விடும்.

அதன் பின் மாகாண சபையால் எந்தப் பிரயோசனமும் இருக்காது என்ற நினைப்பில் முயற்சிகளும் முன்னெடுப்புகளும் நடந்து கொண்டு இருக்கின்றன.

இப்படித்தான் பலரும் பலதையும் நினைத்து திட்டம் தீட்டிய கதைகளும் வரலாறுகளும் இந்த உலகில் ஏராளம். ஆனால் அவை வெற்றி பெற்றதாகச் சரித்திரம் இல்லை.

சீதையை மணம் புரியும் ஆசையால் இராவணன் தீட்டிய திட்டம்தான் இராவண குலத்தை அழித்தது.

முழுநாட்டையும் ஆள வேண்டும் என்ற சூழ்ச்சி தான் துரியோதனனின் துடையை அறுத்து கௌரவர் சேனையை அழித்தது.

நாம் தீட்டுகின்ற திட்டங்கள் எல்லாம் அப்படியே வெற்றிபெறும் என்று நினைத்தால் அதுதான் இந்த உலகின் முதற்தர, மடமைத் தனமாக இருக்கமுடியும்.

இப்போது ஆளும் வர்க்கம் தமிழ் இனத்திற்கு எதிரான தீர்மானங்களைத் தீட்டுகின்றது.

ஏதோ ஜனாதிபதியிடம் அதிகாரம் இருந்தால் தான் வடக்கும் கிழக்கும் இணையமுடியும் என்ற நினைப்பில், நாடகம் நடக்கிறது.

வடக்கு கிழக்கை இணைப்பதற்கு இதை விட வலுவான விடயங்களும் உண்டு என்பதை உணராமல் இருப்பதுதான் அறியாமை.

வினைவிதைப்பு நடக்கிறது. அறுக்காமல் விடவா முடியும்?

# விடுதலைப்புலி உறுப்பினரின் குற்ற ஒப்புதல் நிராகரிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் வன்னி மாவட்ட படைத்தளபதியும் சாள்ஸ் அன்ரனி சிறப்பு படைத்தள பதியுமான பிரிகேடியர் பால்ராஜ் உட்பட்ட விடுதலைப்புலி உறுப்பி னர்களோடு இணைந்து செயற்பட்டார் என்ற குற்றச்சாட்டில் கைதானவர் யாழ்.மேல் நீதிமன்றினால் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத் தில் இணைந்து அரச இராணுவத்தி னருக்கு எதிராக தாக்குதல் நடத்தினார் என்ற குற்றச்சாட்டில் கிளி நொச்சி அறிவியல் நகரைச் சேர்ந்த கணே சமூர்த்தி கமலமோகன் என்பவர் பயங் கரவாத தடைச்சட்டத்தின் கீழ் 2009 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இரா ணுவத்தினரால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட இவர் பூசா முகாளளளளளளளளளமில் தடுத்து வைக்கப்பட்டு கொழும்பு பிரதான நீதிமன்றில் இவருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டது.

இவர் மீது 1999 ஆம் ஆண்டு ஜன வரி மாதம் முதலாம் திகதியிலிருந்து 1999 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிவரையான காலப்பகுதியில் பாப்பு, செல்வம், தினேஸ், பால்ராஜ் உட்பட பல புலி உறுப்பினர்கள் இலங்கையரசிற்கு எதிராக செயற்பட்ட போது பொலிஸார்க்கு தகவல் வழங்கவில்லை. விடுதலைப் புலிகள் இயக்கத்தில் உறுப்பினராக இரு ந்து அரச இராணுவத்திற்கு எதிராக செயற் பட்டமை, ஆனையிறவு படை முகாமிற்கு 1992 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் 1992 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி வரையான காலப் பகுதிகளில் தாக்குதல் மேற்கொண்டமை என குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்ப ட்டிருந்தன.

குறித்த நபரால் உப பொலிஸ் அத் தியட்சகருக்கு வழங்கப்பட்டதாக கூறப் படும் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை ஒரு சான்றாக வைத்து வழக்கு தொட ரப்பட்டு 2012 ஆம் ஆம் ஆண்டு டிசம் பர் மாதம் 10 ஆம் திகதி சட்டமா அதி பரினால் குற்றப்பத்திரம் தாக்கல் செய் யப்பட்டது.

நீதிமன்றினால்விளக்கமறியலில்வைக் கப்பட்டு பின்னர், அவரால் வழங்கப்பட் டதாக கூறப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் நிராகரிக்கப்பட்டிருந்த நிலை யில் கடந்த 6 ஆம் திகதி குறித்த வழக்கு யாழ். மேல் நீதிமன்ற பிரதி ஆணை யாளர் எஸ். பரமராஜா முன்னிலை யில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதில் குறித்த நபருக்கு எதிராக வேறு குற்றம் ஒன்றும் இல்லாத காரணத்தி னால் அவர்நிரபராதிஎனகண்டுவிடுதலை செய்யப்பட்டார். (அ-4)

# விஸ்வ இந்து பரிஷத் அமைப்பின் பேரணிக்கு பொலிஸார் தடை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் தற்போது சுமுக மான நிலை காணப்படுகின்றது. அந்த நிலையை குழப்பும் என்பதனாலேயே தாம் நேற்று நடைபெறவிருந்த இந்து அமைப்பின் பேரணிக்கு அனுமதி வழங் கவில்லையென யாழ். பொலிஸ் நி லைய பொறுப்பதிகாரி சமன் சிகேரா தெரிவித்தார்.

இந்து ஆலயங்கள் மீது மேற் கொள்ளப்படும் தாக்குதல் சம்பவங் களினை கண்டித்து நேற்று யாழ். நகரின் கண்டனப் பேரணி ஒன்று ஏற்பாடு செய்யப்ப்ட்டிருந்தது.

இவ் பேரணிக்கான ஏற்பாட்டை விஸ்வ இந்து பரிஷத் அமைப்பு மேற்கொண் டிருந்தது. இப் பேரணிக்கு பொலிஸார் அனுமதி வழங்கியுள்ளனரா? என நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது யாழ். ஊடகவியலாளர்களினால் வினா எழுப்பப்பட்டது.

இதற்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணத்திலுள்ள இந்து ஆல யங்களில் எவ்வித திருட்டுக்களும் கொள் ளைச்சம்பவங்களும் இடம்பெறவில்லை.

மட்டக்களப்பில் உள்ள இந்து ஆல யங்களில் கொள்ளைச் சம்பவம் இடம் பெற்றால் மட்டக்களப்பில் போய் பேரணி செய்யுங்கள் அதற்கு நாம் தடை விதிக் கமாட்டோம். யாழ்ப்பாணத்தில் பேரணி செய்யாதீர்கள்.

யாழ்ப்பாணத்தில் தற்போது சுமுக மான நிலையேற்பட்டுள்ளது. அதனை குழப்பும் முயற்சிக்கு நாம் அனுமதி வழங்கமாட்டோம் என்றார் அவர்.

மேலும் கடந்த வருடம் அதற்கு முந்திய வருடங்களில் யாழ்ப்பாணத் திலுள்ள பெரும்பாலான ஆலயங்க ளில் தொடர்ச்சியான கொள்ளைச் சம்ப வங்கள், கோயில் வாகனங்களின் தலைப் பகுதி வெட்டிச் செல்லல், ஆலயத்தை அசுத்தமாக்கும் நாசகாரச் செயல்கள் என்பன இடம் பெற்றிருந்தன யாவரும் அறிந்ததே. இதனோடு சம்பந்தப்பட்ட ஒரு சில குற்றவாளிகளை பொலிஸார் கைது செய்தமையை யாழ். பொலிஸார் அறிந்ததே.

மேலும் நாட்டில் எந்தவொரு மாவட் டத்திலும் புத்த விகாரை சேதப்படுத்தப் பட்டால் அல்லது புத்தபிக்கு ஒருவர் தாக்கப்படதால் கொழும்பில் பேரணி இடம்பெறுவதும் தெரிந்ததே. (அ-4)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### எல்லோரிடமும் அன்பு கொள்க



முதலில் ஒன்றைக்கேளுங்கள். பின்பு புரிந்து கொள் ளுங்கள். பின் எல்லா சஞ்சலங்களையும் விட்டு புற ஆதிக்கம் எதுவும் அணுகாதபடி மனதை மூடி வையுங்கள். அப்போது உள்ளத்திற்குள் உண்மை என்னும் பிரகாசம் ஒளிர்வதை உணர்வீர்கள்.

பயமும் நிறைவேறாத ஆசைகளுமே எல்லாத் துன் பங்களுக்கும் காரணம். தனக்கு மரணமில்லை என்பதை அறியும்போது தான் இந்தப் பயவுணர்வு நம்மைவிட்டு அகலும்.

மனிதன் கைம்மாறு கிடைக்கும் இடத்தில் மட்டுமே அன்பு காட்டுகிறான். எல்லோரிடமும் அன்பு காட்டுவதே முறையானது.

ஆன்மீக நெறியில் பக்குவப்பட்ட மனிதர்கள் கைம்மாறு கருதாமல் அன்பை வெளிப்படுத்துவர். அவர்கள் கடவுளின் அருளைப்பெறும் தகுதியைப் பெறு கிறார்கள்.

பற்றற்ற மனப்பான்மையை நீங்கள் பெற்றுவிட்டால் உங்களை நன் மையோ, தீமையோ எதுவும் நெருங்கமுடியாது. சுயநலமே நன்மை, தீமை என்ற வேறுபாட்டை உருவாக்குகிறது.

## ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்



நீங்கள் எப்போதும் விழிப்புணர்வுடன் உங்களுக்குள் நடப்பதைப் பார்த்துக் கொண்டிருக்கும் ஒரு நிலையை அடையவேண்டும். பார்த்தல் (Seeing) என்பது நிகழும் போது எல்லாவிதமான துயரமும் மறைந்துவிடும். ஏனெனில் பார்ப்பதே சுதந்திரம். அதுவே விடுதலையை அளிக்கும். இதற்கு முயற்சியும் தேவையில்லை. நேர மும் தேவையில்லை. உங் கள் முன்னால் ஒரு பாம்பு இருந்தால் பயத்தினால் நடுங்குவீர்கள். அது பாம்பு அல்ல. ஒரு கயிறுதான் என்று பார்த்த அடுத்த நிமிடமே பயம் ஓடிவிடுகிறது. இதற்கு நேரம் தேவையில்லை. எந்த முயற்சியும் எடுக்கவில்லை. பார்க் கிறீர்கள். விடுதலையாகிவிடுகிறீர்கள். மனதிற்குள் நடக்கும் விடயங்களுக் கும் இதுவே பொருந்தும். என்ன நடக்கிறது என்பதை உண்மையாகவே பார்க்கமுடிந்தால் அது ஒரு காமம் நிறைந்த எண்ணம் அல்லது கொலை வெறியான எண்ணம் அல்லது ஏதேனும் ஒருவகையான எண்ணம் எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம். அதைப்பார்க்கும்போது ஆனந் தமும் சுதந்திரமும் மட்டுமேயிருக்கும். அங்கு என்ன உள்ளது என்பது முக்கியம் அல்ல. என்ன ஓடிக்கொண்டிருக்கிறது என்பதை உங்களால் பார்க்கமுடிகிறதா என்பது மட்டுமே முக்கியம். இது வெறும் பார்த்தல் மட்டுமே. ஆதலால் இதுவே மார்க்கம் என்றோ சரியான மார்க்கம் என்றோ நாங்கள் அழைப்பதில்லை. அதுபோன்ற வார்த்தைகளையே நாங்கள் உபயோகிப்ப தில்லை. இதனால்தான் நாங்கள் அடிக்கடி இங்கு மார்க்கமே இல்லை என்று கூறிவருகிறோம்.

## உலகின் மிக வயதான மனிதர் இலங்கையில்

உலகின் மிகவும் வயதான மனிதராக இலங்கையைச் சேர்ந்த மூதாட்டியை கின்னஸ் சாதனைப் பதிவேடு அறிவித் துள்ளது.


அப்புலாந்த உக்கு (வயது116) என்ற இந்த மூதாட்டி கேகாலை மாவட்டத்தில் உள்ள மாவனல்ல பிரதேசத்தில் புலத் கமுவ என்ற இடத்தில் வசித்து வரு கிறார். உலகின் வயதான மனிதராக அறிவிக்கப்பட்டிருந்த ஜப்பானைச் சேர்ந்த ஜிரோமோன் கிமுரா கடந்த 12ஆம் திகதி மரணமானதையடுத்தே இலங்கையை சேர்ந்த அப்புலாந்த உக்கு உலகின் மூத்த மனிதராக அறி விக்கப்பட்டுள்ளார்.

இவர் 1897ஆம் ஆண்டு ஓகஸ்ட் 22 ஆம் திகதி பிறந்தவர்.

இவருக்கு எட்டு பிள்ளைகளும் 80 இற்கும் அதிகமான பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் இருப்பதாக தெரிய வருகின்றது.

இவரையடுத்து உலகின் அடுத்த வயதான நபராக ஜப்பானின் மிசாகா ஒகாவா இருந்து வருகிறார். இவர் 1898 இல் பிறந்தவர் ஆவார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சம்பியன்ஸ் கிண்ணப்போட்டியில் இலங்கை - இங்கிலாந்துக்கு இடையேயான ஆட்டத்தில் திலகரட்ண டில்சான் பிடியொன்றை எடுக்கமுற்பட்டபோது அது கையிலிருந்து நழுவும் காட்சி.

**சம்பியன்ஸ் கிண்ணம்**
**இன்றைய ஆட்டம்**
**இந்தியா Vs பாகிஸ்தான்**

# 2018 உலகக் கிண்ண காற்பந்துப்போட்டிக்கு 13 பில்லியன் டொலர்

ரஷ்யாவில் முதல் முறையாக 2018ஆம் ஆண்டு உலகக் கிண்ணக் காற்பந்து தொடர் நடைபெற உள்ளது. ஜூன் 8ஆம் திகதி தொடங்கி ஒரு மாதம் போட்டிகள் நடைபெறுகின்றன. உலகம் முழுவதிலும் உள்ள 32 அணிகள் பங்கேற்று விளையாடும் இப்போட்டிக்காக 12 மைதானங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

இந்த போட்டிகளை சிறப்பாக நடத்த ஆர்வமாக உள்ள ரஷ்ய அரசு, அதற்கான நிதியை தாராளமாக வழங்க முன்வந்துள்ளது. உலகக் கிண்ணக் காற்பந்து போட்டிகளை நடத்துவதற்கு 20 பில்லியன் டொலர் செலவு செய்ய உள்ளதாக ரஷ்ய பிரதமர் டிமித்ரி மெத்வதேவ் தெரிவித்தார்.

இது 2010ஆம் ஆண்டு புடின் பிரதமராக இருந்தபோது செலவு செய்ய முன்வந்த தொகையைவிட (10 பில்லியன் டொலர்) இரு மடங்காகும். இதுதொடர்பாக மெத்வதேவ் அமைச்சரவையில் பேசுகையில், உலகக் கிண்ணக் காற்பந்து போட்டிக்காக வரும் பட்ஜெட்டில் 13 பில்லியன் டொலர்கள் ஒதுக்கப்படும் என்றார். மீதி தொகை எந்த வழியில் விடுவிக்கப்படும் என்று அவர் குறிப்பிடவில்லை.

இதேபோல், 2014ஆம் ஆண்டு ரஷ்யாவின் சோச்சி நகரில் நடைபெற உள்ள குளிர்கால ஒலிம்பிக் போட்டிக்காக அரசு 51 பில்லியன் டொலர் செலவு செய்யவுள்ளது குறிப்பிடத்தக்கது.

# வெற்றியை பகிர்கிறார் சங்கக்காரா....

கிரிக்கெட் அணியொன்றில் அனுபவம் தேவையான அதேவேளை, இளமைத் துடிப்புள்ள வீரர்களும் அவசியம் என இலங்கை அணியின் துடுப்பாட்ட வீரர் குமார் சங்கக்கார தெரிவித்துள்ளார். இங்கிலாந்து அணிக்கெதிரான போட்டியின் வெற்றி தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கிலாந்து அணிக்கெதிரான போட்டியில் சிறப்பான சதமொன்றைப் பெற்று போட்டியின் நாயகன் விருதைப் பெற்ற குமார் சங்கக்கார, அப்போட்டி தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கை அணி போட்டியின் ஆடுகளத்திற்கேற்றவாறு



சிறப்பாக விளையாடியதாக எண்ணுவதாகக் குறிப்பிட்ட சங்கக்கார, இலங்கை அணியின் வெற்றிக்கு அனுபவமும் காரணமாக அமைந்தது எனக் குறிப்பிட்டார்.

அணியொன்றின் வெற்றிக்கு அனுபவமும், இளமையும் முக்கியமானது எனக் குறிப்பிட்ட குமார் சங்கக்கார, போட்டியின் இங்கிலாந்து அணியின் ஜோ றூட் அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தியதை ஞாபகப்படுத்தினார்.

இலங்கை அணியில் மஹேல ஜெயவர்தன, திலகரட்ண டில்ஷான் ஆகியோரோடு தானும் அனுபவ வீரர்களாகக் காணப்பட்டதாகக் குறிப்பிட்ட குமார் சங்கக்கார, அத்தோடு நுவான் குலசேகரவின் சிறப்பான துடுப்பாட்டமும் அணிக்கு உதவியதாக அவர் தெரிவித்தார்.

# ஜூன் 23 ஐ.சி.சி.யின் ஆண்டுக் கூட்டம்

லண்டனில் எதிர்வரும் 23ஆம் திகதி முதல் ஆரம்பமாகும் சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் (ஐசிசி) வருடாந்தக் கூட்டத்தில் பிசிசிஐயின் இடைக்காலத் தலைவர் ஜக்மோகன் டால்மியா பங்கேற்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதுகுறித்து பிசிசிஐயின் மூத்த அதிகாரி ஒருவர் கருத்து வெளியிடுகையில்,

லண்டனில் நடைபெறவுள்ள ஐசிசி கூட்டத்தில் டால்மியா பங்கேற்கிறார். இதில் இப்போது எந்த மாற்றமும் இல்லை என்று தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் நடுவர் முடிவை மறுஆய்வு செய்யும் முறையானது, டெஸ்ட் போட்டி விளையாடும் அனைத்து அணிகளுக்கும் அமுல்படுத்தப்படுமா என்பது குறித்து முக்கியமான முடிவு எடுக்கப்படும். இந்த முறைக்கு பிசிசிஐயின் தலைவர் பதவியிலிருந்து தற்காலிகமாக விலகியுள்ள சீனிவாசன் எதிர்ப்பு தெரிவித்திருந்தார்..



# இந்திய அணிக்காக தவமிருந்தவர் தவான்

இந்திய அணியில் இடம் பெற வேண்டும் என்பதற்காக, நீண்ட காலம் தவமிருந்துள்ளார் ஷிகர் தவான். இந்த ஏமாற்றத்தில், கிரிக்கெட்டை விட்டு விலகும் முடிவில் இருந்தார், என, அவரது பயிற்சியாளர் தரக் சின்கா தெரிவித்தார்.

கடந்த மார்ச்சில், அவுஸ்திரேலியாவுக்கு எதிரான மொகாலி டெஸ்டில், இந்திய வீரர் ஷிகர் தவான் 187 ஓட்டங்களை விளாசினார். இதன் பின் காயம் காரணமாக ஓய்வில் இருந்தார். தற்போது, சம்பியன்ஸ் கிண்ண தொடரில் தென்னாபிரிக்கா (114), மேற்கிந்தியத்தீவு (102) அணிகளுக்கு எதிராக அடுத்தடுத்த போட்டிகளில் சதம் விளாசினார்.

சர்வதேச கிரிக்கெட்டில் 'ஹட்ரிக்' சதம் அடித்தது குறித்து, இந்திய அணியின் முன்னாள் தலைவர் கபில்தேவ், உள்ளிட்ட பலர் பாராட்டு தெரிவித்து வருகின்றனர். இதனிடையே, 12வயதில் இருந்து ஷிகர் தவானுக்கு பயிற்சியாளராக இருந்து வரும் தரக் சின்கா கூறுகையில்,

ஒவ்வொரு முறையும் இந்திய அணிக்காக தேர்வு பெறாதபோது ஏமாற்றம் அடைந்தார் தவான். இவரது 'ஜூனியர்' விராத் கோஹ்லி, ஷிகர் தவானுக்கு முன்பாக இந்திய அணியில் இடம் பெற்றபோது, அதிகம் வருத்தம் அடைந்தார். 'நான் போதுமான அளவு விளையாடியபோதும், ஏன் என்னை தேர்வு செய்ய மறுக்கின்றனர்' என்று என்னிடம் கேட்டு புலம்புவார்.

அடுத்தடுத்த அணித் தேர்வுகளில் புறக்கணிக்கப்பட்ட போது, ஒருநிலையில் வெறுத்துப் போனார் தவான். மற்றொரு முறை இப்படி நடந்தால், கிரிக்கெட்டை விட்டே விலகும் முடிவில் இருந்தார். இவரது மனதை மாற்றுவது கடினமாக இருந்தது. 'உனது திறமை என்றும் வீணாகாது' என்று உறுதி கொடுத்தேன்.

இப்போது 'ஹட்ரிக்' சதம் அடித்தது மகிழ்ச்சியாக உள்ளது. இதற்காக தவான் கடினமாக பாடுபட்டார். இப்போதைய ஒவ்வொரு வெற்றிக்கும், தவான் தகுதியானவர்.

துடுப்பாட்டம் செய்யும்போது கால்களை முன்னும் பின்னும் நகர்த்தி, சூழ்நிலைக்கேற்ப அதிகபடியான அனுபவத்தை வெளிப்படுத்துகிறார். தனது விக்கெட்டின் முக்கியத்துவத்தை உணர்ந்துள்ளார்.

பந்துகளை துணிச்சலாக சந்திக்கும் தவானின் குணம் தான், சமீபத்திய வெற்றிக்கு காரணம். தவிர, நீண்டநாள் காத்திருத்தலுக்குப் பின் அணியில் இடம் பெற்றதால், ஒவ்வொரு போட்டியிலும் அர்ப்பணிப்பு உணர்வுடன் விளையாடுகிறார் என்றார் தரக் சின்கா.

# உலக சம்பியன்ஸ் போட்டிதான் எனது இலக்கு

உலக சம்பியன்ஷிப் போட்டியில் வெற்றி பெறுவதே எனது இலக்கு என்று உலகின் அதிவேக ஓட்டப் பந்தய வீரர் என அழைக்கப்படும் ஜமைக்காவின் உசைன் போல்ட் தெரிவித்துள்ளார்.

உலக சம்பியன்ஷிப் தடகளப் போட்டி வரும் ஓகஸ்ட் மாதம் 10ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரை ரஷ்யாவில் நடைபெறவுள்ளது. இப்போட்டியில் சாதனைகள் புரிய பல வீரர்கள் கடும் பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இப்போட்டியில் கலந்து கொள்ளும் போல்ட், "100 மற்றும் 200 மீற்றர் ஓட்டப் பந்தய போட்டியில் வெற்றி பெறுவதே இலக்கு அதற்காக கடும் பயிற்சி மேற்




கொண்டு வருகிறேன் என்று தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் ரோமில் நடைபெற்ற 100 மீற்றர் ஓட்டப் பந்தயத்தில் அமெரிக்காவின் ஜஸ்டின் கட்லினிடம் தோல்வியைத் தழுவினார். இது போல்டின் ரசிகர்களுக்கு பெரும் ஏமாற்றத்தை அளித்தது. ஆனால், இது தனக்கு பின்னடைவை ஏற்படுத்தாது என்று போல்ட் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

2011ஆம் ஆண்டு தென் கொரியாவில் உலக சம்பியன்ஷிப்பில் இறுதிப்போட்டியில் செய்த தவறினால் அவர் போட்டியிலிருந்து தகுதி நீக்கம் செய்யப்பட்டார். அதனால் இம்முறை உலக தடகளப் போட்டியில் பட்டம் வெல்ல ஆவலுடன் இருக்கிறார் போல்ட். அமெரிக்காவின் கட்லின், டைசன் கய், ஜமைக்காவின் யோான் ப்ளேக் உள்ளிட்டோரும் இப்போட்டியில் கலந்து கொள்கின்றனர். அதனால் போல்டுக்கு இப்போட்டி கடும் சவாலாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அரையிறுதியில் தென்னாபிரிக்கா



தென்னாபிரிக்கா மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையில் அரையிறுதியைத் தீர்மானிக்கும் முக்கிய போட்டி மழை காரணமாக டக்வேர்த் லூவிஸ் முறைப்படி சமனிலையானது.

எனினும் நிகர ஓட்ட சராசரியின் அடிப்படையில் தென்னாபிரிக்க அணி அரையிறுதிக்கான வாய்ப்பை எட்டிப் பிடித்தது.

இங்கிலாந்தில் நடைபெற்று வரும் சம்பியன்ஸ் தொடரின் 9-வது லீக் போட்டி கார்டிவ்வில் நேற்று நடைபெற்றது.

இதில் பி பிரிவைச் சேர்ந்த தென்னாபிரிக்க அணி, மேற்கிந்தியத் தீவுகள் அணியைச் சந்தித்தது.

ஆட்டம் மழை காரணமாக தாமதமானதால் போட்டி 31 ஓவர்களைக் கொண்ட போட்டியாக மாற்றப்பட்டது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணித் தலைவர் பிராவோ முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தார்.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி, வீரர்களின் சிறந்த பங்களிப்பினால் 31 ஓவர்களின் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 230 ஓட்டங்களை எடுத்தது.

துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பாக ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் கொலின் இங்ரம் 63 பந்துகளில் 73, டேவிட் மில்லர் 38, ஏபி டி வில்லியர்ஸ் 37, டூ பிளெசீஸ் 35 ஓட்டங்களை எடுத்தனர்.

பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக டுவைன் பிராவோ 43 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

டக் வேத் லூவிஸ் முறைப்படி மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு வெற்றியிலக்காக 26.1 ஓவரில் 191 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டது.

எனினும் அவ் அணி, 26.1 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 190 ஓட்டங்களையே எடுத்தது.

இதனால் ஆட்டம்சமனிலையில் முடிபடைந்ததாக அறிவிக்கப்பட்டது.


துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பாக மார்லன் சாமுவேல்ஸ் 36 பந்துகளில் 6 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக 48 ஓட்டங்களையும், கிறிஸ் ஹெயில் 27 பந்துகளில் 5 பவுண்டரிகள் ஒரு சிக்ஸர் அடங்கலாக 36 ஓட்டங்களையும் எடுத்தனர்.


பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பாக டேல் ஸ்ரெய்ன் 6 ஓவர்களில் 36 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

போட்டியின் சிறப்பாட்டக்காரராக சிறப்பாக ஆடி தென்னாபிரிக்காவின் ஓட்டக் குவிப்புக்கு காரணமாக இருந்த கொலின் இங்ரம் தெரிவானார்.

ஆட்டம் சமனிலையானதன காரணமாக இரு அணிகளும் தலா ஒவ்வொரு புள்ளிகளைப் பகிர்ந்து கொண்டன.

இருப்பினும் தென்னா பிரிக்க அணி நிகர ஓட்ட சராசரியின் அடிப்படையில் மேற்கிந்தியத் தீவுகளை பின்தள்ளி





அரையிறுதிக்கான வாய்ப்பை எட்டிப் பிடித்தது.

## இந்தோனேசிய ஓபன் பட்மிண்டன்;
# அரையிறுதியில் சாய்னா




இந்தோனேசிய ஓபன் பாட்மிண்டன் தொடரில், நடப்பு சாம்பியனான இந்தியாவின் நட்சத்திர வீராங்கனை சாய்னா நேவால் இந்த முறையும் பட்டம் வெல்லும் முனைப்புடன் முன்னேறி வருகிறார்.

ஜப்பான் வீராங்கனை சயாகா டகாஹசியை வீழ்த்தி காலிறுதியை உறுதி செய்த சாய்னா, நேற்று நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில், ஸ்பெயின் வீராங்கனை கரோலினா மரினை எதிர்கொண்டார். துவக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய சாய்னா, 21-16, 21-19 என்ற நேர்செட்களில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றார்.

உலகின் 2-ம் தரநிலை வீராங்கனையான சாய்னா 2009இ 2010 மற்றும் 2012 ஆகிய ஆண்டுகளில் இந்தோனேசிய ஓபனில் சாம்பியன் பட்டம் வென்றார்.

2011-ம் ஆண்டு இறுதி வரை முன்னேறினார். அரையிறுதியில் ஜெர்மன் வீராங்கனை ஜுலியன் செங்கை சாய்னா எதிர்கொள்கிறார். இருவரும் 11 முறை நேருக்கு நேர் மோதியுள்ளனர்.

அதில் 5 முறை வெற்றி பெற்றுள்ள சாய்னா, கடைசியாக 3 முறை தோல்வியடைந்துள்ளார். மகளிர் பிரிவில் சாய்னா முன்னேறிய நிலையில், ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் அஜய் ஜெயராம், குருசாய்தத் ஆகியோர் காலிறுதியில் தோல்வியடைந்து வெளியேறினர்.



கராத்தே போட்டியில் கைதடி நலீஸ்ட் செவிப்புலன் விழிப்புலன் இழந்தோர் பாடசாலை மாணவர்கள் தங்கம், வெள்ளி, வெண்கலம் ஆகிய பதக்கங்களைப் பெற்று தேசிய மட்ட கராத்தே போட்டியில் தெரிவாகியுள்ளனர். இவர்களை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றபோது...

## டுவிட்டரில்...

ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ டுவிட்டர் முகவரியான @Presrajapaksa ஊடாக இந்தப் பதில்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

பொது மக்கள் தங்களது கேள்விகளை #AskLW அனுப்பி வைக்குமாறு கேட்கப் பட்டுள்ளனர். (செ-11)

## பிரதி அமைச்சர்...

உத்தியோகபூர்வமாக மக்களிடம் கையளிக்கவுள்ளார். இதற்கான முன்னோடியாகவே பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் பிரதி அமைச்சரின் விஜயம் அமைந்திருந்தது.

இதேவேளை நேற்றைய தினம் யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்த பிரதி அமைச்சர் பல இடங்களுக்கும் விஜயம் மேற்கொண்டு யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட வீதி அபிவிருத்திப் பணிகளையும் பார்வையிட்டார். (செ-6)

## 3 மாகாணங்களுக்...

தலைமையில் அலரி மாளிகையில இந்த கூட்டம் நடைபெற்றுள்ளது.

இந்தத் தேர்தல்களுக்கான பிரசாரங்களை மேற்கொள்ள மூன்று குழுக்கள் அமைக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு அமைச்சர் தலைவராக நியமிக்கப்படவுள்ளார்.

முக்கிய அமைச்சர்களான சுசில் பிரேமஜயந்த, மைத்திரிபால சிறிசேன மற்றும் நிமால் சிறிபால டி சில்வா ஆகியோர் இந்தக் குழுக்களை வழிநடத்துவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

வடக்கு மாகாண சபைத் தேர்தலை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடத்த அரசாங்கம் ஆயத்தப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தகது. (செ-11)

## ஜெயசூரிய...

ஜெயசூரிய, எதிர்வரும் ஓகஸ்ட் முதலாம் திகதி முதல் பாதுகாப்பு படைகளின் பிரதானியாக நியமிக்கப்பட வுள் ளார் என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

தற்போதைய பாதுகாப்பு படைகளின் பிரதானியான எயார் சீப் மார்ஷல் ரொசான் குணதிலக்க, ஓய்வுபெறவுள்ள நிலையிலேயே ஜெனரல் ஜகத் ஜயசூரிய மேற்கண்ட பதவிக்கு நியமிக்கப்பட்டுள் ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் இராணுவ தளபதி லெப்டினனட் ஜெனரல் ஜகத் ஜெயசூரிய "ஜெனரல்"ஆக பதவி உயர்த்தப்பட்டுள்ளார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் அவருக்கு இந்த பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

இந்த பதவி உயர்வானது இம்மாதம் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதவியை துற...

தெரிவிக்கின்றேன். 13ஆவது திருத்தம் தொடர்பில் கைவைப்பதற்கு எவ்விதத்திலும் நாம் இடமளியோம்.

இந்நிலையில் தமிழ் மக்களுக்கு மாகாண சபை முறைமை கொடுக்கப்பட்டால் ஈழம் உருவாகுமென பேசுபவர்கள் தற்போது தங்களை மாகாண சபைகளின் ஆட்சியை தீர்மானிக்கும் ரிமோட் கொண்ட்றோல் என சொல்லுகின்றனர். மாகாண சபை முறைமையின் கீழ் தமது வாழ்வாதாரத்தையும் அதன் சுகபோகத்தையும் அனுபவிப்பவர்கள் அதனை தமிழ் மக்களுக்கு வழங்கும்போது அகற்கு எதிராகக் கூக்குரல் இடுவதேன்?

இவ்வாறு பிரிவினைவாதம் பேசும் சிங்கள இனவாதிகளால் தான் தமிழ் இனவாதிகள் தோற்றம் பெற்றனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

அமைச்சர்களான ரவூப் ஹக்கீம், டியூ குணசேகர, வாசுதேவ நாணயக்கார , திஸ்ஸ விதாரண , ராஜித சேனாரத்ன போன்றோர் அரசாங்கத்துடன் இணைந்துள்ள நிலையிலும் 13ம் திருத்தச் சட்ட திருத்தத்தை மாற்றி இருக்கின்ற சொற்ப அதிகாரங்களையும் குறைப்பதற்கு தமது கடும் எதிர்ப்பை தெரிவித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)


வங்கியியல் கற்கை நெறி
தனிப்பட்ட முறையில் கற்பிக்கப்படும்.
CBF
(3042)
T.P-0773586563

"நீங்களும் சிறந்த முதலீட்டாளராகலாம்"
பங்குச்சந்தை முதலீட்டாளர்களுக்கான
2ம் நிலைப் பயிற்சிப் பட்டறை
(நிதிக்கூற்றுக்களின் பகுப்பாய்வு FSA)
எதிர்வரும் 22.06.2013 சனிக்கிழமை முதல் வார இறுதி நாட்களில்
(மாலை 3.00 – 6.00)
இடம்: பங்குப்பரிவர்த்தனை கேட்போர் கூடத்தில்
பதிவுகளுக்கு: 0777 822 014 & www.cse.lk
(C-3645)

இலவச இணையக் கற்கை நெறி நிறுவகம்
SERVE e- Learning Institute
T.P:021 225 6206 பதிவு எண்:1100
கற்கைநெறி:-
இலவச Diploma In Information Communication Technology (ICT)
(4 மாதங்கள்)
தகைமைகள்:
* க.பொ.த(உ/த) பரீட்சைக்கு தோற்றி பல்கலைக்கழக அனுமதியை எதிர் நோக்குவோர்.
* க.பொ.த(உ/த) பரீட்சையில் சித்தியடைந்து வேலை தேடுவோர் or வேறு தொழில் பயிற்சிகளை மேற்கொள்வோர்.
* க.பொ.த(சா/த) பரீட்சைக்குத் தோற்றியோர்.
பாடங்கள்:
தகவல் தொழில்நுட்பம் (ICT)
ஆங்கிலம் (English)
தட்டச்சுப் பயிற்சி (Computer Typing)
விண்ணப்ப முடிவு திகதி: 25.06.2013
மேலதிக விபரங்களுக்கு
No.66, கட்டைப்பாலி ஒழுங்கை,
ஆனைக்கோட்டை. தொலைபேசி:0212256209
மேலதிக விபரங்களுக்கு நேரில் வரவும்
பதிவாளர்
SERVE e-Learning Institute
(சி-3625)


# சிற்றூழியர் பதவிக்கான நியமனம் வழங்கப்பட்டது



(யாழ்ப்பாணம்)

வடக்கில் அரச திணைக்களங்களில் பணியாற்றுவதற்கான 432 பேருக்கு சிற்றூழியர் பதவிக்கான நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இவ் நியமனம் வழங்கப்பட்ட நிகழ்வு நேற்று பி.ப 4.00 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

இவ் நியமனங்களினை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வட மாகாண ஆளுனர் ஜி.ஏ சந்திரசிறி மற்றும் ஈ.பி.டி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர்கள், பிரதம செயலாளர், யாழ்.மாநகர சபை உறுப்பினர்கள் உட்பட பலர் வழங்கி வைத்தனர்.

வடக்கு மாகாண கல்வி சுகாதார, விவசாய, சிற்றூழியர்களிற்கான நியமனங்கள் நேற்று வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(செ-4)

## ஜனாதிபதி...

சனிக்கிழமை உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்படவுள்ளது.

அத்துடன் இவ் விஜயத்தின் போது ஜனாதிபதி புனரமைக்கப்பட்ட ஏ9 வீதியை சம்பிரதாயபூர்வமாக திறந்து வைக்கவுள்ளார்.

இதனிடையே கிளிநொச்சியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மக்கள் வங்கி கிளையையும் ஜனாதிபதி திறந்து வைக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## ராஜிதவுக்கு...

தொலைபேசியில் அழைத்து எனது பாராட்டுகளை தெரிவித்தேன்.

நானும் அவரும் மிக நீண்ட கால நண்பர்கள். லண்டனில் இருந்த சந்திரிகா குமாரதுங்கவை அவர் இலங்கைக்கு அழைத்து வந்து அரசியலில் ஈடுபட வைத்த காலத்தில் இருந்து எனக்கு அவருடன் நட்பு உண்டு. ஆகவே அவரது இந்த நிலைப்பாடு எனக்கு ஆச்சரியத்தை அளிக்கவில்லை. இலங்கை-இந்திய ஒப்பந்தம் வந்த காலத்திலேயே மாகாணசபைகளை ஆதரித்து, அதனால் வன்முறையை எதிர்கொண்டவர் அவர்.

கடந்த காலங்களைப்போல் இன்றும் 13ஐப் காப்பாற்ற தான் எந்த ஒரு சூழலுக்கும் முகம் கொடுக்கத் தயார் என அவர் எனக்கு சொன்னார். ஆனால், அரசாங்கத்துக்கு உள்ளே தனது நிலைப்பாட்டை பகிரங்கமாக ஆதரிக்க எந்த ஒரு தமிழ் அரசியல் வாதியும் தயாராக இல்லை என்ற தனது மன வருத்தத்தையும் அவர் எனக்கு தெரிவித்தார். சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமும், இடதுசாரி அமைசசர்களும் இதுபற்றி திடமான கருத்துகளை தெரி விப்பதாகவும், ஆனால் தமிழ் அமைச்சர்களும், எம்.பிக்களும் இது தொடர்பாக பகிரங்க நிலைப்பாடுகளை எடுக்க இன்னமும் தயார் இல்லை எனவும் எனக்கு அவர் சொன்னார். (செ-11)


விற்பனையாளர் தேவை
சுழிபுரம் பகுதியில் பணியாற்ற விற்பனையாளர்தேவை
(கணனி அறிவு விரும்பத்தக்கது).
தொடர்புகளுக்கு-0776176523
(3088)

வீடு விற்பனைக்கு
வெங்கடேசா வீதி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள புதிய வீடு 1 1/2 பரப்பு விற்பனைக்குண்டு.
தொடர்பு-0757100884
(3044)

வேலையாட்கள் தேவை
பேக்கரி வேலையில் முன் அனுபவம் உள்ள வேலை ஆட்கள் தேவை.
உணவு, தங்குமிட வசதி வழங்கப்படும்
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
0770744855 (ரவி கடை)
289, கரும்புள்ளியான்,
பாண்டியன் குளம். (சி-3264)

நியாய விலையில்
உயர்தொழில் நுட்பத்திலான நவீனமுறை
அச்சுப் பதிப்பகம்

பருவகால மலர்கள்,
நினைவுமலர்கள்
சஞ்சிகைகள்,
போஸ்டல்கள்,
லேட்டபாட்,
பில்புத்தகங்கள்,
லேபல்கள், சன்றிதழ்,
அழைப்பிதழ்,
கவர், ஸ்ரிக்கர் பிறிண்ட்,
டிஜிற்றல் முறையில் கலர் பிறிண்டிங்
ஆட் பேப்பர், ஆட் போட், கொங்கொங் போட் பிறிண்ட்
யாழில்
M கொழும்பு பிறிண்டேர்ஸ்
666 (யாழ் இந்துக்கல்லூரி அருகில்)
0771974875
(3644)

FRENCH LANGUAGE CENTRE
CENTRE FOR FRENCH
FRENCH CLASSES
France, Canada, Swiss, Belgium செல்வோர், ஆர்வமுள்ளோர் French கற்று International Certificates இனை பெற்றுக் கொள்ளலாம்...
ஆசிரியர் : Mr. V. Jegan (Teaching Training in France - 2007, University இல் பகுதி நேர French விரிவுரைகளை மேற் கொள்பவரும்)
இது வரைக்கும் 710 க்கும் மேற்பட்டோர் French கற்றுள்ளனர்...
ஆரம்பம் : 22.06.13 Sat at 2pm. No. 23, Palaly Road, ஆரியகுளம். (அப்பலோ Hospital க்கு அண்மையில்).
: 24.06.13 Mon at 11am. No. 181, 1st Floor, Main Street, Nelliady. (சோதி வீதி முன்பாக)
0779 789 456
English, Deutsch, Italian, & Sinhala வகுப்புக்களும்...
(சி-3575)

80 வயதில் ஆனந்தசங்கரி!

தன்னலம் கருதாத துணிச்சல் மிக்க அரசியல் தலைவரும், யுனெஸ்கோவினால் பாராட்டப்பட்டு, விருது பெற்றவருமான எமது கட்சியின் செயலாளர் நாயகமுமான திரு .வீ.ஆனந்தசங்கரி அவர்களின் 80-வது பிறந்த தினத்தில் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.
நாச்சிமார் கோவிலடி,
இல.1077, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே.இல.0212223631
- தமிழர் விடுதலைக் கூட்டணி
(3047)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.06.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.